# சிவகங்கை மாவட்டம்

## தொல்லியல் கையேடு



பதிப்பாசிரியர்
முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்
**ரா. நாராயணன்**
உதவி செயற்பொறியாளர்

தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை
சென்னை - 600 008
2011-திருவள்ளுவர் ஆண்டு 2042

# சிவகங்கை மாவட்டம்

(தொல்லியல் கையேடு)

பதிப்பாசிரியர்

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

**ரா. நாராயணன்**

உதவி செயற்பொறியாளர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008

2011, திருவள்ளுவர் ஆண்டு - 2042

# அச்சிட்டோர் விவரம்


| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2011 |
| வெளியீடு எண் | : | 228 |
| நூலின் பெயர் | : | சிவகங்கை மாவட்டத் தொல்லியல் கையேடு |
| பதிப்புரிமை | : | தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை |
| பதிப்பாசிரியர் | : | தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.,<br>முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் |
| ஆசிரியர் | : | ரா. நாராயணன்<br>உதவி செயற்பொறியாளர் |
| மொழி | : | தமிழ் |
| எழுத்தின் அளவு | : | 12 புள்ளிகள் |
| தாள் அளவு | : | 80 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | 122 |
| விலை | : | ரூ. 36.00 |
| அச்சிட்டோர் | : | தரமணி மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கம்,<br>46, பீட்டர்ஸ் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-600 014. |


முன்அட்டை: சிவகங்கை அரண்மனை

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பதிப்புரை | | (v) |
| முன்னுரை | | (viii) |
| 1. சிவகங்கை வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள் | ... | 1 |
| 2. இளையாங்குடி வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள் | ... | 21 |
| 3. தேவகோட்டை வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள் | ... | 27 |
| 4. திருப்புத்தூர் வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள் | ... | 31 |
| 5. காரைக்குடி வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள் | ... | 68 |
| 6. மானாமதுரை வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள் | ... | 80 |
| பிற்சேர்க்கை | | |
| கல்வெட்டில் உள்ள ஊர் பெயர் மாறிய விதம் | ... | 93 |
| சிவகங்கை மாவட்ட வரலாற்று நிகழ்வுகள் | ... | 95 |
| துணைநின்ற நூல்கள் | ... | 104 |

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

## அணிந்துரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் தொல்லியல் வரலாற்றை அனைவரும் அறியும் வகையில் மாவட்டத் தொல்லியல் கையேடுகளாக வெளியிட்டு வருகின்றது. இவற்றின் மூலம் அந்தந்த மாவட்டங்களின் வரலாறு மற்றும் தொல்லியல் சிறப்புக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அத்தகைய ஒரு வெளியீடாக சிவகங்கை மாவட்ட தொல்லியல் கையேடு வெளியிடப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இக்கையேட்டில் சிவகங்கை மாவட்டத்தின் தற்போதைய ஊர்களின் பெயர்கள், பண்டைய காலத்தில் கல்வெட்டுகளில் எவ்வாறு வழங்கப்பட்டது என்றும், இம்மாவட்டத்தின் வரலாற்று நிகழ்வுகள் கால வரிசையில் படிப்போர் பயனடையும் வகையில் எழுதப்பட்டுள்ளது. மேலும் இந்நூல் சிவகங்கை மாவட்டத்திலுள்ள இளையாங்குடி, தேவகோட்டை, திருப்புத்தூர், காரைக்குடி, மானாமதுரை ஆகிய வட்டங்களில் உள்ள ஊர்களின் சிறப்புகளை பலரும் படித்து பயனுறும் வகையில் தொகுத்தளித்த உதவி செயற்பொறியாளர் திரு. ரா. நாராயணன் அவர்களின் சீரிய முயற்சியினை பாராட்டுகிறேன்.

உலகத்தமிழ் செம்மொழி மாநாடு இனிதே நடைபெற்றதை யொட்டி தொல்லியல் துறையால் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ள 19 நூல்களில் சிவகங்கை மாவட்டத் தொல்லியல் கையேடும் ஒன்றாகும். இந்நூலினை வெளியிட நிதி நல்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்குத் தேவையான வரைபடங்களை கணினியில் வரைந்தளித்த ஸ்தபதி திரு. ஜெ. ரஞ்சித் மற்றும் இந்நூலை நல்ல முறையில் டி.டி.பி. மற்றும் அட்டைப்பட வடிவமைப்பு செய்தளித்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி ச. சரஸ்வதி மற்றும் அச்சுப்பிழைதிருத்தம் செய்த திருமதி கோ. செம்மலர் ஆகியோருக்கு எனது பாராட்டுகள்.

மாவட்டத் தொல்லியல் கையேடு நூல்களின் வரிசையில் சிவகங்கை மாவட்டத் தொல்லியல் கையேடு அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்

# முன்னுரை

"புகழ் எனினும் உயிரும் கொடுப்பர் பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளர்" (182), "போரெனில் புகலும் புனை கழல் மறவர்" என புறனானூறும், "பகையெனில் கூற்றம் வரினும் தொலையான்" என கலைத்தொகையும் சிறப்பித்துக் கூறிய மனத்திண்மை வாய்ந்த மறவர் பெருமக்கள் நிறைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டம் "மறவர் நாடு" என வரலாற்றில் மங்காத ஒளியுடன் திகழ்ந்தது. இம்மாவட்டம் 1910-இல் சீரமைக்கப்பட்டு பழைய மதுரையையும், திருநெல்வேலி மாவட்டத்தினையும் இணைத்து ஒன்பது வட்டங்களைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டது.

அரசாணை எண் 1122 வருவாய் துறை நாள் 6.7.84இன் படி 16.7.1984-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து ஒரு பகுதி பிரிக்கப்பட்டு சிவகங்கை மாவட்டம் என தனிப்பெருமைப் பெற்றது. சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட இம்மாவட்டம் 4189 சதுர கிலோமீட்டர் பரப்பளவைத் தன்னகத்தே கொண்டும், 522 வருவாய் கிராமங்களை உடையதாகவும் விளங்குகிறது. இம்மாவட்டம் 6 வட்டாரங்களாகவும், 2 கோட்டங் களாகவும். ஊராட்சி ஒன்றியங்களாகவும், 522 கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 346 வருவாய் துறை நாள் 8.3.85இன்படி 15.3.85 முதல் தனி மாவட்டமாக செயல்படத் தொடங்கியது. இம்மாவட்டம் வடக்கு (ம) வடகிழக்காக புதுக்கோட்டை மாவட்டத்தினையும், தெற்கு (ம) தென்கிழக்காக இராமநாதபுரம் மாவட்டத்தினையும், தென்மேற்காக விருதுநகர் மாவட்டத்தினையும், மேற்காக மதுரை மாவட்டத்தினையும் வடமேற்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தினையும் எல்லை வரம்பாக கொண்டுள்ளது.

அண்மைக்காலத்தில் இம்மாவட்டத்திலுள்ள தேவகோட்டை யின் அருகாமையில் உள்ள துடுப்பூர் கிராமத்தின் வீரசுழி ஆற்றங்கரையில் கண்ணாடிக் கல் மற்றும் கூழாங்கல்லைச் சேர்த்த நுண்கருவிகளைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கண்டு

பிடித்துள்ளது. இக்கருவிகளைக் காணும்போது இங்கு இடைக் கற்கால மனிதன் வாழ்ந்ததாக தடயங்களைத் தருகின்றன.

பாண்டியர்கள் ஆட்சி இப்பகுதியில் சிறப்பாக நடந்துள்ளதற்கு எடுத்துக்காட்டாக குன்னக்குடி மற்றும் பிள்ளையார்பட்டியில் உள்ள 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குடவரை ஆலயங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். பாண்டிய நாட்டின் பிரிவுகளான குளக்கீழ், பேரேரிக்கீழ் என்ற நாட்டுப் பிரிவுகள் அதன் வடபகுதியான திருப்புத்தூர் வட்டத்தில் அதிகம் காணப்படுகின்றன.

முற்கால பாண்டியர்களின் காலமாகிய கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட திருப்புத்தூரில் உள்ள திருத்தளிநாதர் ஆலயம் மற்றும் கல்வெட்டுகளும் இம்மாவட்டத்தில் உள்ளன.

கர்நாடகத்தினைக் காட்டிலும் சமணம் பற்றிய மிகப் பழமையான சான்றுமிக்கவையாக இம்மாவட்டத்திலுள்ள பூலாங்குறிச்சியில் காணப்படும் கல்வெட்டில் சமணர் பற்றிய புதிய சான்று ஒன்று கிடைத்துள்ளது. இச்சான்று, சிம்மவர்மன் பள்ளிச்சந்தம் அளித்ததைத் தெரிவிக்கும் பள்ளன் கோயில் செப்பேட்டிற்கும் (கி.பி. 560) தமிழ்நாட்டில் எழுதப்பெற்ற (கி.பி. 455) “லோகவிபாகம்” என்ற சமண நூலிற்கும் முந்தைய காலத்தைச் சேர்ந்ததாகும்.

இம்மாவட்டத்தில் பாடல் பெற்ற 14 சிவத்தலங்களில் திருக்கானப்போர் (காளையார் கோயில்) திருப்புத்தூர் (பிரான்மலை) திருப்பூவணம் ஆகிய நான்கும்; பாண்டி பதினெட்டுத் திருமால் திவ்விய தேசங்களில் ஒன்றுமான திருக்கோட்டியூரும் சிறப்புடன் விளங்குகிறது. இதே போன்று கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரையிலான பல கோயில்கள் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும், பழமையையும் பண்பாட்டையும் பறைசாற்றுவதாகவும் திகழ்கின்றன.

பழமையான மசூதிகளும், கிறித்துவ தேவாலயங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. மருது சகோதரர்கள் சருகணியில் ஒரு கிறித்துவ தேவாலயத்தினைக் கட்டுவித்துள்ளனர்.

"திரைகடல் ஓடியும் திரைவியம் தேடு" என்ற ஔவை மூதாட்டியின் மொழிக்கு ஏற்ப சாவகம், சீனம், ஈழம், இந்தோசீனம், பர்மா, சிங்கப்பூர் போன்ற கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் சென்று வாணிபம் செய்யும் பெருங்குடி வணிக மக்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அண்ணாமலை பல்கலைக்கழகத்தினை தோற்றுவித்த இராஜா சர் அண்ணாமலை செட்டியார், அவரது மகன் முத்தையா செட்டியார், கவியரசு கண்ணதாசன், வள்ளல் திரு. அழகப்ப செட்டியார் ஆகிய மிக முக்கிய பிரமுகர்கள் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.


இம்மாவட்டம் ஏராளமான தொழிற்கூடங்களையும், ஆலை களையும் கொண்டுள்ளது. உதாரணம் சிப்காட் தொழிற்கூட மையம், சோமசுந்தரம் நூற்பாலை, வரதலக்ஷ்மி மில், காளீஸ்வரி மில், வடிவாம்பிகை மில் ஆகும். தொழிற் பயிற்சி மையம் காரைக்குடி அருகாமையில் உள்ள அமராவதி புதூரிலும், கிராபைட் சுரங்க மையம் சிவகங்கையிலும், மின் இரசாயன மையம் காரைக்குடியிலும் உள்ளது.

இம்மாவட்டம் 6-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலான வரலாற்று எச்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இந்நூலுக்குத் தேவையான வரைபடங்களை கணினியில் வரைந்தளித்த ஸ்தபதி திரு ஜெ. ரஞ்சித் மற்றும் இந்நூலை நல்ல முறையில் டி.டி.பி. மற்றும் அட்டைப்பட வடிவமைப்பு செய்தளித்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி ச. சரஸ்வதி மற்றும் அச்சுப்பிழைதிருத்தம் செய்த திருமதி கோ. செம்மலர் ஆகியோருக்கு எனது பாராட்டுகள்.

இந்நூலை எழுதி வெளியிட எனக்கு ஊக்கமும், நல்ல அறிவரைகளையும் வழங்கிய முதன்மைச்செயலாளர் (ம) ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர் அவர்களுக்கு எனது உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ரா. நாராயணன்**
உதவி செயற்பொறியாளர்


சிவகங்கை வட்டம்
வருவாய் கிராமங்கள்
NOT TO SCALE

# சிவகங்கை வட்டத்தினைச்சேர்ந்த கிராமங்கள்

1. கீழத்தரி
2. இலுப்பைக்குடி
3. தாமரக்கி[தெற்கு]
4. தாமரக்கி[வடக்கு]
5. மலம்பட்டி
6. அலோகிச்சிபட்டி
7. கூட்டுறவுபட்டி
8. சாலூர்
9. மேலப்பூங்குடி
10. கள்ளராதினிப்பட்டி
11. <u>திருமலை</u>
12. அழகமாநேரி
13. கட்டானிப்பட்டி
14. நாமனூர்
15. ஆலவக்கட்டை
16. மதகுப்பட்டி
17. சிலந்திகுடி
18. நரியன்குடி
19. கீழக்கோட்டை
20. காதப்பட்டு
21. கொட்டாம்பட்டி
22. <u>பாகனேரி</u>
23. காடனேரி
24. அம்மம்பட்டி
25. நகரம்பட்டி
26. பெருங்குடி
27. <u>ஒக்கூர்</u>
28. கீழப்பூங்குடி
29. ஓ.புதூர்
30. கீழமங்கலம்
31. மங்கலேந்தல்
32. வானியன்குடி
33. கௌரிபட்டி
34. கருங்காலக்குடி
35. சூரக்குளம்
36. <u>சோழபுரம்</u>
37. <u>நாலுகோட்டை</u>
38. இடையமேலூர்
39. புதுப்பட்டி
40. கண்டங்கிபட்டி
41. குமாரபட்டி
42. மடிகொண்டம்
43. மாரனி உசிலங்குளம்
44. அரசனூர்
45. உசிலனேந்தல் சுண்டனேந்தல்
46. வேலங்குளம்
47. கண்ணரிப்பு
48. மாத்தூர்
49. படமாத்தூர்
50. காவனூர்
51. பில்லூர்
52. பனையூர்
53. செந்தி உடைய நத்தாபுரம்
54. பொன்னக்குளம்
55. அரசாணி
56. மேலவாணியங்குடி
57. கொட்டக்குடி
58. கஞ்சிராங்கல்
59. பையூர் பிள்ளை வயல்
60. பிரண்டைக்குளம்

61. <u>நாட்டரசன்கோட்டை</u>
62. சென்னல் குடி
63. முத்தூர்
64. <u>கொல்லங்குடி</u>
65. விட்டனேரி
66. பருத்திகண்மாய்
67. குருந்தானி வரியேந்தல்
68. பரசடை உடைப்பு
69. கஞ்சிப்பட்டி
70. முடிக்கரை
71. புதுக்கிழுவாச்சி
72. பனஞ்சாடி
73. அல்லூர்
74. ஒய்யவந்தான்
75. வெட்டுக்குளம்
76. பூவாளி
77. நடமங்கலம்
78. உடையாநேந்தல்
79. வேம்பங்குடி
80. ஆலங்குளம்
81. கடம்பங்குளம்
82. கீழகண்டானி
83. சுந்தரநடப்பு
84. காயங்குளம்
85. மாங்குடி
86. திரணியேந்தல்
87. வழுதாணி
88. வி. புதுக்குளம்
89. <u>இடைக்காட்டூர்</u>
90. வேம்பத்தூர்
91. கல்லூரணி
92. மல்லல்
93. சோழவந்தான்
94. அடப்படக்கி
95. ஆள்பட்ட விடுதி
96. செம்பனூர்
97. புளியங்குளம்
98. K. பெருங்கரை
99. கீழப்பிடாவூர்
100. தடியமங்கலம்
101. பெரியகண்ணனூர்
102. செம்பார்
103. சிறுகாணப்பேரி
104. புலவன்வயல்
105. சிரமம்
106. பால்குளம்
107. செடம்பல்
108. கோளந்தி
109. சேட்டூர்
110. மாரந்தை
111. கஞ்சிரம்
112. சாக்கூர்
113. கல்குளம்
114. சிரியூர்
115. நல்லேந்தல்
116. M. வாகைக்குளம்
117. பள்ளிவயல்
118. சோமநாதமங்கலம்
119. சேவவூரணி
120. மருது கண்மாய்
121. உசிலங்குளம்
122. கோடிக்காடு காடம்பூரணி
123. நெடுங்குளம்
124. மொங்கன் கண்மாய்
125. மூவர் கண்மாய்
126. மொரக்கோட்டூர்
127. மாரத்தூர்
128. சிலுக்கப்பட்டி
129. வண்ணிக்குடி

## சிவகங்கை வட்டம் - சிவகங்கை

மதுரையிலிருந்து 30 கல் தென்கிழக்காகவும், மானா மதுரையிலிருந்து 11 கல் வடக்காகவும் சிவகங்கை அமைந்துள்ளது. 1730-இல் சிவகங்கை அரசராக இருந்த சசிவர்ண பெரிய உடையத்தேவரே இந்த ஊரை முதலாக தோற்றுவித்தார். இவர் நாலுகோட்டைக்குத் தளபதியாக இருந்தவர் ஆவார். சிவகங்கை என்னும் நீர் ஊற்றை ஏற்படுத்தி, அங்கு ஒரு தெப்பக்குளத்தையும், பெரிய அரண்மனையையும் உருவாக்கி நீர் ஊற்றின் பெயரையே நகருக்கு சூட்டினார்.

உரிய விதிகளின்படி கட்டப்பட்ட சிவகங்கை அரண்மனை இவ்வூரின் மிகப்பெரிய, பழமை வாய்ந்த கட்டிடமாகும். 18.0 அடி உயரம் உள்ள மதில் சுவர் கொண்ட இவ்வரண்மனை மேல் தளத்தில் உள்ள குறுகிய பாதையில் நின்று கொண்டே ஒருவர் பல எதிரிகளை அழிக்க வகை செய்யும் முறையில் கட்டப்பட்டது. இதுவே சண்டையின்போது கடைசிக் கட்டத்தில் உபயோகப்படுத்தப்படும் இடமாகும். இவ்வரண்மனையின் வடமேற்காக இவர்களது குலதெய்வமான இராஜராஜேஸ்வரி ஆலயம் உள்ளது. கோபுரத்தின் கலசம் தங்கத்திலானது. இதன் அருகில் ஆயுதக்கிடங்கு கட்டப்பட்டுள்ளது. அடுத்து அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளம்; தண்ணீர் வரும் குழாயை அடைத்து விளையாட்டு மைதானமாக உபயோகப்படுத்தும் வகையில் கட்டப்பட்டுள்ளது. மற்றவர்கள் காணமுடியாத வகையில் இராணி மற்றும் பெண்கள் விளையாட்டினைக் கண்டு களிக்கும் வண்ணம் இம்மைதானம் கட்டப்பட்டது ஆகும்.

இந்த அரண்மனையில் இருந்துதான் இரண்டாவது மன்னர் முத்து வடுகநாதரும், மூன்றாவது அரசி இராணி வேலு நாச்சியாரும் ஆட்சி செலுத்தினர். கி.பி. 1784-இல் முத்து வடுகநாத தேவரால் இஸ்லாமிய பள்ளிகளுக்கும், தர்ஹாக்களுக்கும் பலநிலக் கொடைகள் வழங்கப்பட்டது. கி.பி. 1798-99-இல் சின்ன மருது, கட்டபொம்மன் தம்பி ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்தார். மருது சகோதரர்களால்; தம் தாய் தந்தையர் நினைவை போற்றும் வகையில்; பொன்னாத்தாள் குளம், உடையார் சேர்வை ஊருணி

ஆகியவைகளையும், இலட்சுமி தீர்த்தம் என்னும் திருக்குளத்தையும் வெட்டுவிக்கப்பட்டது. இந்நகரின் கிழக்கில் தாமரைத் தடாகமாக திகழ்வது ஆத்தா ஊருணியாகும்.

இச்சீமை மக்களிடம், அரசின் உதவியை எதிர்பார்க்காமல் மக்கள் தாங்களாகவே ஆண்டுதோறும் தூர் எடுக்கும் வழக்கம் மருது பாண்டியர் காலத்திலிருந்து வந்துள்ளது. இதற்கு சேங்கை வெட்டு என்று பெயர். சேங்கை என்பது இவ்வட்டார மக்களால் சிறுகுளங்களைக் குறிப்பதற்கு வழங்கி வரும் சொல்லாகும். கார்த்திகை தேவர் ஊருணியிலிருந்து சிவகங்கையின் பெரும் பகுதிக்கு தண்ணீர் கிடைக்கப்பெற்று வருகிறது. இதன் கரையில் உள்ள ஹனுமான் சிற்பம் ஊருணியை காவல் புரிந்து வருவதாகக் கருதப்படுகிறது.

மருது சகோதரர்களால் (1783-1801) திருஞான சுப்பிரமணியர் கோயில் கட்டப்பட்டது. லக்ஷ்மி அம்மாள் என்ற பெண்மணியால் காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட லிங்கம் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வீடுவீடாகச் சென்று சேகரித்த பொருட்களைக் கொண்டு பூஜை செய்வித்தார். இதே போன்று கிராமம் கிராமமாக வசூல் செய்து ஏராளமான கோயில்களும், மதில் சுவர்களும் கட்டியுள்ளார்.

கி.பி. 1883-இல் லட்சுமி அம்மாள் என்ற பெண்மணி, சிவகங்கையில் உள்ள சுப்பிரமணியர் கோயிலை முறைப்படி பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலமாக மன்னரிடம் பராமரிப்பிற்காக ஒப்படைத்தார். இக்கோயில், திருப்பூவனம் கோயிலுக்கு உட்பட்டதாகும். இதேபோன்று பேருந்து நிலையம் அருகில் சசிவர்ணேஸ்வரர் கோயில் ஒன்றும் உள்ளது. இவ்விரண்டு கோயில்களுக்கும் சிவகங்கை மன்னர் பரம்பரை தர்மகர்த்தா ஆவார். கத்தோலிக்க கிறித்துவாலயம், ப்ராட்டஸ்டண்டு கிறித்துவாலயம், மசூதி ஆகியவையும் உள்ளன. 11.05.1897-ல் கவியோகி மகரிஷி என அழைக்கப்படும் சுதானந்த பாரதி சிவகங்கையில் பிறந்தார்.

## சிவகங்கை வட்டம் - திருமலை

இவ்வூர் சிவகங்கையிலிருந்து மேலூர் செல்லும் வழியில் சாலையை விட்டு வடக்கே தள்ளி அமைந்துள்ளது. ஊருக்கு

அருகில் உள்ள சிறிய குன்று திருமலை என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இக்குன்றில் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சமணர்கள் வாழ்ந்த இயற்கையான குகைத்தளம் ஒன்று உள்ளது. இது தவிர இக்குன்றில் முற்கால பாண்டியர் காலத்தினைச் சார்ந்த குடவரைக் கோயில் ஒன்றும், பிற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த கட்டிக் கோயில் ஒன்றும் உள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த குடவரைக் கோயில் சிறிய கருவறை அதற்கு முன்பு அமைந்துள்ள முகமண்டபத்துடன் விளங்குகிறது. கருவறையில் சிவனும், பார்வதியும் அமர்ந்த நிலையில் உமாமகேஸ்வரராகி காட்சியளிக்கின்றனர். இவ்வுருவத்தின் மீது பிற்காலத்தில் சுதை பூசி வண்ணம் தீட்டியுள்ளனர்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பிற்கால பாண்டியர் காலத்தில் இக்குடைவரையினையொட்டி ஒரு பெரிய கட்டிடக் கோயில் சிவனுக்காக எழுப்பப்பட்டுள்ளது. இக்கோயில் திருமலை பெருமாள் என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

கி.பி. 1233-இல் இக்கோயிலில் இருந்த ஐநூற்றுவன் திருக்காவணம் என்ற மண்டபத்தில் வணிகர்கள் கூடி பல வணிகப் பொருட்களுக்கு வரிநீக்கம் செய்து தீர்மானம் நிறைவேற்றியிருக் கின்றனர். இதே காலத்தில் பஞ்சவன், மாதேவி பெருந்தருவைச் சேர்ந்த எண்ணெய் வாணிபம் செய்யும் வணிகர்கள் இக்கோயில் திருவிளக்கு எரிப்பதற்காகத் தாங்கள் வைத்திருந்த செக்காலை ஒவ்வொன்றிலிருந்தும் குறிப்பிட்ட அளவு எண்ணெயை தானமாக அளித்திருக்கின்றனர். இங்குள்ள கல்வெட்டுகளில் தேவரடியார் இருவரது பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்களில் திருஞானசம்பந்த நங்கை என்பவள் ஆளுடைய பிள்ளையாரை (சம்பந்தர்) எழுந்தருளிவித்து வழிபாட்டிற்காக நிலங்கள் அளித்திருக்கின்றாள். திருவெங்காட்டு மங்கை என்ற மற்றொரு தேவரடியார் இக்கோயில் திருச்சுற்றைக் கட்டியிருக்கிறாள். இக்கோயில் கல்வெட்டுகளில் சோழியர் பழங்காசு, வீரபஞ்சணம் காசுகள் குறிப்பிடப்படுகின்றன. மணப்படை வீட்டைச் சார்ந்த உடன் பிறந்த இருவர் இக்கோயிலில் பிள்ளையாரையும், திருவாதவூர் நாயனாரையும் பராக்கிரம பாண்டியன் காலத்தில்

செய்வித்துள்ளனர். விக்கிரம பாண்டியன் காலத்தில் திருச்சிற்றம்பல பிள்ளையார் இக்கோயிலில் எழுந்தருளிவிக்கப்பட்டுள்ளார்.

கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட திருப்பணி ஓவியத்தில் மிகச் சிறிய பூதங்களும், பூசை செய்யும் அந்தணர் உருவங்களும் காணப்படுகின்றது. குடவரையின் முன்மண்டபத்தில் இரண்டு கரங்களுடன் கூடிய முருகனது உருவம் நின்ற கோலத்தில் காணப்படுகின்றது. பாறையில் புடைப்புச் சிற்பமாகச் செய்யப் பட்டுள்ள முருகன் பெரிய மாலையும், ருத்திராட்ச மாலையும் அணிந்து விளங்குகின்றான். முருகனது வலது புறம் உள்ள சிறுபூதமும் அவனது கொடியாகிய சேவலின் உருவங்களும் காணப்படுகின்றன. இடது புறம் அடியார் உருவம் ஒன்று காணப்படுகின்றது. தலைக்கு மேல் குடை கவிழ்ந்த நிலையில் காணபடுகின்றது. பாதத்தின் அடியில் முருகனது வாகனங்களாகிய ஆட்டுக்கடாவும், மயிலும் காணப்படுகின்றன. இவ்வுருங்களுக்கிடையே மலர்க்கொத்து ஒன்று காணப்படுகின்றது. சிற்பங்கள் உள்ள இக்குடைவரைக் கோயில் குன்றத்து நாயனார் கோயில் என்றும் அழைக்கப்பட்டிருக்கின்றது.

## சிவகங்கை வட்டம் - பாகனேரி

சிவகங்கைக்கு வடகிழக்காக 15 மைல் தொலைவில் உள்ளது இவ்வூர்.

இவ்வூரில் உள்ள சித்தாங்கண்மாயின் மடைக்கு அருகில் உள்ள இடத்தில் காணப்படும் கி.பி. 1655-ஐச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று பாகனேரியை மேலைத்திருத்தியூர் முட்டத்துப் பாகனேரி என்று குறிக்கின்றது. இவ்வூரில் உள்ள மடம் ஒன்றிற்கு மடப்புறமாக அரியனயினார் காளையப்ப பிள்ளை மகன் காளையப்பன் ஏந்தல் ஒன்றினைத் தானமாக அளித்ததை கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இவ்வேந்தலுக்கு உட்பட்ட நஞ்சை, புஞ்சை முதலிய சகலவிதமான சொத்துக்களும் இம்மடப்புறத் தன்மத்திற்கு விடப்பெற்று ஊராரும், நகரத்தாரும் இதனை நடத்தி வரவும் முடிவு செய்யப்பெற்றுள்ளது. மேலும் இக்கல்வெட்டில் பாகனேரி சண்டீசுரமுடையார், புல்வாயில் நாச்சியார் கோயில்கள் குறிப்பிடப்படுகின்றன.

புலவானியாகி அம்மன் என அழைக்கப்படும் புல்வாயில் நாச்சியார் கோயில் மிக முக்கியமான கோயிலாகும். சிறிய கோபுரத்துடன் விளங்கும் இக்கோயில் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு உட்பட்டதாகும். இக்கோயிலைச் சுற்றித் தெப்பக்குளம் ஒன்றும் உள்ளது. இதேபோன்று சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த நீலகண்டீஸ்வரர் சமேத காமாட்சி அம்மன் ஆலயம் விண்ண வண்ணபெருமாள், தாயார் அம்மாள் ஆலயமும் உள்ளது.

மேலும் பிள்ளையார் கோயில், நாயனார் கோயில் சிறிய ரோமன் கத்தோலிக்க கிறித்துவ ஆலயம் ஆகியவையும் உள்ளது. நாயனார் கோயிலிலும், நீலகண்டீஸ்வரர் கோயிலிலும் கல்வெட்டுக்கள் உள்ளது.

## சிவகங்கை வட்டம் - ஒக்கூர்

சிவகங்கைக்கு வடக்காக 7.50 கல் தொலைவிலும், திருப்பத்தூருக்கு தென்மேற்காக 15 கல் தொலைவிலும் அமைந்துள்ள இவ்வூருக்கு, சிவகங்கை புகைவண்டி நிலையம் அருகாமையில் உள்ளதாகும்.

ஒக்குமூர் என்று அழைக்கப்பட்ட இவ்வூர் ஒக்கூர் என பிற்காலத்தில் ஆயிற்று. மாசாத்தியார் என்ற சங்ககால புலவரும், முத்து புலவரும் இங்கு பிறந்தவர்கள். கி.பி. 1801-இல் சிவகங்கை அரசருக்கும், கிழக்கிந்திய கம்பெனியாருக்கும் சிவகங்கை வட்டம் ஒக்கூரில் 28.07.1801 அன்று நடைபெற்ற போரில் இவ்வூர் முழுமையாக நெருப்பால் அழிவுற்றது. இவ்வூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் 96 கிராமங்களில் ஒன்றாக விளங்கியதுடன், இவ்வூரைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் 96 கிராமங்களில் ஒன்றாக விளங்கியதுடன், இவ்வூரைச் சேர்ந்த நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் ஒன்பது பிரிவுகளில் ஒருவராக விளங்கினர்.

## சிவகங்கை வட்டம் - சோழபுரம்

சிவகங்கையிலிருந்து வடக்காக சிவகங்கை திருப்புத்தூர் சாலையில் 4 மைல் 2 பர்லாங்கு தொலைவில் இவ்வூர்

அமைந்துள்ளது. சிவகங்கை ரயில் நிலையம் இவ்வூரின் அருகாமையில் உள்ளது.

சோழ மன்னர் இவ்வூரில் தங்கியிருந்த சமயம் சிவலிங்கம் ஒன்றை வழிபாட்டிற்காக நிறுவியதால் இவ்வூர் சோழபுரம் எனப் பெயர் பெறலாயிற்று. இவ்வூரில் வடமேற்கு ஊர் எல்லையில் அபூர்வ வாகீஸ்வரர் என்ற அருள் மோஷி நாதஸ்வாமி சமேத தர்மசம்வர்த்தினி என்ற அறம் வளர்த்தாள் ஆலயம் உள்ளது.

செட்டி நாட்டிற்குட்பட்ட 96 கிராமங்களில் இவ்வூரும் ஒன்றாகும். இவ்வூரில்தான் சிவகங்கை அரசரான படமாத்தூர் கௌரி வல்லப பெரிய உடையத்தேவருக்கு 3.9.1801-இல் கர்னல் அக்னியூ, கர்னல் இன்ஸ் ஆகியோர் முடிசூட்டினர். அவருக்கு இஸ்திமிராங் ஜமீன்தார் என்ற சாசன பட்டயமும் வழங்கப்பட்டது.

மேலும் இவ்வூர் கும்பனியர்களின் தளபதி அக்னியூவின் தலைமை இடமாகும். இவ்வூரில் இருந்த சூர மண்கோட்டை முழுமையாக அழிந்துள்ளது. இங்குள்ள செட்டியார் சத்திரம் தற்பொழுது ஆரம்ப பள்ளியாக உபயோகப்படுத்தப்படுகிறது.

## சிவகங்கை வட்டம் - நாலுகோட்டை

சிவகங்கையிலிருந்து 4 கல் தொலைவில் உள்ள சோழபுரத்தையடுத்துள்ள இவ்வூர் கிழவன் சேதுபதியின் நெருங்கிய உறவினரான கன்று மேய்க்கி பெரிய உடையாத்தேவரின் ஊராகும்.

கிழவன் சேதுபதியை எதிர்த்து போரிட்ட தாதியத்தேவனின் ஆதரவாளர்கள் இருந்த சிறுபாளையத்தினையொட்டி நாலுகோட்டை அமைந்திருந்ததால்; 300 படைவீரர்களைப் பராமரிப்பதற்காக வருவாய் உள்ள கிராமங்களை உள்ளடக்கி நாலுகோட்டையிலிருந்து ஆளுமாறு கன்று மேய்க்கி பெரிய உடையாத்தேவருக்கு கொடுத்தார். அதுமுதல் பெரிய உடையாத் தேவர் நாலுகோட்டை பாளையக்காரர் ஆனார். இதுவே சிவகங்கை சீமை உருவாவதற்கு வழிவகுத்த ஊராகும்.

## சிவகங்கை வட்டம் - நாட்டரசன் கோட்டை

சிவகங்கையிலிருந்து 5 கல் தொலைவில் அமைந்துள்ள இவ்வூரில் தமிழர்கள் ஒவ்வொருவரும் பெருமைப்படத்தக்க "கம்பன்" சமாதி, கம்பன் குளம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் நகரத்தார்கள் கம்பனுக்கு விழா எடுத்து சிறப்பு செய்கிறார்கள். இவை தவிர இவ்வூரில் ஒரு சிவாலயமும் அம்மன் சன்னதியும் உள்ளது. திருக்கோயில்களில் தேவரடியார் என அழைக்கப்படும் இசை வேளாளர்களின் பிரிவினர் இவ்வூரில் இருந்ததை சேதுபதி விறலிவிடுதூது, நயினார் கோயில் வழி நடைச் சிந்து, திருப்புல்லாணி நொண்டி நாடகம், கண்ணுடையம்மன் பள்ளு ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. நாட்டரசன் கோட்டை "வடகளவழி நாட்டு நாட்டரசன் கோட்டை" என்று கண்ணுடையம்மன் பள்ளுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டில் கி.பி. 900-க்கு முன்பு நிலவிய முற்கால பாண்டியர் காலத்தில் உருவான நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இதுவும் ஒன்றாகும். இக்களவழிநாடு என்பதே கண்ணுடையம்மன் போன்ற பிற்கால இலக்கியங்களில் 'கலை வேள்வி நாடு' என்று குறிப்பிட்டுள்ளது. இவை கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் மாறியதாகும்.

இவ்வூரில் பங்குனியில் ஆண்டு தோறும் கண்ணுடைய நாயகி அம்மன் வெள்ளிரதத் திருவிழா தொடங்குவதற்கு முன்னர் "சேங்கை வெட்டு" என்னும் பெயரில் கோயில் திருக்குளத்தில் மக்கள் தாமாகவே தூர் எடுக்கும் விழா இந்நாளையிலும் நடந்து கொண்டிருக்கிறது.

இவ்வூரில் உள்ள கண்ணுடைய நாயகி அம்மன் கோயிலில் கொடிக்கம்பம் முதலிய திருப்பணிகள் சேதுபதிகளால் செய்யப்பட்டன என முத்து நாயகப் புலவர் பாடிய "கண்ணுடைய அம்மை பள்ளு" என்னும் நூலில் வரும் "கனக விசய ரகுநாத சேதுபதி செய்த கொடி கம்ப மண்டபம் புகழக் கூவாய் குயிலே" என்ற பாடல் மூலம் அறியலாம். உற்சவ மூர்த்தியான களியாட்டக் கண்ண சிவகங்கை தேவஸ்தான பதிவேட்டில் சாமுண்டீஸ்வரி என குறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இவ்வூரில் உள்ள கரிகால சோழீஸ்வரர் கோயிலில் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அறுநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட பிற்கால பாண்டியர்கள் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை எவ்வூரைச் சார்ந்தவை, எக்கோயிலிற்குரியவை என்பதைத் தெரிவிக்கின்றன. களவழி நாட்டைச் சார்ந்த முடிகொண்ட பாண்டியபுரத்தில் இருந்த 'திருச்சீவணமுடைய மாதேவர்' என்று அழைக்கப்பட்ட சிவன் கோயிலுக்குரிய கல்வெட்டுகளாகும். இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்களை பற்றியும், அத்தானங்கள் வழங்கிய அரசு ஆணையில் கையொப்பம் இட்ட அரசியல் அதிகாரிகள் பற்றியும் இக்கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

விக்கிரமபாண்டியன் கல்வெட்டு ஒன்று இக்கோயில் இறைவர்க்குத் திருப்படி மாற்றிற்காக (நாள் வழிபாட்டுச் செலவினங்களுக்காக) இறை இறுக்கும் கோலால் முப்பது மா நிலம் அளந்து அளித்தமைப் பற்றி தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டு அமுதுபடிக்காகத் தானமளித்ததைத் தெரிவிக்கின்றது. பல துண்டுக் கல்வெட்டுகளில் இக்கோயிலுக்கு அளித்த நிலங்களின் எல்லைகள் குறிப்பிடப்படுகிறது. இக்கோயில் ஆளுடைய பிள்ளையாரை எழுந்தருளிவித்தமையைப் பற்றி கல்வெட்டுகளில் செய்திகள் உள்ளன.

இவ்வூர் உடையவர் கோயிலிலும் பிற்கால பாண்டியர் கால துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன.

### சிவகங்கை வட்டம் - முத்தூர்

சிவகங்கையிலிருந்து காளையார் கோயில் செல்லும் பாதையில் 8 கல் தொலைவில் உள்ள கொல்லங்குடியிலிருந்து வடக்கே 2 கல் சென்றால் இச்சிற்றூரை அடையலாம். முத்து போன்ற நெல் இங்கு விளைந்ததால் இப்பெயர் பெறலாயிற்று எனக் குறிப்பிடப்படுகிறது. ஆங்கிலேயப் படை மருதுபாண்டியர் களின் படைகளை எதிர்கொண்ட காலத்தில் முத்தூரைக் கண்ட தளபதி வெல்ஷ்த் "முத்தூர் பசிய வயல் வெளியாக" விளங்கிற்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

பெரிய மருதுவாக வெள்ளை மருது தன் மனைவியருள் ஒருத்தியான கருப்பாயி ஆத்தாளுக்கு இங்கு அரண்மனை

கட்டுவித்திருந்தார். இவ்வூர் காளையார் கோயிலுக்கு வழியாக இருந்ததால் ஒரு நிலைப்படையும் இங்கு இருந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வூர் 1801 செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாள் காளையார் கோயிலைப் பல திசைகளிலும் இருந்து தாக்க முயன்ற ஆங்கிலத் தளபதி அக்னியூ படைகளினால் முற்றுகையிடப்பட்டது. முத்தூர் கண்மாயிலிருந்து மருதுபாண்டியர் படை தகுந்த எதிர்த் தாக்குதல் அளித்து தடை ஏற்படுத்தியும் முடியாமல் முத்தூர் வீழ்ந்தது.

முத்தூர் அரண்மனை ஓர் ஓடையின் கரையில் அமைந்துள்ளது. அரை ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்ட இந்த அரண்மனையின் பூஜை அறை தவிர மற்ற பகுதிகள் இடிந்த நிலையிலுள்ளன. முன்னாள் சிவகங்கை நகர் மன்ற உறுப்பினர் திரு. பா. சிபியன் அவர்களிடம் உள்ள செப்புப் பட்டயத்தில் 17-ஆம் வரியில் குறிக்கப்பட்டுள்ள “முத்தூர் அரண்மனையில் அம்மனை பிரதிஷ்டை செய்து காவல் காத்து'' என்று குறிப்பிடப்பட்ட பகுதி மட்டும் எஞ்சியுள்ளது.

## சிவகங்கை வட்டம் - கொல்லங்குடி

சிவகங்கைக்கு கிழக்காக 8 கல் தொலைவில் மதுரை-தொண்டி நெடுஞ்சாலையில் உள்ளது. சிவகங்கை புகைவண்டி நிலையம் இவ்வூரின் அருகாமையில் உள்ளதாகும்.

கொல்லர்குடி என்ற சொல்லே கொல்லங்குடி என ஆகியுள்ளது. மருது பாண்டியர் காலத்தில், இவ்வூரிலேயே ஆயுதங்களும், வெடி மருந்துகளும் செய்யப்பட்டன. மருது பாண்டியர் காலத்தில் வெட்டுடைய காளி அய்யனார் கோயில் சாலையில் தோற்றுவிக்கப்பட்ட ஊருணி இன்றும் மருது ஊருணி என அழைக்கப்பட்டு வருகிறது.

சிவகங்கை அரசரான முத்து வடுகநாதரின் அரண்மனை தற்பொழுது மிக அபாயகரமான நிலையில் இங்குள்ளது. கி.பி. 1789-இல் சிவகங்கை அரசருக்கும், கிழக்கிந்திய கம்பெனியாருக்கும் மே திங்களில் யுத்தம் நடைபெற்ற இடமாகும்.

இவ்வூரிலிருந்து 1 கல் தொலைவில் உள்ள வெட்டுடைய காளியம்மன் கோயில் 500 ஆண்டுகளுக்கு முன்னர் காரி வேளர்,

கருப்ப வேளர் என்ற இரு சகோதரர்களால் நிர்மானிக்கப்பட்டது. வெட்டுடைய அய்யனார் என்ற தெய்வமும் பிரசித்தி பெற்றதாகும்.

## சிவகங்கை வட்டம் - இடைக்காட்டூர்

வைகையாற்றின் வடகரையில் மதுரைக்கு கிழக்காக 22 கல் தொலைவிலும், சிவகங்கைக்கு தென்மேற்காக 13 கல் தொலைவிலும், மானாமதுரைக்கு மேற்காக 7 கல் தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூருக்கு அருகே தென்கிழக்கில் முத்தனேந்தல் புகைவண்டி நிலையம் அமைந்துள்ளது. இங்குள்ள பழைய சிவன் கோயில் கல்வெட்டிலிருந்து இவ்வூரின் பெயர் அழகிய பாண்டியநல்லூர் என்று அறியப்படுகிறது. யாதவர் என்னும் இடையர் குலத்தவர் முதன்முதலில் இங்கு குடியேறியதால் இடையர் காட்டு ஊர் என்பது மருவி இடைக்காட்டூர் ஆயிற்று.

இங்குள்ள இறைவன் மணிகண்டேஸ்வரர் என்றும், ஆதிகந்தேஸ்வரர் என்றும், இறைவி வடிவு அம்மாள் என்றும், சௌந்தரநாயகி என்றும் அழைக்கப்படுகிறார். கரிய மாணிக்கப் பெருமாள் கோயில் பழமை வாய்ந்த கோயில்களில் ஒன்றாகும்.

கி.பி. 1852 - சிவகங்கை வட்டம், இடைக்காட்டூரில் செயின்ட் ஜேம்ஸ் என்ற கிறித்துவாலயம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஆர்.பி. பெர்னான்டஸ்செலி எஸ்.ஐ. என்பவரால், மரியா அன்னா என்ற ஆங்கிலேய மாதுவின் நிதி உதவிகொண்டு, ஜோதி வடிவில் 150 அடி நீளமும், 100 அடி அகலமும், 90 அடி உயரமும் உடைய கோபுரத்துடன் கட்டப்பட்டது. இக்கிறித்துவாலயம் கதவுகளைத் தவிர எந்த சன்னலும் இல்லாமல், மற்ற இடங்களில் மரங்களும் உபயோகப்படுத்தாமல் கட்டப்பட்டது இதன் சிறப்பு அம்சமாகும். மேற்கத்திய நாடுகளிலிருந்து கண்ணாடிகள், சிலைகள் கொண்டு வரப்பட்டு கட்டப்பட்டதாகும்.

சித்தர்களுடன் நெருங்கிய தொடர்புடையதாக கூறப்படும் இவ்வூரில், பதினெண் சித்தர்களில் ஒருவரான இடைக்காடர் எனும் இடைக்காட்டூர் சித்தர் மத்யரானேஷ்வரர் என்ற பெயரில் இவ்வூரில் வாழ்ந்ததாக கூறப்படுகிறது.

## சிவகங்கை வட்டம் - காளையார் கோயில்

சிவகங்கைக்குக் கிழக்காக 10 கல் தொலைவிலும், தொண்டிச் சாலையில் மதுரையிலிருந்து 42 கல் தொலைவிலும் இவ்வூர் உள்ளது. சங்க காலத்திலிருந்தே 2000 ஆண்டுகளாக வரலாற்றுச் சிறப்புடன் விளங்கும் இவ்வூர் பலம் பொருந்திய கோட்டையும், காட்டரணும் கூடி விளங்கியதால், சங்க இலக்கியங்களில் "காணப் பேரெயில்" என்று இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. வேங்கை மார்பன் என்ற சிற்றரசன் ஒருவன் இப்பகுதியில் கோட்டை கட்டி அதன் தலைவனாக விளங்கி உள்ளான். அவன் கட்டியிருந்த கோட்டை அதன் மதில்கள் சுற்றியிருந்த அகழிகள் பற்றி புறப்பாடல் ஒன்றில் ஐயூர் மூலங்கிழார் புகழ்ந்து பாடியுள்ளார்.

இக்கோட்டையை உக்கிரப்பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் கைப்பற்றியதால், கானப்பெரயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளான். கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து இவ்வூருக்கு சைவ சமய சிறப்பு ஏற்பட்டது. இங்குள்ள சிவன் கோயிலை சைவக்குறவர்கள் பலர் பாடி சிறப்பித்துள்ளனர். இங்குள்ள ஈசன் மீது சுந்தரர் பாடிய பத்து பாட்டிலும் "கானப் பேர் உறைகாளை" என்று இறைவனைக் குறித்து போந்தார். அத்திருவாக்கின் சீர்மையால் காளையார் என்னும் பெயர் அவருக்கு அமைந்தது. காளையார் அமர்ந்தருளும் கோயில் காளையார் கோயிலாயிற்று. கோயிற் பெயரே நாளடைவில் ஊர் பெயராயிற்று.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வீரசேனபாண்டிய மன்னரால் இக்கோயில் கட்டப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. !பாண்டிப்பதி பதினான்கனுள் ஒன்றான காளையார் கோயில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், சேரமான் பெருமாள், கல்லாடர் ஆகியோரால் பாடப்பெற்றது. முற்கால பாண்டிய மன்னர்களும், பிற்கால பாண்டிய அரசர்களும், மருது பாண்டியரும் இக்கோயிலை மாபெரும் கோயிலாக உருவாக்கி இருக்கின்றனர். இம்மாவட்டத்தில் அமைந்த பெருங்கோயிலுள் இதுவும் ஒன்றாகும். இங்குள்ள இறைவன் கானப்பேருடைய நாயனார் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடுகின்றனர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டி

லிருந்து கானப்பேருடைய நாயனார், காளையார் சோமநாதர் என்றும் அழைக்கப் பெற்றிருக்கின்றனர். சோமநாதர் என்ற பெயர் இவ்விறைவனுக்கு ஏற்பட்டமைக்குக் காரணம் இவ்வூரில் பாண்டியர் காலத்தில் சிறப்புடன் வாழ்ந்த சோமநாதன் என்ற துறவியின் ஏராளமான திருப்பணிக் கொடைகளே ஆகும். இக்கோயிலுக்குப் பல தானங்களை அளித்ததோடு மட்டுமல்லாமல் அம்மன் கோயிலையும் கட்டி அத்தேவி திருவீதி எழுந்தருள திருவீதி நாச்சியார் என்ற செப்புத் திருமேனியும் செய்து அளித்துள்ளார். இத்துறவி பாண்டிய அரசரது குருவாகவும் விளங்கியிருக்கிறார். இதற்கு குரு தட்சணையாக இப்பகுதியில் வேலங்குளம் என்ற ஊரை தானமாக பெற்றுள்ளார். இதன் பிறகு இவ்வூர் சோமநாத நல்லூர் என்ற பெயர் பெற்றது. இவ்வூரையே சிறிது காலத்தில் கானப்பேருடைய நாயனாருக்கு இத்துறவி தானமாக அளித்துள்ளார். கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு காணப்பேர் என்பது மறைந்து காளையார் என்ற பெயர் வழக்கிற்கு வந்துள்ளது. பிற்காலத்தில் காளையார் கோயில் ஆன இக்கானப்பேருக்கு புராண அடிப்படையில் வடமொழியில் பிரமபுரி, அகத்தியர் க்ஷேத்திரம், தட்சிணகாளிபுரம், ஐராவதி க்ஷேத்திரம் என்று இருபது பெயர்கள் வரை இருந்திருக்கின்றது. வைணவர்கள் இவ்வூரை 'அஞ்சினான் புகழிடம்' என்றும் அழைப்பர்.

பெருங்கருணையாளன் என்றொருவன் சிறப்பு வழிபாட்டிற்காக தானங்கள் தந்ததை கல்வெட்டு தெரிவிக்கிறது. இவ்வூர் கல்வெட்டு ஒன்று (S.I.I. Vol. VIII 174) பற்று முறி ஒன்றினைக் குறிக்கிறது. ஒருவருக்கு ஒருவர் கொடுத்தல், வாங்குதல், விற்றல் போன்ற ஆவணப் பதிவுகளைச் செய்து அவற்றை முறி என்று அழைத்தனர். மேற்கூறிய கல்வெட்டில் ஆளுடையான் பெருங்கருணையாளன் என்பவன் சுந்தரபாண்டியனது 10-ஆவது ஆண்டில் திருக்கானப்பேர் இறைவனுக்குத் தன் பேரால் ஒரு வழிபாட்டை ஏற்படுத்தினான். இவ்வழிபாட்டைச் செய்வதற்காக சோலை ஏரி ஏம்பல் என்ற பகுதியைத் தானமாகத் தந்தான். அப்பகுதிக்கான வரிவகைகளையும் நீக்கி இறையிலியாகவும் செய்தான். இப்பகுதி

சேற்றூர் ஊரார் கண்காணிப்பில் இருந்தது. எனவே அவர்கள் இப்பகுதிக்கு 3200 பணம் விலை நிச்சயித்தனர். இப்பகுதியின் நான்கு எல்லைகளையும் அளந்து கோயில் நிலமென அறிய சூலக்கற்கள் நாட்டினர். அளந்ததின் பிறகு விலை 3188 பணம் வரவே அதன் ஆளுடையான் பெருங்கருணையாளனிடம் பெற்றுக்கொண்டனர். இந்நிலங்கள் வரியில்லாது கோயிலுக்கு கொடுக்கப்பட்டதால், வரி வசூலிக்கும் உரிமை பெற்றிருந்த காராளர்கள் கோயிலுக்குப் பற்று முறி எழுதிக் கொடுத்தனர். பணத்தைப் பற்றிக்கொண்டு எழுதிக் கொடுத்ததால் பற்று முறி எனப் பெயர் பெறலாயிற்று. இக்கோயிலில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளும், வானாதிராயர் கல்வெட்டுகளும் காணப் படுகின்றன. இங்குள்ள கல்வெட்டுகளில் இவ்வூரில் இருந்த பிடாரி அம்மன், அய்யனார் போன்ற தெய்வங்கள் குறிப்பிடப்படுகின்றன. மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் இவ்வூரில் இருந்த தேவரடியார் நக்கன் செய்யான் காலிங்கராய தலைக்கோலி என்பவள் இவ்வூர் குளங்களைத் திருத்தி பல நிலங்களை வேளாண்மைக்குக் கொண்டு வந்ததை கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. இங்குள்ள கல்வெட்டுகளில் பாண்டியர் காலத்தில் வழங்கிய பல வரிகள் பற்றியும், இப்பகுதியில் இருந்த பலவகையான மரங்கள் பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் வேளாண்மை பற்றிய பல செய்திகளை இங்குள்ள கல்வெட்டுகள் தருகின்றன. இப்பகுதியில் உள்ள நிலங்களை அளப்பதற்கு 13-ஆம் நூற்றாண்டில் "சுந்தரபாண்டியன் கோல்" என்ற அளவுகோல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பணியாற்றிய பாண்டிய அரசு அலுவலர்களின் பெயர்கள் கல்வெட்டுக்களில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன. (1) அரசரில் அஞ்சாத பாண்டியர் (2) அலைவில் அஞ்சாத பாண்டியர் (3) அழகிய சொக்கனார் (4) ஆதிப்பட்டத்து பல்லவராயர் (5) உருவ நாராயண தேவன் (6) உடப்பிறப்பழகியார். (7) காணவினிய பாண்டிய தேவன் (8) தவச்சக்கரவர்த்தி (9) தவமழகியர் (10) திசை வென்ற பாண்டியன் (11) பகை மதியாத பாண்டியத் தேவர் (12) பதி வழங்கு பாண்டியன் (13) முடிவழங்கு பாண்டியன் (14) நம்பி அதிகை மான் தேவன் (15) வழுதி சிங்க தேவன் (16) வீரவிச்சாதிர

தேவன் (17) விசைய சிங்க தேவன் (18) தென்னங்க தேவன். இவ்வூரில் சுந்தர மூர்த்தி நாயனார் மடம் ஒன்று இருந்திருப்பதைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. காளையார் கோயில் தனி இலாராகிய நக்கன் செய்யானான காலிங்கராய தலைக்கோலியைப் பாராட்டி மாறவர்மன் குலசேகர பாண்டியன் பல நிலக் கொடைகள் வழங்கியதை காளையார் கோயில் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்படுகிறது.

இங்குள்ள கல்வெட்டுகளில் இரண்டு கல்வெட்டுகள் முகம்மதியர் காலத்தில் ஏற்பட்ட அழிவைப் பற்றித் தெரிவிக்கிறது. கி.பி. 1511-இல் இடிந்து கிடந்த இக்கோயில் மடப்பள்ளியைத் தன்மபாலன் என்பவர் எடுத்துக் கட்டியதைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இங்குள்ள செல்லபிள்ளையார் கோயிலும் முகமதியர் காலத்தில் அழிவுற்று பிற்காலத்தில் சிதம்பரநாதன் போன்றோரால் திரும்ப எடுத்துக் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் இரண்டு வாணாதிராயர் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை இறந்த காலம் எடுத்தான் சுந்தர தோலுடையான் மகாபலி வாணாதிராயன் கல்வெட்டுகளாகும். இவை முறையே கி.பி. 1532-லும் 1534-லும் பொறிக்கப்பட்டுள்ளன. முதல் கல்வெட்டு இவ்வாணாதிராயன் சுந்தர தோலுடையான் சந்தி என்று தனது பெயரில் சிறப்பு வழிபாட்டு சந்தி ஒன்று ஏற்படுத்தியதைத் தெரிவிக்கிறது.

இங்கிருந்த கோட்டை சிவகங்கை மன்னர் முத்து வடுகநாத பெரிய உடையத் தேவர் (கி.பி.1750-72) காலத்தில் வலுவாக்கப் பட்டது. வரி கொடாததற்காக 1772-இல் நவாப்பிற்காக கும்பினி படைகள் ஸ்மித், பாஞ்சோர் ஆகிய ஆங்கிலத் தளபதிகள் தலைமையில் வந்தபோது ஆங்கிலேயரை எதிர்த்து நடந்த போரில் முத்து வடுகநாதர் பலியான இடம் இந்த காளையார் கோயிலாகும். மானாமதுரையின் ஈசான திக்கில் அமைந்துள்ள இக்காளையார் கோயிலில் கஜபுஷ்கரணி தீர்த்தம் உள்ளது.

கி.பி. 1325-இல் சிரியா நாட்டு ஆசிரியரான திமிஸ்கி என்பவர் வந்து சென்றபொழுது "மாபா" நகரத்தில் உள்ள பிரதான நகரமாக உள்ளதை காளையார் கோயில் பற்றி வரைந்து

சென்றதை அவர் விட்டுச் சென்ற குறிப்புகள் கூறுகிறது.

காளையார் கோயிலின் தெற்கு இராஜகோபுரம் மருது சகோதரர்களால் கட்டப்பட்டது ஆகும். மருது சகோதரர்கள் தம் தாயாரின் நினைவாக இவ்வூரின் கிழக்கில் "ஆத்தா ஊருணி" என்று பெயர் பெற்ற ஊருணியை வெட்டுவித்தனர். இங்கு மருதிருவர் காலத்தில் கோபுரத் திருப்பணி முடிந்ததும், கோயிலின் தென்புறம் "யானைமடு" எனப்படும் திருக்குளம் உருவாக்கப் பெற்றது.

திருக்கானப்பேர் எனும் பாடல் பெற்ற ஸ்தலமாகிய இவ்வூரில் மூன்று சந்நிதிகள் கொண்ட திருக்கோயிலை, மருது சகோதரர்கள் கட்டி வைத்து, திருவாரூருக்கு அடுத்தபடி பெரிதாகக் கருதப்படும் தேர் ஒன்றும் செய்து வைத்து, ஆனைமரு என்னும் நீராழியையும் செய்து வைத்தார்கள். காளையார் கோயில் திருப்பணிக்கு பல காத தூரத்தில் உள்ள மானாமதுரையிலிருந்து கை வழியாக செங்கல் வந்தது என்பர். இவ்வூரில் வேத பாடசாலை, ஆகம பாடசாலை, தேவாரம் பாடசாலை, வேதாந்த மடம், நந்தவனம், அன்னசத்திரம், பசுமடம், குருபூசை மடம், திருநீறு மடம், சந்தன மடம், பன்னீர் மடம், திரு நடன மடம், நகரத்தார் விடுதி, சருவேசுவரர் ஆலயம், கங்கேசுவரர் ஆலயம், ருத்திர ஜெப பிரமாலயம், பெருமாள் கோயில், சொக்கட்டான் காய்ச்சாரி மண்டபம் ஆகியவைகளும் உள்ளன.

## திருமலையில் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள்

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை திருமலையிலுள்ள பஞ்சபாண்டவர் படுக்கைப் பகுதியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இரண்டு கல்வெட்டுகளை கண்டறிந்துள்ளது. திருமலைக் கோயிலின் பின்புறமுள்ள இரண்டு இயற்கையான குகைத் தளங்களில் கற்படுக்கைகள் செய்து சமண சமய முனிவர்கள் வாழ்வதற்கு உறைவிடம் ஏற்படுத்திக் கொடுத்ததைப் பற்றி இவை தெரிவிக்கின்றன.

'எக்காவொர் காவிதிகன் கொறிய பாளிங்' என்று எழுதப்பெற்றுள்ளது. எக்காட்டூரைச் சார்ந்த காவிதி கொற்றித் தந்த பாளிய (பாழி) என்பது இதன் பொருளாகும். இரண்டாவது கல்வெட்டு வாசகத்தின் முற்பகுதியும், பிற்பகுதியும் சிதைந்து கிடைத்துள்ள இக்கல்வெட்டு 'வகாரண்டை' என்று காணப்படு

கின்றது. இக்கல்வெட்டுகள் இரண்டும் கி.மு. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கல்வெட்டுகளைத் தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலர்கள், திரு. சு. இராச கோபால், திரு. வெ. வேதாசலம், திரு. சொ. சாந்தலிங்கம் ஆகியோர் கண்டறிந்தனர்.

## பாறை ஓவியங்கள்

திருமலையிலுள்ள குன்றின் மற்றொரு பகுதியில் இயற்கையாக குகைத்தளத்தில் பழங்காலத்துப் பாறை ஓவியங்கள் காணப்படுகின்றன. காவி வண்ணத்தில் இவை வரையப்பட்டுள்ளன. கம்புகளைக் கொண்டு சண்டையிடும் மனிதர்கள், மான், கைகோர்த்துக் கொண்டு செல்லும் மனிதர்கள் ஆகிய உருவங்கள் இவற்றில் காணப்படுகின்றன. முதலில் உருவங்கள் வரையப்பட்டு பின்னர் வண்ணம் அளிக்கப்பட்டுள்ளது.

## சிவகங்கை வட்டம் - கோவானூர்

சிவகங்கையிலிருந்து வரிச்சியூர் செல்லும் பாதையில் பில்லூர் என்னுமிடத்தில் இறங்கி கோவானூர் செல்ல வேண்டும். பேருந்து வசதி மிகக் குறைவு. இங்குள்ள முருகன் கோயில் 700 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இங்குள்ள முருகன் 4½• அடி உயரத்தில் காட்சித் தருகிறார். "இடைக்காட்டூர் சித்தர்" இத்திருத்தலம் பற்றி

"கோவானூர் பொட்டலிலே
குண்டுமணி அம்மன் சன்னதியிலே
சாகா மூலிகை படர்ந்திருக்கு
சார்ந்து பாரடி ஞானப்பெண்ணே!


என சிறப்பாகப் பாடியுள்ளார். கோவானூரில் கிடைக்கும் சாகா மூலிகை உப்பிலிருந்து பல வகை சர்வநிவாரண மருந்துகள் சித்த மருத்துவர்களால் தயாரிக்கப்படுவதாக சொல்லப்படுகிறது.


## திருவேகம்பத்து

காளையார் கோயிலுக்கு அருகாமையில் உள்ள இவ்வூரின் சிவன்கோயில் அர்த்தமண்டபத்தின் உட்புறம் தென்புறச் சுவரில் உள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு ஒன்று சிவன் கோயில் மூல நாயருக்கு நடராசர் எனப் பெயரிட்டு "நடராஜீஸ்வரம்" என்று கோயில் எழுந்துள்ளதை தெரிவிக்கும் இச்சான்று தமிழ்நாட்டு சைவ சமய வரலாற்றிற்கு கிடைத்த

திருமலையில் உள்ள மலைக் கொழுந்தீஸ்வரர்
ஆலய தரைப்படம்

NOT TO SCALE





இளையாங்குடி வட்டம்
வருவாய் கிராமங்கள்
NOT TO SCALE

புதிய செய்தியாகக் கருதப்படுகிறது.

○●○

## இளையாங்குடி வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள்

1. கலைக்குளம்
2. தாயமங்கலம்
3. உத்தமனூர்
4. நாகமுகுந்தான்குடி
5. விஜயங்குடி
6. மேலையூர்
7. கீழநெத்தூர்
8. குறிச்சி
9. மேலபிடாரிசேரி
10. கச்சாத்தநல்லூர்
11. குமாரகுறிச்சி
12. முள்ளியாரேந்தல்
13. முனைவென்றி
14. கீழையூர்
15. திருவுடையார்புரம்
16. இளையாங்குடி (தெற்கு)
17. இளையாங்குடி (வடக்கு)
18. சோத்துக்குடி
19. திருவள்ளூர்
20. கண்ணமங்கலம்
21. தெவட்டக்குடி
22. மேலத்துறையூர்
23. காரைக்குளம்
24. நெஞ்சத்தூர்
25. வள்ளக்குளம்
26. அரணையூர்
27. கருஞ்சுட்டி
28. சிறுபாலை
29. கோட்டையூர்
30. நகரக்குடி
31. பெரும்பாச்சேரி
32. எலமனூர்
33. அண்டக்குடி (வ)
34. வலையனேந்தல்
35. வடக்கு கீரனூர்
36. சாலைக்கிராமம்
37. துகவூர்
38. அரண்மனைக்காரை
39. கலங்காதான் கோட்டை
40. உடையனூர்
41. சூரணம்
42. அக்காவயல்
43. விஷ்வனூர்
44. ஆலவிடங்கன்
45. வண்டல்
46. காட்டனூர்
47. விரயதயக்கண்டன்
48. சமுத்திரம்
49. முத்தூர்

○●○

50. புதுக்கோட்டை
51. சீவலாடி
52. சாத்தனூர்

## இளையாங்குடி வட்டம் - குமாரக்குறிச்சி

இவ்வூர் பரமக்குடியிலிருந்து இளையாங்குடி செல்லும் வழியின் நடுவே அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்புறம் அமைந்துள்ள ராயன் வடகரை ஊரணியில் ஒரு கிணற்றின் அருகே கி.பி. 12-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த அழகிய முக்குடை பகவனின் சிலை ஒன்றுள்ளது. வழிபாடற்ற நிலையிலுள்ள இச்சிலையின் மேற்பகுதி அரிவாள் தீட்டப்படும் இடமாகி தேய்ந்து கொண்டே வரும் வருந்தத்தக்க நிலையில் உள்ளது.

## இளையாங்குடி வட்டம் - இளையாங்குடி

சிவகங்கைக்கு 20 மைல் தென்கிழக்காகவும், பரமக்குடிக்கு 7 மைல் வடகிழக்காகவும் அமைந்துள்ளது. 63 நாயன்மார்களில் ஒருவரான மாறன் நாயனார் பிறந்த ஊராகும். இளையாத்தாக்குடி என அழைக்கப்பட்ட இவ்வூர் இளையாங்குடி என ஆயிற்று.

இங்கு இராஜேந்திர சோழீஸ்வரர், ஞானாம்பிகை சிவன்கோயிலும் அருகாமையில் மதனவேணுகோபால் பெருமாள் கோயிலும் உள்ளது. சிவன் கோயில் ராசேந்திர சோழீஸ்வரனால் கட்டுவிக்கப்பட்டது. சமண சிற்பமும் மாறன் நாயனார் உருவமும் இங்கு உள்ளது. சோழர்கால கல்வெட்டுக்கள் உள்ளன.

மேலும் இவ்வூர் முகம்மதியர்களின் மையமுமாகும். இவர்கள் திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் பகுதியிலிருந்து வந்து குடியேறியவர்கள். இவர்களது வேலைக்குத் தக்கபடி எருது பட்டறை, நெசவு பட்டறை, கொடிக்கால் பட்டறை, சாந்து பட்டறை என நான்கு பிரிவுகளாக உள்ளனர். ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனி மசூதி, சங்கம், பஞ்சாயத்து, பொழுதுபோக்கு கிளப் ஆகியவையும் உள்ளது.

சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த சிறிய ஓய்வு அறை இவ்வூரில் உள்ளது. இவ்வூரில் உள்ள திரு. அ. ராஜாபட்டர் என்பவரிடம் உள்ள 11.3 அங்குல நீளமும் 6.9 அங்குல அகலமும்

உடைய கி.பி. 1733-ஆம் வருடச் செப்பேடு விசயரகுனாத பெரிய உடையார் தேவர் என்பவர் திருக்கை நாட்டு இந்திரா அவதார நல்லூரான இளையான்குடியில் உள்ள இராஜேந்திர சோழீஸ்வரர் கோயிலிலும், மனம் மகிழ்ந்தீஸ்வரர் கோயிலிலும் பூசை நைவேத்யம் முதலியன செய்வதற்காக கைலாச நம்பியார் என்பவருக்குத் திருவடையாபுரம் என்னும் கிராமத்தை சர்வ மானியமாக எழுதிக் கொடுத்ததைத் தெரிவிக்கிறது.

இவ்வூரை இளையான்குடி கல்வெட்டுகள் "வடவல்லத் திருக்கை இடான்குடியான இந்திரா வதார நல்லூர்" எனவும் செப்பேடுகள் துகவூர்க் கூத்தத்தில் காடர் திருக்கை நாட்டில் இந்திராவதான நல்லூரான இளையான்குடி எனவும் குறிப்பிடுகின்றன.

இவ்வூரில் பிறந்த மாறன் என்ற திருத்தொண்டர் இளையான் குடி மாறன் என்ற பெரியபுராணத்தில் பேசப்படுகிறார். இவ்வூரைச் சேர்ந்த ப. ரா. செய்யது அப்துல் சாகிப் என்பவரால் "ரங்கோன் வழிநடைச் சிந்து" எழுதப்பட்டுள்ளது. சீனி முகம்மது புலவர் என்பவரால் "ஞானானந்தக் களிப்பு" "நாகூர் கற்தூரி" பாடல்கள் எழுதப்பட்டுள்ளது. "அம்பலம்" "சேர்வை" விகுதிகளையுடைய பெயர்கள் இஸ்லாமியர்களது வழக்கில் திருப்புத்தூரைப் போன்று இவ்வூரிலும் உள்ளது.

இவ்வூரில் உள்ள தமிழ் முஸ்லீம்கள் வேற்றுமொழிச் சொற்களை நிறைய கலந்து பேசுகின்றனர். இவ்வூர், மக்கள் வழி முறை அடிப்படையில் இரண்டு பிரிவுகளை உடையது. ஒன்று நெசவுப் பட்டடை மற்றொன்று எருத்துப் பட்டடை என்றும் வழங்கப்படுகிறது. பெரும் எண்ணிக்கையில் இஸ்லாமிய சிறுகதைகளை குவித்த எழுத்தாளர்கள் ஷேக்கோ, எஸ்.எம்.எஸ். முகம்மது காசீம் இவ்வூரை சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

## இளையாங்குடி வட்டம் - சாலைக்கிராமம்

பரமக்குடிக்கு 12 மைல் வடக்காக அமைந்துள்ளது. இங்குள்ள கங்கை ஊரணியை தோண்டும்பொழுது சாலைக்கிராமம் என்ற கல் கிடைக்கப் பெற்றமையால் இவ்வூர் இப்பெயர்

பெறலாயிற்று. நைனார் கோயிலுக்குட்பட்ட இறைவன் வரகுணோஸ்வரர் இறைவி திருக்காமக்கோடீஸ்வரி உள்ள சிவன் கோயிலில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. வரகுண பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும்.

ப்ராட்டஸ்டண்டு, மற்றும் ரோமன் கத்தோலிக்க கிறித்துவாலயம், மற்றும் இரண்டு மசூதிகளும் இவ்வூரில் உள்ளது.

கோயில் நிலைகளில் அமைந்துள்ள கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டும், கோயில் அதிட்டானம் மற்றும் சுவர்களில் காணப்படும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டும் மிக முக்கியமானதாகும். இவ்வூர் துவ்வூர்க் கூற்றத்தில் அடங்கிய ஒரு பிரமதேயம் எனவும், இவ்வூர்க் கூற்றம் மயிமாகர வளநாடு என்ற பெயராலும் அழைக்கப்பட்டது எனவும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.


இவ்வூரின் ஒரு பகுதியில் சிதைந்து மேடாகிப் போன கோயில் ஒன்று நெடுங்காலமாக உள்ளது. அதே இடத்தில் புதிதாக சேது காளியம்மன் கோயில் என்னும் கிராம தெய்வக் கோயில் ஒன்று கட்டியுள்ளது.

1996-இல் திரு. சொ. சாந்தலிங்கம், தொல்பொருள் அலுவலரால் மேற்படி கோயில் கட்டுமான பணியின்பொழுது கிடைக்கப் பெற்ற தூண்களை கோயிலின் நிர்வாக குழுவினரது குறிப்பின்படி ஆய்வு செய்ததில் 10-ஆம் நூற்றாண்டின் வட்டெழுத்துக் கல்வெட்டினையும் 13-ஆம் நூற்றாண்டின் தமிழ் கல்வெட்டினையும் ஆய்வு செய்து புதிய செய்திகளை வெளியிட்டுள்ளார்.

இவ்வூர்க் கூற்றத்துள் அடங்கிய பிரமதேயமான சாணக்கிராமத்து நாலாஞ்சேரியில் திரு ஆய்க்குலத்து எம்பெருமான் கோயில் என்னும் பெயர் கொண்ட வைணவக் கோயில் அமைந்திருந்தது தெரிய வருகிறது. இக்கோயிலுக்காக இவ்வூர்ச் சபையாரும், சபைக்குச் சமைந்த பண்ணை செய்வோரும், வேலி செய்வோரும் கூடி ஒரு தானம் செய்துள்ளனர். அதன்படி

இத்திருமால் கோயிலுக்கு அளிக்கப்பட்ட திருவிடையாட்ட நிலத்து விரிவினால் அரையே இரண்டு மா நிலத்துக்கு உரிய சபா வினியோகம், கற்பூர விலை, திருவெழுச்சி ஆகிய வரிகளை நீக்கம் செய்துள்ளதை குறிப்பதே இக்கல்வெட்டின் முக்கிய கருத்தாகும்.

இக்கல்வெட்டின் மூலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டளவில் இவ்வூரில் வரகுணஈஸ்வரம் என்னும் பெயரில் சிவன்கோயிலும் திருஆயக்குலதெம் பெருமான் கோயில் என்னும் பெயரில் வைணவக் கோயிலும் சிறந்து விளங்கியுள்ளன என்பது தெரியவரும். இக்கோயிலுக்காக இவ்வூர்ச் சபையாரும், சபைக்கு சமைந்த பண்ணை செய்வோரும், வேலி செய்வோரும் கூடி ஒரு தானம் செய்துள்ளனர். அதன்படி இத்திருமால் கோயிலுக்கு அளிக்கப்பட்ட திருவிடையாட்ட நிலத்து விரிவினால் அரையே இரண்டு மா நிலத்துக்கு உரிய சபா வினியோகம், கற்பூர விலை, திருவெழுச்சி ஆகிய வரிகளை நீக்கம் செய்து கொடுத்துள்ளனர். இவ்வரித் தள்ளுபடி பற்றிய செய்தியே இக்கல்வெட்டின் முக்கிய கருத்தாகும்.


தேவகோட்டை வட்டம்
வருவாய் கிராமங்கள்
NOT TO SCALE

## தேவகோட்டை வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள்

1. உஞ்ஞனை
2. இருவாணிவயல்
3. வெங்கலூர்
4. புசலக்குடி
5. <u>கண்டதேவி</u>
6. பேனாட்டுக் கோட்டை
7. ஆராவயல்
8. மேலசெம்பொன்மாரி
9. சிறுமருதூர்
10. கண்ணன் கோட்டை
11. தண்ணீர்வயல்
12. எழுவன் கோட்டை
13. ஐகாரைக் கோட்டைவயல்
14. நச்சங்குளம்
15. வெட்டியாலங்கம்
16. நெடுங்குளம்
17. வாகைக்குடி
18. கள்ளங்குடி
19. காரை
20. கோட்டூர்
21. புதுக்கோட்டை
22. உடையாச்சி
23. திருமண வயல்
24. மஞ்சனை
25. தாளனேந்தல்
26. வசந்தனை
27. பனங்குளம்
28. காசிக்கோட்டை
29. கடகம்பட்டி
30. மாவிடுதிக்கோட்டை
31. தாளக்காவயல்
32. நல்லான்குடி
33. தக்கன் வயல்
34. சட்டிக்கோட்டை
35. இரவசேரி
36. தலையூர்
37. லக்கானி வயல்
38. சித்தனூர்
39. தெரலப்பூர்
40. தங்கங்குடி
41. புட்டூரணி
42. கோடக்குடி
43. மாடக்கோட்டை
44. நாகமங்கலம்
45. கீழ்மடை
46. காளத்தூர்
47. சிறுகனூர்
48. நாரண்மங்கலம்
49. பூலாங்குடி
50. கண்டியூர்
51. கண்ணன்குடி
52. கப்பலூர்
53. காலப்பன்குடி
54. சடையமங்கலம்
55. பொற்குடி
56. <u>அனுமந்தகுடி</u>
57. திருப்பக்கோட்டை
58. பாகயானை பிரண்டை
59. சாக்கண்டி
60. திடக்கோட்டை
61. முப்பையூர்
62. கற்காலத்தூர்
63. குருந்தன் கோட்டை
64. அடைக்குடி
65. விளிமார்
66. வாடிநியூர்
67. சலுகை
68. கும்மணி

## தேவகோட்டை - கண்டதேவி

தேவகோட்டை நகரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள இவ்வூரில் 350 ஆண்டுகள் பழமை வாய்ந்த சுவர்ண மூர்த்தீஸ்வரர் (ம) பெரிய நாயகி அம்மன் கோயில் உள்ளது. இங்கு ஹனுமான் இராமனிடம் "கண்டேன் தேவியை" எனக் கூறியதால் இவ்வூர் கண்டதேவி என ஆயிற்று. இங்குள்ள கோயில் சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த 84 கோயில்களில் ஒன்றாகும்.

## தேவகோட்டை வட்டம் - அனுமந்தகுடி

விரிசுளி ஆற்றங்கரையின் வடக்கில் அமைந்துள்ள இவ்வூர் தேவக்கோட்டையிலிருந்து 4 மைல் கிழக்காக வட்டிணம் சாலையில் அமைந்துள்ளது.

இவ்வூர் ஏற்கனவே வெள்ளத்தால் அழிந்த சிவன் கோயிலின் பெயரில் வந்தது எனவும், கோயிலில் உள்ள சிற்பத்தில் இருக்கும் சொக்க வணிகன் ஒருவன் களிங்கராயன் என்பவனிடம் கோயில் கட்டுவதற்கு பசுமாட்டின் மிதிஅடி ஒன்றுக்கு ஐந்து தங்க காசு வீதம் இடம் வாங்கியதால் இவ்வூர் அடிமிதிக்குடி என பெயர் பெற்று நாளடைவில் மருகி அனுமந்தகுடி எனவும் பெயர் பெயரலாயிற்று.

இங்குள்ள சையத் முகம்மது மீராபுஹாரி சப் சாலுக்குதின் சமாதி மிகவும் புகழ் பெற்றதாகும்.

இவ்வூரில் உள்ள மாளவறாத சுவாமி என்ற சமணர் கோயில் பிரசித்தி பெற்றதாகும். இங்குள்ள விசய நகரத்து கல்வெட்டு ஒன்று (கி.பி.1535) முத்தாற்றுக் கூற்றத்து குருவடி மிடி..... என்னும் ஜினேந்திர மங்களம் என்று குறிப்பிடுகின்றது. இன்றும் சமணர் திருமேனிகள் உள்ளதாக அறியப்படுகிறது. இவ்வூர் ஆற்றின் தென்கரையில் உள்ள சேதுபதி கோட்டையை இன்றும் இடிந்த நிலையில் காணலாம். இந்த கோட்டை ஏழு கோட்டை நாட்டில் உள்ள கோட்டையில் ஒன்றாகும்.

## தேவகோட்டை வட்டம் - சிறுவெத்தி

தேவகோட்டை அருகாமையில் உள்ள சிற்றூரான சிறுவெத்தியில் தரைமட்டமாக உள்ள சிவன் கோயிலின்

சிற்றாலயமாக பைரவர் கோயில் வாயில் நிலைக்காலில் உள்ளது. இவ்வூரின் பழைய பெயர் சிறுபுத்தூரான வீரபத்திர நல்லூர் என கல்வெட்டிலிருந்து தெரியவருகிறது.

சிறுசிறு வரிகளாக 60 வரிகளில் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. பிற்கால பாண்டிய மன்னனான வீரபாண்டியனின் 5-ஆம் ஆண்டு ஆட்சிகாலத்தில் இவ்வூரில் உள்ள "மூலத்தான முடைய நாயனார்" என்ற சிவபெருமானது பெயரில் "திருநாமத்துக்காணி" நிலம் வழங்கப்பட்டு "வரி" என்ற நில வருவாய் குறித்த பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யப் பட்டுள்ளதையும், அது தொடர்பாக கோயிலார், ஊரார் மற்றும் அதிகாரிகள் ஒப்பமிட்டுச் சான்றளித்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இந்நிலத்திற்கான கடமை, கற்பூரவில்லை, பச்சை, விநியோகம், எச்சோறு முதலிய வரிகளுக்காக ஆண்டுதோறும் ஒரு "அச்சு" காசு வரியாகப் பெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டு இவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

## தேவகோட்டை வட்டம் - தேவகோட்டை

இவ்வூர் காரைக்குடியிலிருந்து மிக அருகாமையில் உள்ளது. தேவி கோட்டை என்பதே "தேவகோட்டை" ஆயிற்று என சொல்லப்படுகிறது. இங்குள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் வணிகம், வர்த்தகத்தின் முதலிடத்தை வகிக்கிறார்கள். மேலே போடும் அங்கவஸ்திரத்தை விசிறி போல மடிக்கும் "விசிறி மடிப்பு முறை" இப்பகுதியில் பிரபலமானவை.


திருப்பத்தூர் வட்டம்
வருவாய் கிராமங்கள்
NOT TO SCALE

# திருப்புத்தூர் வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள்

1. குளத்துப்பட்டி
2. வரப்பூர்
3. உலகாம்பட்டி
4. மொண்டக்குடிப்பட்டி
5. நெடுவயல்
6. மின்னமலைப்பட்டி
7. மேலவண்ணாரிருப்பு
8. மணலூர்
9. செம்மன்பட்டி புதூர்
10. கீழவயல்
11. வலசப்பட்டி
12. முசுண்டப்பட்டி
13. கரிசல்பட்டி
14. தர்மபட்டி
15. செட்டிக்குறிச்சி
16. பிரான்பட்டி
17. மேலப்பட்டி
18. கிருங்கக்கோட்டை
19. பிரான்மலை
20. சிறுமருதூர்
21. களப்பூர்
22. சிங்கம்புணரி (வடக்கு)
23. சிங்கம்புணரி (தெற்கு)
24. களப்பூர்
25. காயம்பட்டி
26. சூரக்குடி
27. சதுர்வேதிமங்கலம்
28. முறையூர்
29. மாதவராயன்பட்டி
30. கருப்பூர்
31. நாட்டார்மங்கலம்
32. காரையூர்
33. அ. தெக்கூர்
34. மகிபாலன்பட்டி
35. ஒழுகமங்கலம்
36. நெற்குப்பை
37. தூவர்
38. வேலங்குடி
39. செவ்வூர்
40. பூலாங்குறிச்சி
41. திருக்காலக்குடி
42. இளையாத்தக்குடி (வடக்கு)
43. இளையாத்தக்குடி (தெற்கு)
44. செம்மகம்பட்டி
45. ஆத்தங்குடி
46. சிறுகுடல்பட்டி
47. நெடுமரம்
48. சுண்டக்காடு
49. பையூர்
50. காவனூர்
51. கண்டவராயன்பட்டி
52. வைரவன்பட்டி என்ற
53. கருகப்பிலாம்பட்டி
54. திருவுடையார்பட்டி
55. கோட்டையிருப்பு
56. தேவரம்பூர்
57. இரணசிங்கபுரம்
58. திருப்புத்தூர்
59. வணியன்காடு
60. தெம்மாபட்டி
61. காட்டாம்பூர்
62. வைரவன்பட்டி (தி)
63. தாணிப்பட்டி
64. பட்டக்குறிச்சி
65. சுண்ணாம்பிருப்பு
66. பிராமணப்பட்டி
67. சேவல்பட்டி
68. மேலையூர்

69. <u>மாத்தூர்</u>
70. எருமைப்பட்டி
71. நைனாப்பட்டி
72. ஜெயங்கொண்டான்
73. <u>மல்லக்கோட்டை</u>
74. <u>வடவம்பட்டி</u>
75. மாம்பட்டி (தெற்கு)
76. மாம்பட்டி (வடக்கு)
77. மாம்பட்டி தேவஸ்தானம்
78. <u>ஏரியூர்</u>
79. <u>திருக்கோட்டியூர்</u>
80. சுள்ளாங்குடி
81. அரளிக்கோட்டை
82. வடமாவழி
83. கருங்குளம்
84. பட்டமங்கலம் (மேற்கு)
85. பட்டமங்கலம் (கிழக்கு)
86. வெளியாத்தூர்
87. <u>பெருச்சி கோயில்</u>
88. திருக்காலபட்டி
89. கள்ளிப்பட்டி
90. செவரக்கோட்டை
91. நடுவிக்கோட்டை கீழையூர்
92. நடுவிக்கோட்டை மேலையூர்
93. கம்பனூர்
94. அழகாபுரி
95. தென்கரை
96. சிரவயல்
97. <u>நேமம்</u>
98. <u>குன்னகுடி</u>
99. தட்டட்டி
100. இளங்குடி
101. ஆலங்குடி

## திருப்புத்தூர் வட்டம் - பிரான்மலை

திருப்புத்தூருக்கு 15 மைல் வடக்காக அமைந்துள்ளது. இவ்வூரும் இதனைச் சார்ந்த மலையும், பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் செல்லும் பண்டைய பெருவழியில் அமைந்திருந்தமையால் அரசியல் சிறப்பும், வணிகச் சிறப்பும் வாய்ந்தமையாக விளங்கியிருக்கிறது. இம்மலையில் முற்காலப் பாண்டியர் காலத்தில் சிவனுக்காக எடுப்பிக்கப்பட்ட குடவரைக்கோயில் ஒன்று உள்ளது. இதில் சிவன், உமாமகேஸ்வரனாக விளங்குகிறார். இக்குடவரை கோயில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகும். இதன் முன்பு பிற்காலத்தைச் சார்ந்த மண்டபமும், பரிவார ஆலயங்களும் உள்ளன. கல்வெட்டுகளில் இம்மலை திருக்கொடுங்குன்றம் என்று குறிப்பிடப்படுகிறது. தற்போது இம்மலை பிரான்மலை என்று அழைக்கப்பட்டு வருகிறது. சிவபெருமான் உறைகின்ற மலையாக இது விளங்குவதால், பிரான்மலை என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். இம்மலையைக் கடையேழு வள்ளல்களில் ஒருவனாக விளங்கிய பாரிவள்ளலின் மலை என்றும் ஒரு சாரார் கருதுகின்றனர்.

இவ்வூரில் எழுதப்பட்ட வீரபாண்டியன் (கி.பி.946-966) குலசேகரப் பாண்டியன் (கி.பி.1268-1308) சுந்தரபாண்டியன் மாறவர்மன் (கி.பி.1216-1235) சிம்மநரசிம்மராயர் (கி.பி.1499-1500) ஆகியோரது கல்வெட்டுகள் உள்ளன. பிரான் மலையில் நகரத்தார் பன்னெடுங்காலம் நிலைத்து இருந்தமைக்குச் சான்றாக இவ்வூரில் கல்வெட்டுகள் உள்ளன.

இங்குள்ள கோயிலில் அரிசி, பருப்பு முதலியவைகளை அளப்பதற்கு “திருநாவுக்கரசு நாழி” என்ற பெரும்படி பயன்படுத்தப் பட்டதாக (கி.பி. 1723) கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இம்மலையில் முடிகொண்ட இறைவனுக்கும், இக்கோயிலுக்கும் பல தானங்கள் அளிக்கப்பட்டதைப் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டு தெரிவிக்கிறது. சுந்தரபாண்டியன் காலத்தில் திருநீறு பேணி அணிவான் என்ற பரதேசி ஒருவன் இக்கோயிலுக்கு பித்தளை விளக்கு ஒன்று செய்தளித்துள்ளான். அம்மை அறப்பெருஞ்செல்வி என்ற பெண்ணொருத்தி இக்கோயிலில் திருவிளக்கு எரிப்பதற்கு ஆடுகளை தானமாக அளித்துள்ளாள்.

ஜடாவர்ம சுந்தரபாண்டியன் வழிபாட்டிற்காக இக்கோயிலுக்குப் பல நிலங்களைத் தானமாக அளித்துள்ளான். ஆலவாய் உடைய நாயனார், அம்பலப் பெருமாள் என்ற பெயரில் இம்மலையில் பல சிற்றாலயங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இம்மலையில் இருந்த சுப்பிரமணியர் கோயிலில் அருவியூரைச் சேர்ந்த மயிலேறும் பெருமாள் என்பவன் இளைய பிள்ளையாரது செப்புத் திருமேனியை அவரது தேவியரோடு செய்வித்துள்ளான். இக்கோயில் கோபுரத்தை கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் புவனேக வீரன் என்பவன் கட்டியுள்ளான். இது புவனேக வீரன் திருவாசல் என்ற பெயரில் விளங்கியுள்ளது.

இவ்வூர் வணிகப் பெருவழியில் இருந்தமையால் இவ்வழியில் சென்ற வணிக குழுக்கள் இக்கோயிலுக்குப் பேராதரவு அளித்திருக்கின்றனர். அவர்கள் இக்கோயிலில் தங்கி தங்களது கூட்டங்கள் நடத்தியிருக்கின்றனர். மேலும் இவ்வழியில் எடுத்துச் செல்லப்பட்ட வணிகப் பொருட்களுக்கு வசூலிக்க வேண்டிய வரி பற்றியும் முக்கிய முடிவெடுத்திருப்பதை கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. தமிழ்நாட்டு வணிகர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வெட்டு இப்பிரான்மலை கோயிலிலே பொறிக்கப்பட்டுள்ளது.

இம்மலையில் நாயக்கர் காலத்தில் அறுபத்து மூவர் திருமடம் என்ற சைவ மடம் ஒன்று இருந்திருக்கிறது. மதுரை நாயக்க மன்னர்களில் ஒருவராக விளங்கிய விஜயரங்க சொக்கநாத நாயக்கர் இக்கோயிலுக்குப் பல தானங்களை அளித்துள்ளார். இக்கோயிலில் கலைச் சிறப்பு வாய்ந்த கதவுகளும், திருவாசி விளக்குகளும் உள்ளன. இக்கோயில் பழங்காலத்திலிருந்து ஆடற்கலையிலும், பாடற்கலையிலும் சிறப்பு பெற்ற ஊராக விளங்கி வந்திருக்கிறது. ஆடர்வல்ல பல தேவரடியார்கள் இவ்வூரில் இருந்திருக்கின்றனர்.

கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் கால கல்வெட்டு ஒன்று திருப்புத்தூர் அருகே உள்ள பிரான்மலை பகுதியிலுள்ள வடசரிவில் பிரான்மலையிலிருந்து மலைப்பாதை வழியாக கட்டுக்குடிப்பட்டி என்னும் ஊருக்கு செல்லும் வழியில் மேல் வண்ணாரிருப்பு என்னும் கிராமத்தின் அருகே உள்ள

இடிபாடுகளுடைய கோயிலில் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்று திரு. சீ. லட்சுமணன், ஓய்வு பெற்ற தமிழாசிரியர், சிங்கம்புணரி அவர்கள் கண்டுபிடித்துள்ளார்.

**கல்வெட்டு**

"சுவஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சோணாடு
வழங்கியருளிய
சுந்தரபாண்டிய தேவற்க்கு யாண்டு யறிஆவது மணலூர்
நாட்டு பூண்டியான சிரிபுண்டரிக நல்லூர் மறமாணிக்க
ஈசுவர நாயனாருக்கு பூண்டி ஊரோடும் முசு
குன்றத்தூரோடும்
சிநலாணம் ஊரோமும் பாலைகுறிச்சி ஊரோமும்
இற்றானோரோமும் நாங்கள் இந்நாயனார் மறமாணிக்க
ஈசுவரநாயனாருக்கு குடுத்த பரிசாவது"

மீதமுள்ள எழுத்துக்கள் சிதைந்தும், அழிந்தும் போய்விட்டது.

## திருப்புத்தூர் வட்டம் - சிங்கம்புணரி

காரைக்குடிக்கு 27 மைல் வடக்காகவும், திருப்புத்தூருக்கு 14 மைல் மேற்காகவும் அமைந்துள்ளது.

சிங்கம்பிடாரி என அழைக்கப்பட்ட இவ்வூர் மருவி சிங்கம்புணரி என பெயர் பெறலாயிற்று. இங்கு சஞ்சீவி மலை ஒன்றும் உள்ளது. சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த சேவுகப் பெருமாள் கோயில் மிக முக்கியமானதாகும். அம்மன் பிடாரி அம்மன் என அழைக்கப்படுகிறது. இவ்வூரில் மருதுபாண்டியர் கல்வெட்டு ஒன்று உள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - சூரக்குடி

கானாடுகாத்தானுக்கு 2 மைல் தெற்காகவும், காரைக்குடிக்கு 6 மைல் வடக்காகவும், திருப்புத்தூருக்கு 13 மைல் வடகிழக்காகவும் உள்ளது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் ஒன்பது கோயில்களில் ஒன்று இங்குள்ளது. 120 வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட

இவ்வாலய கோபுரம் 50 அடி உயரம் உடையதாக உள்ளது. இக்கோயிலுக்கு அரை மைல் தெற்காக சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த பழைய சிவன் கோயில் ஒன்றும் உள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - சதுர்வேதிமங்கலம்

இவ்வூர் சிங்கம்புணரியிலிருந்து திருப்புத்தூர் செல்லும் வழியில் அமைந்துள்ளது. இதன் பழைய பெயர் மட்டியூர் என்பதாகும். பாண்டியர் காலத்தில் இவ்வூர் நான்கு வேதவல்ல அந்தணர்கள் வாழ்கின்ற குடியிருப்பாக மாற்றப்பட்டு நிருபசேகர சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் விளங்கியுள்ளது. நிருபசேகரன் என்பது பாண்டியர்க்குரிய பட்டப்பெயர்களில் ஒன்றாகும். ஆனால் இப்பாண்டியன் யார் என்று தெரியவில்லை.

இவ்வூரில் சோழர் மற்றும் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. இவற்றில் பழமையானது முதலாம் குலோத்துங்கனுக்குரியதாகும். இம்மன்னன் தவிர மாறவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்ம சுந்தரபாண்டியன், ஜடாவர்ம விக்கிரம பாண்டியன், மாறவர்ம குலசேகர பாண்டியன் ஆகியோரது கல்வெட்டுகளும் இவ்வூரில் உள்ளன.

கேரள சிங்க வளநாடு என்ற நாட்டுப் பிரிவில் அமைந்துள்ள இவ்வூரில் ருத்திரகோடீஸ்வரர் என்ற பெயரில் சிவன் கோயில் ஒன்று சிறப்புடன் விளங்கியிருக்கிறது. தற்போது இப்பெயரிலேயே இச்சிவன் கோயில் வழிபாட்டில் இருந்துவருகிறது. இக்கோயிலில் இருந்த ஆளுடைய பிள்ளையார்க்கு அருவியூரைச் சேர்ந்த வணிகன் புற்றிடம் கொண்டான் திருச்சிற்றம்பலம் உடையான ஞானசம்பந்தன் என்பவன் பல நிவந்தங்களை அளித்துள்ளான் என்பதை விக்கிரம பாண்டியன் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இதே அருவியூரைச் சேர்ந்த மற்றொருவன் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் தட்சிணாமூர்த்தி திருமேனியை எழுந்தருளச் செய்துள்ளான். ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் இக்கோயிலில் இருந்த கூத்தாரும், தேவருக்கும் (நடராஜர்) அவரது நாச்சியாருக்கும் (சிவகாமி அம்மன்) சிறப்பு

வழிபாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இச்செப்புத் திருமேனிகளுக்கு மாறவர்ம சுந்தரபாண்டியன் காலத்திலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வந்திருக்கின்றன. இதனை இவ்வூரின் தலைவர்களுள் ஒருவனாக விளங்கிய கதிராயிரம் உடையான் என்பவன் செய்திருக்கிறான். சைவ குரவர்கள் நால்வருள் ஒருவராக விளங்கிய ஞானசம்பந்தருக்கும் செப்புத் திருமேனி ஒன்று இக்கோயிலில் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதனை அருவியூரைச் சேர்ந்த வணிகன் ஒருவன் செய்திருக்கின்றான். அருவியூரைச் சார்ந்த திருச்சிற்றம்பல உடையான் என்பவன் இக்கோயிலில் பங்குனி திருநாள் வெகு சிறப்பாக கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளான். முதல் மாறவர்ம சுந்தர பாண்டியன் தான் பிறந்த அவிட்டம் திருநட்சத்திரத்தில் திங்கள் தோறும் சிறப்பு பூஜை ஒன்றை இக்கோயிலில் நடத்துவதற்காக 1½ வேலி நிலம் விக்கிரம பாண்டிய நல்லூரில் தானமாக அளித்துள்ளான். அச்சிறப்பு வழிபாட்டு சந்நிதிக்கு (பூஜைக்கு) சுந்தரபாண்டியன் சந்தி என்று பெயரிட்டு அதனை அக்கோயிலில் நடத்திவரச் செய்துள்ளது இக்கோயிலின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இவ்வூரில் இருந்த தப்பிலாவாசகன் திருமடை வளாகத்தில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் திருஞானசம்பந்தன் குகை என்ற பெயரில் சைவ மடம் ஒன்று சிறப்புடன் விளங்கியிருக்கின்றது. இதனை ஈசான தேவன் என்ற சைவ சமய பெரியார் ஒருவர் தோற்றுவித்திருக்கின்றார். வீரமழகிய நிஷதராஜன் என்ற அதிகாரி ஒருவன் இம்மடத்தில் வந்து தங்கிய பயணிகள் உண்பதற்காக நிலங்கள் பலவற்றை தானமாக அளித்துள்ளான். இவ்வூரில் சோழன் வாசல் திறந்தான் மடம் என்ற மற்றொரு மடமும் இருந்துள்ளது. இதற்க கொங்கு நாட்டைச் சேர்ந்த இராஜராஜபுரத்து வானக்கோவரையன் என்பவன் சில நிலங்களை அளிக்க் ஏற்பாடு செய்துள்ளான்.

திருநாராயண விண்ணகர் என்ற பெயரில் பெருமாள் கோயில் ஒன்று இவ்வூரில் இருந்ததை இங்குள்ள கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. பெருமாள் கோயிலை விட சிவன்

கோயிலே இவ்வூரில் சிறப்புடன் விளங்கியிருப்பதைக் கல்வெட்டு மூலம் உணரமுடிகிறது. இவ்வூருக்கு அருகில் அமைந்த வணிகர்கள் வாழ்ந்த நகரமாகிய அருவியூர் ஆன குலசேகரப் பட்டணத்து வணிகர்கள் பேராதரவு அளித்து வந்திருப்பது இதன் சிறப்புக்கு ஒரு காரணமாகக் கூறலாம்.

## திருப்புத்தூர் வட்டம் - மகிபாலன்பட்டி

திருப்புத்தூருக்கு வடமேற்காக 6 மைல் தொலைவிலும் காரைக்குடிக்கு 18 மைல் மேற்காகவும் அமைந்துள்ளது இவ்வூர்.

இவ்வூர் சுமார் 2000 ஆண்டுகட்கு முற்பட்ட கிராமம் ஆகும். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சிறப்புமிக்க பிறப் பாடலைப் பாடிய கணியன் பூங்குன்றனார் என்கிற சங்கப்புலவர் பிறந்த ஊர் இதுவாகும். பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் இக்கிராமம் பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் உள்ள குன்றின் மீது குடவரைக் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக்குடவரைக் கோயில் முற்காலப் பாண்டியர்கள் காலத்தினைச் சார்ந்ததாகும். இக்கோயிலில் லிங்கமும், கணேசர் உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் சுவர்களில் பல்வேறு செய்திகளைத் தரும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பெரிய லிங்கம் குடவரைக் கோயிலின் ஒரு பகுதியாகும்.

இவைகள் தவிர பூங்குன்றநாயகி அம்மன் கோயில், விநாயகர் கோயில், மங்கள விநாயகர் கோயில், சித்தி விநாயகர் கோயில் ஆகியவை உள்ளன.

## திருப்புத்தூர் வட்டம் - நெற்குப்பை

நகரப் பஞ்சாயத்தான இவ்வூர் திருப்புத்தூருக்கு வடமேற்காக 72 மைல் தொலைவில் உள்ளது. 25 மைல் கிழக்காக உள்ள காரைக்குடி புகைவண்டி நிலையம் இதன் அருகாமையில் உள்ளதாகும். 2600 கலம் கொண்டும் தானியக் களஞ்சியம் நாயக்கர் காலத்தில் இங்கு இருந்தது. 5000 கலம் தானியம் கொண்டும் களஞ்சிய அறைகளை இன்றும் காணலாம்.

இங்குள்ள பழைய சிவன் கோயிலில் ஏராளமான கல்வெட்டுக்கள் உள்ளன. இவ்வாலயம் இப்பகுதியை ஆண்ட தளபதியான வெங்கப்ப நாயக்கரால் கட்டுவிக்கப்பட்டது. இறைவன்

மனமோக கண்டீஸ்வரர் இறைவி மரகதவல்லி அம்மாள் ஆகும். இவ்வாலயம் சிவகங்கை தேவஸ்தான ஆலயம் ஆகும். நெற்குப்பையினைச் சார்ந்த பரிமருதுபட்டி கிராமத்தில் பெரி மருதீஸ்வரர் சமேத பார்வதி அம்மன் கோயில் உள்ளது. இங்குள்ள லிங்கம் வட்டவடிவில் இல்லாமல் செவ்வக வடிவில் உள்ளது. இதன் தலவிருட்சம் மருதமரம் ஆகும்.

இவைகள் தவிர சேவுக பெருமாள் கோயில், அய்யனார் கோயில், நகரத்தார் சுப்பிரமணிய சுவாமி கோயில் மற்றும் கிராம தெய்வமான அழகை அணைச்சி அம்மன், பிள்ளையார், பிடாரி ஆகியவையும் இவ்வூரில் உள்ளது. தமிழ் மேதையான திரு. எல்.பி.கே.ஆர். இராமநாதன் செட்டியார் இவ்வூரை சேர்ந்தவராவார்.

## திருப்புத்தூர் வட்டம் - வேலங்குடி

இவ்வூர் திருப்புத்தூருக்கு வடகிழக்காக 17 மைல் தொலைவிலும், காரைக்குடிக்கு வடக்காக 4 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது.

முற்காலத்தில் காடுகளாக இருந்த இப்பகுதியில் வேலன் என அழைக்கப்பட்ட முருகக் கடவுள் சிவனுக்குப் பூஜை செய்தமையால் இப்பெயர் பெறலாயிற்று எனக் கூறப்படுகிறது. பழைய நகரத்தார் ஆலயம் இக்கிராமத்தின் வடக்குப் பாகத்தில் ஏராளமான கல்வெட்டுகளுடன் இருந்தது. மிகவும் மோசமான நிலையில் ஏராளமாக பழுதடைந்து இருந்தமையால் இடிக்கப்பட்டு புதிய கோயில் கட்டுவிக்கப்பட்டது. 18.6.1937-இல் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இக்கோயில் கட்ட 27 வருடங்கள் பிடித்தது. இவ்வாலயம் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம், நாகமண்டபம், பிரகார மண்டபம், கோபுரம் ஆகியவற்றுடன் 10½ இலட்சம் ரூபாய் செலவில் கட்டுவிக்கப்பட்டது. இறைவன் கந்தீஸ்வர ஸ்வாமி கிழக்கு நோக்கியும், இறைவி காமாட்சி அம்மாள் தெற்கு நோக்கியும் உள்ளது. மற்ற நகரத்தார் கோயில்களைப் போன்று எந்தவித கலைநுணுக்கமும் இக்கோயிலிலும் இல்லை.

## திருப்புத்தூர் வட்டம் - பூலாங்குறிச்சி

பொன்னமராவதிக்கு அருகில் அமைந்த இவ்வூரில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வரலாற்றுச் சிறப்புமிக்க கல்வெட்டுகளைக் கண்டுபிடித்துள்ளது. இவ்வூர் மதகுமலைச் சரிவின் தென்புறப் பகுதியில் கி.பி. 400-ஐச் சேர்ந்த மூன்று கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று முழுவதுமாக சிதைந்துவிட்டது. மற்ற இரண்டு கல்வெட்டுகளில் ஒன்று சேந்தன் என்ற மன்னனுக்குரியதாகும். மற்றொன்று அவனது மகனான சேந்தன் கூற்றனுக்குரியதாகும். சேந்தனின் கல்வெட்டு நிலக்கொடை அளிக்கப்பெற்றதைப் பற்றித் தெரிவிக்கிறது. இதில் கடலூர் நாட்டைச் சேர்ந்த வெள்ளேற்றான் மங்கலம் என்ற பிரம்மதேயம் குறிப்பிடப்படுகின்றது. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் பிரம்மதேயத்தைப் பற்றி குறிப்பிடப்படும் பழமையான குறிப்புகளில் இதுவும் ஒன்றாகும். சேந்தன் கூற்றன் கல்வெட்டில் மூன்று செய்திகள் குறிப்பிடப்படுகின்றன. வேள்கூரில் இருந்து பச்செறிச்சின் மலையில் தேவகுலம் அமைக்கப்பட்டதையும், முத்தூற்றுக் கூற்றத்தில் விளமர் என்ற ஊரில் தேவகுலம் அமைக்கப் பட்டதையும், மதுரையில் உளிவயத்தன் குளத்தின் கரையில் வசிதேவனார் கோட்டம் அமைத்ததையும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இச்செயல்களைச் சேந்தன் கூற்றனின் கடற்படைத் தலைவன் செய்திருக்கின்றான்.

இக்கல்வெட்டின் அருகில் பராந்தகச் சோழன் காலத்தில் செய்து வைக்கப்பட்ட தலையிழந்த அய்யனாரின் உருவம் ஒன்று காணப்படுகிறது. இதனை சூரன்நாகை என்பவன் செய்திருக்கின்றான். இதற்கு காவலாக திசையாயிரத்து ஐநூற்றுவர் என்ற வணிகர் குழு இருந்திருக்கிறது. இச்செய்திகளை இச்சிலையருகில் காணப்படும் பராந்தகச் சோழன் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இதுதவிர இம்மலையில் சமணர்கள் வாழ்ந்த பழமையான குகைதளம் ஒன்றும் உள்ளது. இக்குகைதளத்தின் வெளிப்புறம் முகப்பில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த தீர்த்தங்கரர் உருவமும் இயக்கியின் உருவமும் காணப்படுகின்றன.

பூலாங்குறிச்சி மதகுமலைச் சரிவின் வடபுறம் உள்ள கல்வெட்டு:

1. . . . . . . ந்தற்கு யாண்டு நூற்றுத் . . . . . . . . . . .
2. . . . . . . . . . . . . . நூ . . . . . . . . . . . . . . . .
3. . . . . . . . . . . . . . நா . . . . லுள்ள . . . . தா . . . . . . ம . . . . .
4. . . . . . . . . . . . மருகண் மகன் (க்)டலகப் பெ. . . . . . .
5. . . . . . . . ல் . . . . . . .ன் (ஒ)ல்லையூருக்கூற்(ற)
6. . . . . . . . செ. . . . மான்ச . . . ப . . . . த் . . . . . .
7. . . . . . . . . ய . . . . ப் . . . . . . . . . . . . . . .
8. . . . . . . . . கூரங்குள . . வயல்லை . . . . . . .
9. . . . . . . ப . . . . . நில . . . ரு நிலனும் புன்செஇ நிலனும் வெள்ளேற்றான் மங்கலமென் . . . . .
10. . . . . . . . ழுவரும் (இரு கரையும்) கூடலூரு நாட்டுப் பிரமதாயஞ் சிற்றையூருப் பிரம்மதாயக்கி
11. . . . . . ங்க . . . யும் (மீயா) ட்சியுங் கொண்டாளும் மவூருப்படுங் கடைய வயலென்னும்
12. . . . . . . புலத்தவன் விற்றுக் கொண்டு கொடுத்த புன்செ நிலனு(ம்)
13. . . . . . . த்துப் பிரம்மதாயத்துட் பிரம்மதாயக் கிழவரான
14. . . . . . . றராலும் பிரம . . . . . யுங் காராண்மையுமாகக் கொண்டாளுந் நீர் நிலனும் புன்
15. . . . . . நிலனும் பெற்றுஞ் . . . . பாண்டிநாட்டுங் கொங்க நாட்டும் மவருகாராண்சிழமையுங் கல
16. க்கிழமையுந் மேல்லா(ண்)மையுங் கொண்ட(ன)வும் மவருடைய காலாசமுந் தோட்டங்களும் மவரு தமரையும் ம
17. வரு குடிகளையும் . . . ச . . . . ம் உடையாரும் பிரம்மதாயமுடையாருந் நாடுகாப்பாரும் புறங்காப்
18. பாரும் முப்பூரு காப்பார் . . . . (தாயந்) நெறி அறஞ்

செஇதாரு தத்தமானும் வேறுவேறு ஆஇரத்தறுநா

19. று காணத் . . . . வேன் . . ன்ற . . ரு கேட்டாருலவியப் பெருந்திணை நல்லாங்கிழான் இனங்கு

20. மானும் முலவியப் (பெருந்திணை) . . ங்கிழான் . . ளங் கூற்றனும் . . . முலவியப் பெருந்திணை ஆலத்தூர் கி . . .

21. . . . . . . பெ . லை . . துவான் மன்றாடுகங் குமான் யா . .

22. . . . . கள்ளுக்கு . . . .

**பூலாங்குறிச்சி மதகுமலைச் சரிவின் தென்புறம் உள்ள கல்வெட்டு:**

1. கோச் சேந்தங் கூற்றற்கு யாண்டு நூற்றுத் தொண்ணூற்றி
2. ரண்டு நாண் முப்பத்தாறு பக்கந் தைப்பிறை நாள் ப(ன்)ன . . ள மருகண் மகன் கடலகப் பெரும் படைத்
3. தலைவன் . . (எ)ங்கமான் னொ(ல்)(லை)யூருக் கூற்றத்து வேள்கூருப் பச்செறிச்சின் மலைமேற் செஇவித்த தேவகுலமும்
4. முத்தூற்றுக் கூற்றத்து விளமரு செஇவித்த தேவகுலமும் மதிரை உலவியத்தான் குளத்தின் வடபக்கத்துச் செஇவி
5. த்த தாபதப்பள்ளியுள் (வ)சிதேவனாரு கோட்டமும் மவை அத்திகோயத்தாரு முள்மனையாருந் நாற்பாற்றிணைகளுந் தமக்கு காவலாக
6. அவற்றுக்குற்றது செயக்கொண்டமையால் லவற்றை வ . . றுத்தும் மவற்றுக்குப் பெயப்பட்ட அறப்புறநடையாட்டுவதூஞ் செயும்
7. பாண்டங்கருஞ் சேவுக்கரும் விரும்மச்சாறிகள்(ளுந்) தருமிகளு மூ(ரு)காவல் கொண்டாரு
8. பெறாமையும் மவற்றுட் பச்செறிச்சில் மலைமேற் செஇவி(த்ததேவகு) லத்துக்குக்குக் குடும்பியராவாரு குழ
9. லூருத் துஞ்சிய உடையாரால் வேள்கூருப் பெயப்பட்ட

குடும்பி(யர்) வழி(ய)ல்லது வேறூரு குடும்பாடப் பெறாமையும்

10. மத்தேவகுலத்துக்குற்றதூ(ஞ்செ)ய்து வல்லது குற்றந் தொழில் செயு(வார்)கள்ளு(த்தண்டஞ்)செயவும் மெழுதி வைக்கென்றருள்ளித்தாரு

11. கேட்டா ருலவியப் பெருந்திணை நல்லங்கிழான் இனங்குமானு முலவியப் பெருந்திணைப் . . . . அறுகிழான் கீரங்காரி

12. யு முலவியப் பெருந்திணை அம்பருகிழான் குமாரம் போந்தையுங் கேட்டுவந்து கூறி(ன)ன் னோலை எழுதுவான் றாமன்காரி

13. கண்ணன் இது கடைப்பி ஓலைக் காற்கண்டெழுதிக் கொடுத்தேன் (வெ)ண்ணாட்டன்ந(ரியங்) நரியங்காரி

## திருப்புத்தூர் வட்டம் - திருக்காலக்குடி

திருப்புத்தூருக்கு 16 மைல் வடமேற்காகவும், திருமையத்திற்கு 13 மைல் மேற்காகவும், பூலாங்குறிச்சிக்கு 4 மைல் கிழக்காகவும் அமைந்துள்ளது இவ்வூர்.

திருக்கோலக்குடி என்ற பெயர் மருவி திருக்காலக்குடி என ஆயிற்று. குன்னக்குடியில் உள்ள அஞ்சு கோயில் தேவஸ்தானத்தை சேர்ந்த கோயில் இங்கு உள்ளது. இவ்வூரில் சத்திய வாகீஸ்வரன் என்ற பொய்யாமொழீஸ்வரர் மற்றும் மரகதவல்லி கோயில் கோட்டைக்குக் கீழே நுழையும் வாயிலில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இதற்கு மேலாக உள்ள தளத்தில் சிவதர்மபுரீஸ்வரர் சிவகாமி அம்பிகை ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள பதாஞ்சலி முனிவர் விக்கிரகம் பல வேலைப்பாடுகளுடன் அமைந்ததாகும். தென்மாவட்டங்களிலேயே மிகப்பெரிய குடவரை கோயில் லிங்கத்துடன் இங்கு உள்ளது. இயற்கை வெளிச்சம் உட்புறம் வரும் வகையில் சிவன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் வெளிப்புற கல் சுவரில் அகஸ்தியர், புலஸ்தீயார் (Pulasthiar) ஆகிய சந்நியாசி சிலைகள் மிக நேர்த்தியாக செய்விக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் வலப்புறம்

வலம்புரி விநாயகர் சந்நிதியும், இடப்புறம் ஏழு தேவதையான சப்த கன்னிகை சிவனுடன் உள்ளது. இருவகையான கலைநுணுக்கங்கள் இவ்வூரில் காணப்படுகிறது.

மலையின் உச்சியில் உள்ள சுப்பிரமணியர் கோயிலில் உள்ள சுப்பிரமணிய கடவுள் ஆறு முகத்துடனும் பன்னிரண்டு கைகளுடனும் கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். ஏராளமான கல்வெட்டுகள் இங்குள்ளது. நம்பிராகனால் இக்கோயில் கட்டுவிக்கப்பட்டது எனவும் பிற்காலத்தில் சுந்தரபாண்டியனால் பிற்சேர்க்கைகள் கட்டப்பட்டது எனவும் அறியமுடிகிறது. இங்கு (8-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த குடவரை ஒன்றும் அமைந்துள்ளது. குடவரையின் மறைக்கப்பட்டுள்ள படிகளின் பிடிச்சுவரில் முதலாம் குலோத்துங்கனின் நாற்பத்தோராம் ஆட்சியாண்டு கி.பி. 1111 கல்வெட்டு ஒன்று கோயிலில் உவச்சக் காணியாக நிலமிருந்தும் உவச்சர்கள் இல்லாமையின் கோயில் நிர்வாகிகளான ருத்ரமாகேசுவரர்கள் கூடிக் குலோத்துங்க சோழ வாத்ய மாராயருக்கு அக்காணியைப் பராசவக் காணியாக நிச்சயத்து தந்தனர். கோயிலில் பேரிகைக் கொட்டவும், கை மணிக் கொட்டவம் பணியாளர் இருந்தனர். மீத கல்வெட்டு சரிவர அறியப்படவில்லை. மறைக்கப்பட்டுள்ள படிக்கு எதிர்புற சுவரில் கி.பி. 12-அம் நூற்றாண்டு இவ்வூரின் முன்னாலுள்ள ஊருணி மூவேந்தன் என்னும் பிசாசின் பெயரால் அழைக்கப்பட்டதைத் தெரிவிக்கிறது.

மகாமண்டபத் தெற்கு நுழைவுவாயிலின் மேற்கு நிலையில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கருப்பன் வயிராவியின் மகன் வயிரன் கொடையளித்த திருநிலைக்கால் என குறிக்கிறது.

இதேபோல கி.பி.18-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டுகள் மகாமண்டபத் தெற்கு நுழைவாயிலின் கிழக்கு நிலை, மகாமண்டப கிழக்கு நுழைவாயில், மகாமண்டப நுழைவுவாயில் அருகில் முன்மண்டப கூரை, குடவரை நுழைவுவாயில் வலப்புறச் சுவரில் உள்ளது.)

## திருப்பத்தூர் வட்டம் - இளையாத்தக்குடி

திருப்பத்தூருக்கு 9 மைல் வடக்காக அமைந்துள்ள இவ்வூருக்கு 10 மைல் கிழக்காக அமைந்துள்ள திருமயம்

புகைவண்டி நிலையம் அருகாமையில் உள்ளதாகும் இளையாத்தக்குடி (இளைப்பினை ஆற்றும் குடி) என அழைக்கப்பட்ட இவ்வூர் நாளடைவில் இளையாத்துக்குடி என அழைக்கப்பட்டு வருகிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தாருக்குப் பாத்தியப்பட்ட ஒன்பது ஆலயங்களுக்குள் இவ்வூரும் ஒன்றாகும். இங்குள்ள கைலாசநாத சுவாமி, நித்ய கல்யாணி அம்மன் சிவாலயம் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். சுமார் 400 வருடங்களுக்கு முன்பு மதுரையை ஆண்ட பாண்டிய மன்னரால் நாட்டுக்கோட்டை நகரத்தாருக்கு அவர்களது குடும்ப தெய்வமாகப் பராமரிக்கும் பொருட்டு ஒப்படைக்கப்பட்டது. இன்றும் இத்தெய்வத்திற்கு முந்தைய இரவு அணிவித்த ஆடைகளை உடுத்தி திருமண நிகழ்ச்சிகளைக் கொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கதாகும். அழகான ஓய்வு மாளிகையும் இங்குள்ளது.

இவ்வூரிலிருந்து 3 மைல் தொலைவில் உள்ள கீரணி பட்டியில் இருக்கும் முத்துமாரியம்மன் ஆலயம். கீரணிபட்டிக்கு தெற்காக 1 மைல் தொலைவிலிருக்கும் அவிணிபட்டியில் உள்ள காட்டுசுப்பையா ஆலயம் ஸ்ரீமகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகளால் அமைக்கப்பட்ட 65-ஆவது ஸ்ரீகாமகோடி பீட அதிஷ்டானம் ஆகியவை இவ்வாலயத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. 1890 மார்ச் மாதம் இராமேஸ்வரத்திலிருந்து திரும்பும் வழியில் இப்பீடத்திற்கு வருகைப் புரிந்த ஸ்ரீமகாதேவேந்திர சங்கர ஆச்சாரியார் சுவாமிகள் உடனடியாக அவ்விடத்திலேயே ஒரு சிறிய கோயில் ஒன்றைக் கட்டி அதிஷ்டானம் என பெயரிட்டுள்ளார். இரண்டு வேளை வழிபாடுகள் நடைபெற்று வருகிறது.

ஏழு ஊர் நாட்டுக்கோட்டை நகரத்தார்களான ஒக்கூரார், கமனிவாசல் குடியார், பட்டிணசாமியார், பெருமரத்தூரார், கிங்கிணி கூரார், பெரகுசந்தூரார், சிறுசேத்துடையார் ஆகியோரால் இங்கு விநாயகர் ஆலயம் குளத்துடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பட்டிணசாமியாரால் இவ்வூரில் சிவாலயம் ஒன்றும், கழனிவாசல் பெயரால் பெருமாள் ஆலயம் ஒன்றும் கட்டுவிக்கப்பட்டது. இவைகள் தவிர பழைய வைஷ்ணவ ஆலயம் ஒன்றும் உள்ளது.

தற்போது மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது. ஏராளமான கல்வெட்டுக்கள் இவ்வாலயத்திலும் கைலாசநாதசுவாமி ஆலயத்திலும் உள்ளது. (The inscription register gifts of village for services sales of lands, fixed rate of taxes payable, remission of taxes provision for burning perpetual lamps assignments of lands etc.)

கைலாசநாதர் ஆலயம் பழுதுபார்த்தல் பணி மேற்கொள்ளப் பட்டு 28.5.1939, 26.6.1958 ஆகிய இருதடவை கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - கண்டவராயன்பட்டி

திருப்புத்தூரிலிருந்து இவ்வூர் செல்லும் பிரிவுப் பாதையில் உள்ள இரு பலகை கல்வெட்டுகள், இந்த இடத்திலிருந்து மற்ற ஊர்கள் எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதையும், அக்கல்வெட்டுகள் அமைத்தவர் யார் என்பதையும் தெரிவிக்கிறது.

## திருப்புத்தூர் வட்டம் - வைரவன்பட்டி

இவ்வூர் திருப்புத்தூருக்கு 4 மைல் கிழக்காகவும், காரைக்குடிக்கு 9 மைல் மேற்காகவும் உள்ளது.

இவ்வூர் கி.பி.11-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த மிகப் பழைய ஊராகும். இங்குள்ள வைரவர் கோயில் சிறப்பு வாய்ந்ததாகும். இங்கு உறையும் இறைவனுக்குத் திருமயானத் தேவர் என்பது பெயர். இக்கோயிலின் உடைந்த நிலையில் உள்ள கற்பலகைகளில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் காலத்தில் இக்கோயிலுக்காக நிலங்கள் வாங்கப்பட்டு தானமாக அளிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் வழங்கிய காசுக்கு சோழியனார் பழங்காசு என்று இங்குள்ள கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது.

இக்கோயில் 298'.0" X 184'.0" உடையதாகவும், கல்வெட்டு கொண்டு கட்டுவிக்கப்பட்ட 199'.0" X 192'.6" அளவுள்ள முன்புறம் உள்ளதாகவும் இருக்கிறது. 120 வருடங்களுக்கு

முன்பாக கட்டுவிக்கப்பட்ட நகரத்தார் கோயிலில் இதுவும் ஒன்றாகும். கிழக்கே வெளிப்பிரகார கோபுரம் 60.9" உயரம் உடையதாக உள்ளது. கோயில் தொடர்பான புராணக் கதை ஓவியங்கள் பிரகாரம், உள்கூரை சுவரில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு மட்டும் கட்டப்பட்ட நகரத்தார் சத்திரம் ஒன்று உள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - திருப்புத்தூர்

மதுரையிலிருந்து சோழநாடு செல்லும் காரைக்குடி யிலிருந்து 21 கல் தொலைவில் அமைந்துள்ளது. தேவாரம் பெற்ற பாண்டி நாட்டுத் தலங்கள் பதினான்கனுள் இதுவும் ஒன்று. திருப்பத்தூரில் உள்ள பெரிய கண்மாய், தெம்மாபட்டுக் கண்மாய் மருது சகோதரர்களால் வெட்டுவிக்கப்பட்டது. தற்காலத்தில் பேச்சு வழக்கில் திருப்பத்தூர் என்றும், எழுத்து வழக்கில் திருப்புத்தூர் என்றும் வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் "கேரளசிங்க வளநாட்டு கொழுவூர் குன்றத்து பிரமதேயம் திருப்புத்தூர்" என்று இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. "திருப்புத்தூரில் திருத்தளியான் காண்" என்று அப்பரும், "திருப்புத்தூரில் மருவியுரைதரு பெருமாளே என்று அருணகிரிநாதரும், "திருப்புத்தூர் திருத்தளிபடாரர்க்கு" என்று கல்வெட்டுக்களும் குறிக்கின்றன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவகங்கைச் சரித்திர கும்மியும் அம்மானையும் திருப்பத்தூர் என்றே குறிப்பிடுகிறது. கொன்றை வனம் என்றும் இவ்வூருக்குப் பெயருண்டு. "தேன் துளிக்கும் நறும் கொன்றை வனத்திருக்கும் சிவனை" என்று மயூரகிரி புராணம் (பாடல் 69) கூறுகிறது. சாசனத்தில் குறிக்கப்படுகின்ற இக்கோயிற் பெயர் தேவாரத்திலும் காணப்படும். "தேராரும் நெடுவீதித் திருப்பத்தூரில் திருத்தளியான் காண் அவனென் சிந்தையாமன" என திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

தென் சிதம்பரம் புத்தூர், கொன்றைவனம், சிவபுரம், கௌரிபுரம், வால்மீகிபுரம் என்றெல்லாம் பல பெயர்கள் உண்டு. தேவாரப் பாடல் பெற்ற பாண்டி நாட்டு பதியொன்று திருப்புத்தூர் என்றே குறிப்பிடுகிறது.

இவ்வூரில் உள்ள கல்வெட்டுகளில் தொன்மையான

வரகுணனுடைய கல்வெட்டில் தமிழ்ப் பகுதியில் திருப்புத்தூர் என்றும் வடமொழிப் பகுதியில் "நூதன கிராமம் - புதிய கிராமம்" என்று பொருள்படும்படியும் குறிப்பிடப்பட்டுள்ளது. (137/1908) மேலும் இதில் பொழியூரைச் சார்ந்த தென்னவன் பல்லவரையன் ஆகிய மாறன் ஆச்சன் என்பவன் குறிப்பிடப்படுகிறான். இவன் திருத்தளியாண்டார்க்கு மாலைக்காக காசுகளை தானமாக அளித்துள்ளான். இதேபோன்று இக்காலத்தில் மறவன் அணுக்க பேரரையன் என்பவன் திருவிளக்கு இக்கோயிலில் எரிப்பதற்காக காசுகள் பலவற்றை அளித்துள்ளான். முதல் குலோத்துங்கனின் படைத் தலைவனாக விளங்கிய நிரலோகி வீரன் என்பவன் இக்கோயிலில் மண்டபம் ஒன்றைக் கட்டியுள்ளான்.

கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் இருந்து சிறந்து விளங்கிய இவ்வூரில் உள்ள இறைவனை 7-ஆம் நூற்றாண்டில் வந்த சமயக்குரவர்கள் பாடியுள்ளனர். நாகராஜ சோழனது வலுவான ஆட்சி நடைபெற்றதற்கு வரலாற்றுச் சான்றுகளாக கி.பி. 1013-ஆம் வருட கல்வெட்டு இங்குள்ளது. இங்குள்ள ஆலயத்தில் முன்னாள் ஆலயத் திருமேனியாக திருத்தளித்தாண்ட நாயனார், திருக்கற்றளிப்பாட்டரசர் இருந்ததாகவும், இக்கோயிலுக்கு மடங்களாக திருத்தொண்டர் தொகை மடம், திருஞானசம்பந்தர் மடம் இருந்ததாகவும் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன. இக்கோயிலில் பல கலைச்சிறப்பு வாய்ந்த முற்கால பாண்டியர் காலத்தைச் சார்ந்த செப்புத் திருமேனிகள் உள்ளன. இவற்றில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமர், சீதை, இலட்சுமணன் ஆகியோரது உருவங்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட பாண்டியன் மாறஞ்சடையனாகிய வரகுணனின் காலத்திய கல்வெட்டுகள் (கி.பி. 765-990) இரண்டு திருத்தளிநாதன் கோயிலில் உள்ளது. இக்கோயிலின் அர்த்தமண்டபத்தையடுத்துள்ள பின் மண்டபத்தின் அதிஷ்டானப் பகுதியில் இராஜராஜன் கல்வெட்டும், வீரஇராசேந்திரன் கல்வெட்டும் காணப்படுகிறது. முதல் திருச்சுற்றின் மேற்கில் உள்ள தலவிருட்சம் கீழ் இரண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகள் உள்ளன. கருவறையின் தெற்கில் உள்ள சப்தமாதர்களுக்கு பின்னுள்ள சுவரில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில்

ஆட்சி செய்த குலசேகரபாண்டியனின் கல்வெட்டுகள் உள்ளன. இரண்டாம் பிரகார சுவரில் 11-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ஸ்ரீவல்லபதேவ பாண்டியனின் பட்டத்தரசியான உலகமுழுதுடை யாள் என்று குறிப்பிடுவதால் இச்சுற்று கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இவ்வூரில் உள்ள நின்ற நாராயணப் பெருமாள் கோயிலில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த தோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் காலத்திய கல்வெட்டும் அனுமார் கோயிலின் முன் மண்டபத்தில் உள்ள தூணில் விஜயநகர காலத்துக் கல்வெட்டும் காணப்படுகின்றன.

மேலும் இவ்வூரைப் பற்றிய சீர்மை அதன் அருகில் உள்ள நகரத்தார் வயிரவப்பட்டியில் உள்ள வயலில் இருக்கும் கல்வெட்டிலும் (A.R.E. 62/1946) வைணவத் தலமான திருக்கோட்டியூரில் உள்ள (A.R.E. 292/1923) கல்வெட்டிலும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வூரில் விஷ்ணுவுக்காக இரண்டு கோயில்கள் இருந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த ஆலசமனப் பெருமாள் கோயில் என்றும், முதல் இராஜராஜன் காலத்தினைச் சார்ந்த ஜெயங்கொண்ட சோழ விண்ணகர் ஆழ்வார் கோயில் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வூரில் இவைகள் அல்லாது விக்கிரபாண்டியன் (கி.பி.1180-90), வீரபாண்டியத் தேவன் (கி.பி.946-966) முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1070-1132) வீரராஜேந்திரன் (கி.பி.1063-1070), எம்மாடி நரசிம்மராயர் (கி.பி.1499-500) தும்மச்சி நாயக்கர் (கி.பி.1565) பராக்கிரம பாண்டியன் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

திருசடையத்தேவர் என்ற விஜயரெகுநாத சேதுபதியால் (கி.பி.1711-1725) இங்கு வலிமையுள்ள கோட்டை கட்டப்பட்டது. மருதுபாண்டியன் போரில் திருப்பத்தூர் கோட்டை ஆற்காட்டு நவாப்பின் கையிலும், மருதுபாண்டியர் கையிலுமாக மாறி மாறி வந்தது. இறுதி தோல்வியை அடைந்த மருதுபாண்டியன் இந்த கோட்டையின் மேற்கு மூலையில் வெள்ளை மருது மக்கள்

கருத்தம்பி, மொல்லிக்குட்டி தம்பி, சின்ன மருது மக்கள், சிவஞானம், சிவத்ததம்பி அவரது மகன் முத்துச்சாமி ஆகியோரும் ஒருசேர தூக்கிலிடப்பட்ட இடமாகும். மருதுபாண்டியரின் சமாதி இவ்வூரில் உள்ளது.

"ஒப்பிலி மருது பெற்ற, தப்பிலி சிவத்தத்தம்பி ஊமையன் பேச்சைக் கேட்டுச் சீமையைப் பறி கொடுத்து திருப்பத்தூர்ச் சந்தியிலே தென்னையிலே தொங்குறாண்டா" என்று ஆங்கில அனுதாபியால் பாடப்பட்டுள்ளது.

வேளாண்மை செழித்திட உழவர்க்கெனத் தனியே கிணறு தோண்டச் செய்து பெரும் பணியினை இவ்வூரில் மருதுபாண்டியர் புரிந்துள்ளனர். இக்கிணறுகள் "காராளர் கேணிகள்" என்று பெயர் பெற்றுள்ளன. இக்கேணிகள் இவ்வூரைச் சுற்றி காணப்படுகின்றன.

## திருப்புத்தூர் வட்டம் - மாத்தூர்

காரைக்குடியிலிருந்து 4 மைல் கிழக்காக அமைந்துள்ளது. பதினெட்டுச் சித்தர்களில் ஒருவரான கொங்கண மகரிஷி இவ்வூரில் செம்பினை தங்கமாக மாற்றும் முறையினைக் கண்டபடியால் இப்பெயர் பெறலாயிற்று.

நாட்டுக்கோட்டை செட்டியார்களின் ஒன்பது கோயில்களில் ஒருகோயில் இவ்வூரில் உள்ளது. இவ்வாலயம் கூன்பாண்டியனால் நாட்டுக்கோட்டைச் செட்டியாருக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டது. இறைவன் இனூதி ஈஸ்வரர் இறைவி பெரியநாயகி ஆகும். பிரகாரம், வெளி மண்டபம், கல்யாண மண்டபம் ஆகியவை 7½ இலட்சம் செலவில் கட்டுவிக்கப்பட்டது. இக்கோயிலையொட்டி ஊரணி ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - மல்லாக்கோட்டை (சுத்தமல்லி)

திருப்பத்தூர் வட்டம், மல்லாக்கோட்டைக்கு வடக்கே பிரியும் வண்டி பாதையிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது சுத்தமல்லிபட்டி என்னும் சிற்றூர். இவ்வூரில் உள்ள ஊரணி "பள்ளி ஊருணி" என அழைக்கப்படுகிறது. ஊருணியின் மேல் கரையில் பள்ளிமேடு என்னும் பகுதியில் சங்கு புதரில் நடுவே முற்றிலும் இடிந்த சமணக் கோயிலும், கோயிலுக்கு முன்னும்

பின்னும் கொடுங்கை அதிஷ்டானம் பகுதிகள் சிதைந்தும் உள்ளது. இடிபாடுகளுக்கிடையே 1.45 மீ. உயரமுள்ளதும் 86 செ.மீ. அகலமுடையதுமான சமண தீர்த்தங்கரரின் சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தியான நிலையில் செவ்வக பீடத்தில் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கும் தீர்த்தங்கரர் உருவத்தின் தலைப்பகுதியும், தோள்வரை இரு கரங்களின் பகுதிகளும் உடைந்துவிட்டன. தோளின் பின்புறம் திருவாசியும், தலையின் மேல் முக்குடையும் காட்டப்பட்டுள்ளது. பக்கவாட்டில் சாமரம் ஏந்திய நிலையில் இரு இயக்கர்கள் காணப்படுகின்றன. இயக்கர்களின் முடியை கரண்ட மகுடமும், காதை பத்ர குண்டலமும், கழுத்தை ஆரமும், மார்பை முத்து தரித்த பிரிநூலும், இடையை ஆடையும் அணி செய்கின்றன. இவ்வியக்கர் உருவம் ஒவ்வொன்றும் 71 செ.மீ. உயரமும் 19 செ.மீ. அகலமும் கொண்டு விளங்குகிறது.

தீர்த்தங்கரர் அமர்ந்துள்ள பீடத்தின் கண்ட பகுதியில் மூன்று அமர்ந்த சிம்மங்கள் காட்டப்பட்டுள்ளன. உருவ அமைதியைக் கொண்டு இத்தீர்த்தங்கரர் சிலை பாண்டியர் காலத்ததாகக் கருதலாம். இவ்வுருவம் ஊர் மக்களால் பள்ளிமுனி, என்றும் பள்ளி ஊருணி முனி என்றும் அழைக்கப்படுகிறது. கோயிலின் மேற்கே உள்ள கண்மாயில் உள்ள நீர் மடை பள்ளி மடை எனவும், இங்கிருந்து பாசனம் ஆகும் 182 ஏக்கர் 71 சென்ட் நிலம் பள்ளி வயல் என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் தடயங்கள் பள்ளிமேட்டிலும், பள்ளி ஊருணி கரையிலும் சிதறி காணப்படுகின்றன. இக்கோயிலை காராளன் என்ற முன்னோர் கோபப்பட்டு சிதைந்து விட்டதாக செவி வழிச் செய்திகள் கூறுகிறது. இன்று கி.பி. 8, 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பஞ்சலோக சமண தீர்த்தங்கரர் உருவம் இவ்வூரில் கண்டுபிடிக்கப்பட்டு சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - வடவம்பட்டி

இவ்வூரின் பழமையான பெயர் மலையராயன்குடி அல்லது கடம்பன்குடி என்பதாகும். இவ்வூரில் உள்ள கி.பி.13-ஆம்

நூற்றாண்டினைச் சார்ந்த உமாமகேஸ்வரர் கோயிலுக்குப் பெரிய உடையநாயனார் கோயில் என்று பெயர் இருந்திருக்கின்றது. நந்தன வருடத்தில் வீரப்பெருமாள் என்பவர் இக்கோயிலின் பகுதிகளைக் கட்டியுள்ளார். இலங்கை வலைத்தீத்தான் என்பவனும் இக்கோயிலில் சில பகுதிகளைக் கட்டியுள்ளான். இவ்வூரில் உள்ள கி.பி.13-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த ஐயங்கொண்ட சோழீஸ்வர முடையார் என்ற சிவாலயமும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இக்கோயிலிலுள்ள தேசிவிநாயகப் பிள்ளையாரும் வழிப்படத்தக்க ஒன்றாகும்.

## திருப்புத்தூர் வட்டம் - ஏரியூர்

இங்குள்ள குன்றின்மீது மருந்தீஸ்வரர் என்ற சிவாலயம் உள்ளது. இக்கோயில் அபிமுக்தீஸ்வரம் என அழைக்கப்படுகிறது. இக்கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தின் பெயர் பாண்டிமாதேவி நல்லூர் என்பதாகும். இக்குன்று ஹனுமான் சஞ்சீவி மலையை எடுத்து செல்லும்பொழுது விழுந்ததாகக் குறிப்பிடப் படுகிறது. இங்கு எராளமான மருத்துவ மூலிகைகள் வளர்ந்து காணப்படுகின்றன. இக்கோயிலிலுள்ள தேசிவிநாயகப் பிள்ளையாரும் வழிபடத்தக்க ஒன்றாகும்.

## திருப்புத்தூர் வட்டம் - திருக்கோட்டியூர்

திருப்புத்தூருக்கு 5 மைல் தெற்காகவும் சிவகங்கைக்கு 16 மைல் வடக்காகவும் அமைந்துள்ளது.

இவ்வூர் வைணவ ஆச்சாரியரான ராமானுஜர் வரலாற்றோடு தொடர்புடையதாகும். இங்குள்ள பெருமாள் கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும். மூன்று அடுக்குகளைக் கொண்ட பெரும் விமானத்துடன் விளங்குகின்றது. இவற்றில் திருமாலின் நின்ற, இருந்த, கிடந்த கோலங்களும் எழுந்தருளுவிக்கப்பட்டுள்ளன. தற்போது இக்கோயில் சௌமிய நாராயணப் பெருமாள் கோயில் என்று அழைக்கப்படுகின்றது. இக்கோயில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற பழமையான கோயிலாகும். ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் காலத்தினைச் சார்ந்த கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. கீழ் இரணியமுட்டத்தைச் சார்ந்த கன்னிக்குடி என்ற ஊரிலிருந்து பெண்ணொருத்தி

திருவிளக்கு எரிப்பதற்காகக் கொடை கொடுத்ததை இவனது கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இங்குள்ள நாச்சியார் கோயிலின் முன்புள்ள தூண்களில் பல பழமையானக் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் கீழ்த்தளத்திலிருந்து பெருமாள் கேரள சிங்கப் பெருமாள் என்று கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் அழைக்கப்பட்டிருக்கிறார்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் இக்கோயில் மேலும் சிறந்து விளங்கியிருக்கிறது. இக்காலத்தில் இங்கிருந்த பெருமாள் சொக்கநாராயணப் பெருமாள் என்று அழைக்கப்பட்டிருக்கின்றார். இப்பகுதியிலிருந்து நாட்டவர்கள் நாட்டு விநியோகத்தால் வந்த வருவாயினைக் கொண்டு இக்கோயில் இறைவருக்கு வழிபாடு செய்ய ஏற்பாடு செய்திருக்கின்றனர். சுந்தரபாண்டியன் காலத்தில் மார்கழி மாதத்தில் திருமொழி பாடுவதற்காகத் தானங்கள் அளிக்கப்பட்டுள்ளன. வீரபாண்டியன் காலத்தில் இக்கோயிலில் ஐந்து நாட்கள் வசந்தோற்சவம் நடைபெற சடகோபன் என்பவன் ஏற்பாடு செய்துள்ளான். இக்கோயில் கீழ்மேலாக 472 அடி நீளமும், வடக்குத் தெற்காக 270 அடி நீளமும் உடையதாகவும், 85 அடி உயர கோபுரத்தினைக் கொண்டும் உள்ளது. கோயிலின் மிக முக்கியப் பகுதியான அஷ்டாங்க விமானம் 96 அடி உயரத்துடன் உள்ளது. தங்க கலசம் ஐந்து அடி உயரத்துடனும் 6'9" சுற்றளவும் கொண்டு விளங்குகிறது. தஞ்சாவூர் கோபுரத்தினைப் போன்று நிழல் கீழே விழாத அளவிற்கு விமானம் செய்விக்கப்பட்டுள்ளது. விமானம் மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும். மேல் அடுக்கில் உள்ள இறைவன் பரமபதநாதன் இறைவிகள் பூதேவி, ஸ்ரீதேவி, சமேதராகவும், நடுஅடுக்கில் நாராயணன் பூதேவி, ஸ்ரீதேவி சமேதராகவும், கீழ் அடுக்கில் திருப்பாற்கடலில் விஷ்ணு பள்ளிகொண்ட நிலையிலும் விளங்குகிறார். இவருக்குப் பின்புறம் கண்ணன் நரசிம்மமூர்த்தி, ராமர் ஆகிய தெய்வங்களும் உள்ளன. இரண்டு தேர்கள் இக்கோயிலுக்கு உள்ளது. இங்குள்ள தெப்பக்குளம் சிவகங்கை மன்னனின் பிரதாணியும், சோதிடருமாக விளங்கியவரான தாண்டவராய பிள்ளையால் கட்டுவிக்கப்பட்டதால் ஜோசியர் தெப்பக்குளம் என அழைக்கப்படுகிறது. பாண்டியர்,

சோழர், விஜயநகரர் மற்றும் தஞ்சை அரசர்களது கல்வெட்டுகள் இங்குள்ளன.

செட்டியார்களுக்கு சொந்தமான இரு சத்திரங்களும் யாதவர்க்கு சொந்தமான ஒரு சத்திரமும் பக்தர்களுக்கு கட்டுவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள சிவன் கோயிலில் (Inscription drd ss 1601 1679) ரெகுநாத திருமலை சேதுபதியால் கோயிலுக்கு நிலதானம் அளிக்கப்பட்டதைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று உள்ளது.

நற்றிணை இருநூற்று பதினொன்றும் (211) செய்யுளைப் பாடிய நல்லந்தையார் பிறந்த ஊர் திருக்கோட்டியூராகும்.

## திருப்புத்தூர் வட்டம் - பெருச்சி கோயில்

இவ்வூரின் பழைய பெயர் மருதூர் என்பதாகும். ஜெயங்கொண்ட சோழநல்லூர் என்னும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் பெயர் பெற்று விளங்கியுள்ளது. பாண்டிய நாட்டில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்பட்ட சோழ, பாண்டியரது ஆட்சிக் காலத்திலிருந்து இவ்வூர் வரலாற்றுச் சிறப்புடன் விளங்கியிருக்கிறது. தொடர்ந்து பிற்காலப் பாண்டியரது காலத்திலும் இவ்வூர் பெருமை பெற்று விளங்கியுள்ளது.

இங்குள்ள சிவன் கோயில் மட்டுக்கரை நாயனார் கோயில் என்ற பெயரில் சோழர் காலத்திலிருந்து அழைக்கப்பெற்று வரப்பட்டுள்ளது. இக்கோயிலிலுள்ள பைரவர் சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பழமையான சிற்பமாகும். சிவனது வழிபாடோடு பைரவர் வழிபாடும் இவ்வூரில் சிறப்புடன் விளங்கியிருக்கிறது. இன்றும் இவ்வூர் மற்றும் இப்பகுதியிலுள்ள மக்கள் பைரவர்க்கு சிறப்பு வழிபாடு செய்துவருகின்றனர். CXத்திரபாலர் என்ற பெயரில் இப்பைரவர் இருந்ததை கி.பி. 11, 13-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகின்றன. இவ்வூர் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கேரள சிங்க வளநாட்டு திருத்தியூர் முட்டத்து சிறு பெரிச்சியூர் என வழங்கப்பட்டது. சாசனத்தில் திருமட்டுக்கரை என குறிக்கப்படும் இந்த பழமையான சிவாலயத்தில் உள்ள அம்பிகையின் பெயர் பெரிய நாச்சியார் ஆகும். சோணாடு வழங்கிய சுந்தரபாண்டியன்

காலத்து சாசனம் ஒன்று பெரிய நாச்சியாருக்கு விதந்து அளித்த நிவந்தத்தை விளக்குகிறது. நாளடைவில் பெரிய நாச்சியார் கோயில் என்றே அக்கோயில் பெயர் பெற்றது. அதுவே பெரிச்சி கோயில் என்று மருவிற்று.

பூங்குன்ற நாட்டைச் சேர்ந்த மளுவ மாணிக்கம் என்று அழைக்கப்பட்ட குறுநிலத் தலைவர்கள் இப்பைரவர்க்கு சிறப்பு வழிபாடு செய்வதற்காக பல தானங்களை அளித்து வந்திருக்கின்றனர். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் பெருச்சியூர் என்று பெயர் பெற்றிருக்கிறது. இதே காலத்தில் வீரபாண்டியபுரம் என்ற பெயரிலும் இவ்வூர் விளங்கியிருக்கிறது. இக்காலத்தில் கண்டன்உடையஞ் செய்தான் காங்கேயன் என்ற பாண்டிய மன்னரின் அதிகாரி இப்பகுதியில் சிறப்புப் பெற்ற தலைவனாக விளங்கியுள்ளதைப் பிற்காலப் பாண்டியரது கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவன்மீது பெரியான் ஆதிச்ச தேவன் என்பவன் “பிள்ளைகவி” பாடியதையும் அதற்காக அப்புலவன் நிலங்கள் தானமாகப் பெற்றதையும் இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. காரணை விழுப்பரையர் என்ற அரசவைப் புலவர் ஒருவரும் இங்குள்ள கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்படுகிறார். கண்டன் உடையஞ்செய்தான் காங்கேயன் இக்கோயிலில் இளைய நாயனாருக்கும் (சுப்பிரமணியன்) அதிரவீசி ஆடுவாருக்கும் (நடராஜர்) உருவங்கள் செய்வித்துள்ளான். இங்குள்ள கல்வெட்டுகளில் இக்கோயிலில் இருந்த அம்மன் பெரிய நாச்சியார் என்று குறிப்பிடப்படுகின்றார்.

கி.பி. 1468-இல் குருகுலத்தரையன் என்பவன் இங்குள்ள இறைவனுக்கும், இறைவிக்கும் செப்புத் திருமேனிகளைச் செய்தளித்து, அவற்றிற்கு பூஜையும் திருவிழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்துள்ளான். இதற்காக அவ்வூரைச் சார்ந்த ஊர்ச்சபையினர் அவரைப் பாராட்டி பல மரியாதைகள் அளித்துள்ளனர்.

இவ்வூரில் திருஞானசம்பந்தன் திருமடம், திருநாவுக்கரசன் திருமடம், வீரபாண்டியன் திருமடம் என்ற பல சைவ மடங்கள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இருந்திருப்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் இங்குள்ளன. இவ்வூருக்கு சிறு பெரிச்சியூர் என்று கல்வெட்டுகளில் பெயர் குறிப்பிடப்படுகின்றது. இக்கல்வெட்டுகள் குறிப்பாக சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் காலத்தில் அவைக்களப் புலவராக விளங்கிய காரணை விழுப்பரையர் என்பவரைக் குறிக்கிறது. மற்றும் சிறு பெரிச்சியூரில் உள்ள புலவர்களில் கொடிக்கொண்டான் பெரியான் ஆதிச்சதேவன் என்ற புலவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளது. இவ்வூரில் ஓடும் ஆறு மட்டியாறு என தற்போது அழைக்கப்படுகின்றது. இக்கோயில் கல்வெட்டுகளில் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியனின் 14-ஆவது ஆட்சியாண்டைக் குறிக்கும் கல்வெட்டே பழமையானது. இக்கோயில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் (கி.பி. 1230) கட்டப்பட்ட பிற்காலப் பாண்டியர் பணியாகும். இக்கோயிலின் சொத்துக்களாக நஞ்செய் 268 மாவும், அரைமா அரைக்காணி முந்திரியும், புஞ்செய் குறுக்கம் 30 அடங்கிய நிலப்பகுதி என குறிக்கப்பட்ட ஓலைச்சுவடி ஒன்று இவ்வூர் கணக்கரிடம் உள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - நேமம்

குன்னக்குடிக்கு வடக்காக 1 மைல் 2 பர்லாங் தொலைவிலும், திருப்புத்தூரிலிருந்து வடகிழக்காக 7 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூர் அரசரின் பெயரான நேமராஜன் பெயரால் வழங்கப்பட்டது. இந்த அரசால் கோட்டைமேட்டுப் பகுதியில் மிகவும் பலம் வாய்ந்த கோட்டை "நேமன் கோட்டையோ, ஏமன் கோட்டையோ" என்று சொல்லும் அளவிற்குக் கட்டப்பட்டிருந்தது. இவ்வரசர் அவரது தம்பியான செளந்தரபாண்டியனால் கொல்லப்பட்டார்.

நாட்டுக்கோட்டைச் செட்டியாருக்குப் பாத்தியப்பட்ட ஒன்பது ஆலயங்களுக்கு ஒன்றான இவ்வூர் ஆலயத்தில் உள்ள இறைவன் ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் இறைவி செளந்தரநாயகி ஆவார். கி.பி. 1714-இல் செளந்திரபாண்டியன் அரசரால் நாட்டுக்கோட்டைச் செட்டியாருக்கு இனாமாக அளிக்கப்பட்டது இவ்வாலயம். இரண்டு பிரகாரங்களுடன் வெளிப்பக்க மதிற்சுவர் கொண்டும் தென்பக்க

கோபுரத்துடன் விளங்குகிறது. இக்கிராமத்து கண்மாயின் வடகரையில் வெள்ளைக் கற்களைக் கொண்டு கற்றளியாக எடுக்கப்பட்ட சேவகப் பெருமாள் ஐயனார் கோயில் உள்ளது. சதுர வடிவமான இக்கோயில் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை வெள்ளைக் கற்கள் கொண்டு அதன் மேலுள்ள சிகரத்தை செங்கல் கொண்டும் கட்டப்பட்டு ஒரு தள விமானத்துடன் காட்சியளிக்கிறது. விமானக் கோட்டத்தின் நான்கு திசை மாடங்களில் ஐயனார் சிலை உருவங்கள் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. அவற்றின் பக்கங்களில் ஐயனாரின் வாகனமான யானை நிறுத்தப்பட்டுள்ளது. கருவறையின் முன்புறம் உள்ள முக மண்டபத்தில் உள்ள தூண்களின் நடுப்பட்டையில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டிய மன்னரது வரலாறு கூறும் கல்வெட்டுகளாக ஸ்ரீவிக்கிரம பாண்டிய தேவருடைய எட்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு உள்ளது. கருவறையின் நடுவே ஐயனார், பூரணி, புஷ்கலை ஆகியோரின் சிற்ப வடிவங்கள் வழிபாட்டில் உள்ளன. தென்கிழக்கு மூலையில் ஐயனாரின் பரிவார ஆலயங்களாக பெரியகருப்பர், சின்னக்கருப்பர் ஆலயமும் உள்ளது. பரிவார தெய்வங்கள் அமைந்துள்ள மண்டபத்தை ஆறு தூண்கள் தாங்கி நிற்கிறது. சோழர் காலத்தைச் சேர்ந்த இச்சிற்ப தூண்கள் (கி.பி. 10-ஆம் 11-ஆம் நூற்றாண்டு) இக்கோயிலை ஆதியில் தோற்றுவித்து இலிங்க பிரதிஸ்டை செய்த ஜெயங்கொண்ட சோழனான இராஜராஜனை நினைவுபடுத்தும் வகையில் உள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - குன்றக்குடி

காரைக்குடியிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் திருப்புத்தூர் செல்லும் வழியில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூர் இங்குள்ள சோழர் கால கல்வெட்டுகளில் இராஜராஜ பாண்டி மண்டலத்து இராஜேந்திர சோழ வளநாட்டு திருக்குன்றக்குடி என்று குறிப்பிடப்படுகிறது. பாண்டியர் கல்வெட்டுகளில் கேரள சிங்க வளநாட்டு திருக்குன்றக்குடி என்று குறிப்பிடுகிறது. தேனாறு என்ற சிறிய ஆற்றின் போக்கில் அமைந்து இருந்தமையால் கேரள சிங்க வளநாட்டு அதளையூர் நாட்டு தேனாற்று போக்கு

திருக்குன்றக்குடி எனவும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றது. அதளையூர் நாட்டைச் சார்ந்த குறுநில தலைவர்கள் இப்பகுதிக்கு அதிபதியாக விளங்கியிருக்கின்றனர். இவர்கள் பாண்டியருக்கும், சோழருக்கும் கட்டுப்பட்ட அதிகாரியாகவும் விளங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குன்றக்குடி மலை 2000 ஆண்டுகளாக வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மலையாக விளங்கியிருக்கிறது. இக்குன்றில் சமண முனிவர்கள் வாழ்ந்த குகைத்தளம் ஒன்று உள்ளது. இதில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழி கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு சமண முனிவர்கள் இக்குகைத்தளத்தில் வாழ வழி செய்தோரின் பெயர் குறித்து தெரிவிக்கின்றது. ஆனால் இவ்வெழுத்துக்கள் தலைகீழாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அதாவது எழுத்துக்களை சுவடியில் நேராக எழுதி ஒரு கண்ணாடியில் பார்த்தால் எவ்வாறு தலைகீழாகத் தெரியுமோ அதேபோன்று காணப்படுகிறது.

கல்வெட்டு

1. . . . . . பி ஊர் ஆதன் சாத்தன்

2. . . . . . . குடு . . . . . . த . . . . .

சிவபெருமானுக்காக முற்காலப் பாண்டியர் காலத்தில் எடுப்பிக்கப்பெற்ற மூன்று குடவரைக் கோயில்கள் இக்குன்றில் காணப்படுகின்றன. இவை கி.பி. 8-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவையாகும். இங்குள்ள குடவரைக் கோயில் ஒன்றில் இதன் பெயர் 'மாசுலீச்சுரம்' (மாசு இல்லாத ஈஸ்வரம் என்ற பொருளில்) என்று வட்டெழுத்துக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்குடைவரைக் கோயில்கள் மூன்றும் முற்காலப் பாண்டியர் காலக் கட்டிடக் கலைக்கும், சிற்பக் கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. கருவறையும் அதன் முன்பு அமைந்த மண்டபத்துடன் இவை காட்சியளிக்கின்றன. கருவறை மூன்றிலும் சிவலிங்கம் காணப்படுகின்றன. ஒரு குடவரைக் கோயிலில் மட்டும் முகமண்டபத்தில் சிற்பங்கள் ஏதுமில்லை. முதல் குடவரை கோயிலின் வெளிப்புறம் அமர்ந்த நிலையில்

சண்டிகேஸ்வரரின் சிற்பம் உள்ளது. உட்புறம் முகமண்டபத்தில் கருடஅனுக்கிரஹமூர்த்தி, லிங்கோத்பவர், ஹரிஹரர், துர்க்கை, நடராசர், சுப்பிரமணியர், கணேசர், துவாரபாலகர்கள் ஆகியோரது சிற்பங்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் இவ்வுருவங்கள் மீது சுதை பூசி இதன் பழமையான தோற்றத்தை அறிய இயலாது செய்துள்ளனர்.

இக்குடைவரைக் கோயில்களில் சோழர், பாண்டியர் காலத்து தமிழ்க் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இங்குள்ள இறைவன் தேனாற்று நாயனார் என்றும், திருமலை யுடைய நாயனார் என்றும், மூலஸ்தானமுடைய நாயனார் என்றும் குறிப்பிடப்படுகின்றார். இதேபோன்று இங்குள்ள ஆலயத் திருமேனிகளும் திருமலையுடைய தேனாற்று நாயகர், தேனாற்று மாதேவர் எனவும் அழைக்கப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலில் ஞானியார் மடம் என்று ஒரு மடம் இருந்தது எனவும் கல்வெட்டுச் செய்திகள் குறிப்பிடுகிறது.

முதல் இராஜேந்திர சோழன் காலத்தில் அவனது படைப்பிரிவில் கூலிச் சேவகனாக விளங்கிய இராஜேந்திர சோழ அதளையூர் நாடாள்வான் இக்கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்காக தானம் அளித்திருக்கின்றான். முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் வீரசேகரன் அதளையூர் நாடாள்வான் என்பவன் பல நிலங்களை இக்கோயிலுக்குத் தானமாக வரிநீக்கி அளித்துள்ளான். இவனுக்கு மும்முடிச் சோழன் என்ற பெயரும் இருந்திருக்கிறது. ஜடாவர்மன் ஸ்ரீவல்லவன் காலத்தில் இக்கோயிலுக்கு நந்தவனத்திற்காக நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது. மாறவர்ம சுந்தரபாண்டியன் காலத்தில் இக்கோயிலுக்குத் தானங்கள் பல கொடுக்கப்பட்டிருக்கின்றன. சாய்களூரைச் சார்ந்த பொற்பதிபிரியன் ஆன செழியசிங்கபன்மர் என்பவர் இக்கோயிலில் பைரவர் திருமேனியை எழுந்தருளிவித்துள்ளார். கண்டன் ஆளுடையானான களவழி நாடாள்வான் இச்ௐத்திரபாலப் பிள்ளையாருக்கு நித்திய வழிபாட்டிற்காகப் பல நிலங்களைத் தானமாக அளித்துள்ளான். விக்கிரம பாண்டியன் காலத்தில் உய்யவந்தான் கண்டன் காங்கேயன் ஆன தியாகமீகாமன் என்பவனும் இக்கோயில் வழிபாட்டிற்கு நிலங்கள் பலவற்றை

அளித்திருக்கின்றான். கி.பி. 1560-இல் இக்கோயிலின் முன்பிருந்த மண்டபம் இளையாங்குடி நகரத்தாரால் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு இம்மலையில் முருகனது (சுப்பிரமணியர்) வழிபாடு தோன்றி இன்றும் சிறப்புடன் விளங்கி வருகிறது. ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தினைச் சார்ந்த கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. இக்கோயிலில் உறைகின்ற முருகன் "இளையநாயனார்" எனக் குறிப்பிடப் படுகின்றார்.

சொக்கநாராயண விஜயாலயத் தேவன் என்பவர் இவ்விளைய நாயனாருக்கு நித்திய வழிபாட்டிற்காக நிலங்கள் பலவற்றை அளித்துள்ளதை வீரபாண்டியன் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. கி.பி. 1485 முதல் 1515 முடிய இராமவீர பெருமாள் காங்கேயன் என்பவனது ஆளுகையின் கீழ் குன்றக்குடியும் அதனைச் சூழ்ந்த பகுதியும் விளங்கியுள்ளன. கி.பி.1484-இல் இவன் ஆனைமங்கலம் என்ற ஊரில் நிலங்கள் சிலவற்றைத் தனது குருவாக விளங்கிய திருப்புனவாசல் முதலியாருக்குத் தானமாக அளித்துள்ளான். இவர் திருவேளைக்காவலன் திருமடம் என்ற மடத்தில் உறைந்திருந்ததாகக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. கி.பி. 1515-இல் இக்காங்கேயன் குன்றக்குடி இளையநாயனாருக்கு தாயன்குடிவயல் ஆன ரவிகுல மாணிக்க நல்லூர் என்ற ஊரைத் தானமாக அளித்துள்ளான். குன்றக்குடியில் உறைகின்ற இவ்விளைய நாயனாரை அருணகிரிநாதர் தனது திருப்புகழில் புகழ்ந்து பாடியுள்ளார். முருகன் உறைந்துள்ள இம்மலையைத் துங்கமலை, மயிலின்மலை, மயூரகிரி என்று பல பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அவனிகங்கன் என்பவன் சுப்பிரமணிய பிள்ளையாரை எழுந்தருளிவித்ததாகக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது. இது தற்போதுள்ள சுப்பிரமணியரின் கோயில் மூல இறைவனைக் குறிப்பிடுகின்றதா அல்லது உற்சவ திருமேனியைக் குறிப்பிடு கின்றதா என்பது தெளிவாக தெரியவில்லை. இது மூலவர் திருமேனியைக் குறிப்பிடுகிறது என்று எடுத்துக் கொள்வோமானால்

இச்சுப்பிரமணியர் கோயில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாம் சுந்தரபாண்டியன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதலாம்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இக்குன்றக்குடி மலைப் பகுதியில் காளையார் காளன் திருமடம் என்ற பெயரில் சைவ மடம் ஒன்று இருந்திருக்கிறது. இதற்கு நியமபற்றைச் சார்ந்த நாட்டவர்கள் மடப்புறமாக நிலங்களைத் தானமாக அளித்துள்ளனர். மலையின் அமைப்பு மயிலின் தோற்றத்தைப் போல அமைந்துள்ளது.

மருதுபாண்டியரின் அவைக்களப் புலவரான சாந்துப் புலவர் தாமியற்றிய "மயூரக்கிரிக் கோவை"யில் "வேண்டிய நல்கும் மயிலார்" "மயில் வரை மேல் மருதுபாண்டியன் பொய்கை" என்றும் "மருது நராதிபதி சிந்தையிற் செய்த திருக்குளம்" என்றும் மருதுபாண்டியரால் உருவாக்கப்பெற்ற தடாகத்தைப் போற்றி யுள்ளார்.

இராமநாதபுரம் சமஸ்தான வித்வான் காரைக்குடி கிருஷ்ணய்யர் இவ்வூரில் பிறந்தவராவார்.

ஆத்தங்குடி காடன் செட்டியார் என்னும் தனவணிகரால் தரிசனத்திற்கு அழைத்து வரப்பட்ட மருது சகோதரர்கள் ஆண்டவனுக்குத் தக்க கோயில் இல்லாதிருப்பதைக் கண்டு மயிலின் தோற்றத்தை உடைய மலையின் மேல் திருக்கோயிலைக் கட்டுவித்தார். இங்கிருந்து பார்த்தால் தெரியும் வண்ணம் மருதாவிரி என்ற அழகிய குளத்தினையும், அதன் கரையில் ஆயிரம் தென்னை மரங்களையும் உருவாக்கினார்கள். ஆறுமுகப் பெருமானின் உற்சவ மூர்த்தி சன்னதியில் ஆஜானுபாகுவாகக் காணப்படும் இரண்டு சிலா ரூபங்கள் அண்ணன் தம்பியான வெள்ளை மருது, சின்ன மருது ஆவார்கள்.

## திருப்புத்தூர் வட்டம் - சிவபுரி

இவ்வூரில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உள்ள கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இங்குள்ள முதல்

குலோத்துங்கன் மற்றும் பிற சோழர் கல்வெட்டுகளில் இவ்வூர் சோழ மார்த்தாண்டச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் குறிப்பிடப்படுகிறது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் இப்பெயர் மறைந்து நிருபசேகரச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயர் வந்திருக்கிறது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு சிவபுரி என்ற பெயர் இவ்வூருக்கு வந்திருக்கின்றது.

இங்குள்ள சுயம்பிரகாசர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் அக்கோயிலைத் தான்தோன்றீஸ்வரம் என்று குறிப்பிடுகிறது. இச்சிவன் கோயில் தவிர ஆயிரத்து ஐநூற்று ஈஸ்வரமுடையார் கோயில் என்று மற்றொரு சிவன் கோயிலும் இவ்வூரில் இருந்துள்ளது. இங்குள்ள கல்வெட்டுகளில் கண்டன் மங்கலத்தேவன் ஆன துவராபதி வேளான், சுந்தரத் தோழன் கண்டன் ஆன இராஜேந்திர சோழ துவராபதி வேளான், இராஜேந்திர சோழ நிசெதராயன் கந்தன் கங்கைகொண்டான் ஆன துவராபதி வேளான் ஆகிய அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. இவ்வூரில் உள்ள முதல் குலோத்துங்கன் கால கல்வெட்டு ஒன்றில் கந்தன் மங்கலத்தேவன் என்ற துவராபதி வேளான் என்பவனும் சுந்தரத் தோளான் கந்தன் என்ற ராஜேந்திர சோழ துவராபதி வேளானும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர் எனக் கூறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து பேரிளமை நாடுகளுக்கும், தனியூர்களுக்கும் சில தொடர்புகள் உள்ளது இன்று அறியமுடிகிறது.

இங்குள்ள கோயிலில் அருவியூரைச் சேர்ந்த மானாபரணன் என்ற அதிகாரி கூத்தாடும் தேவரையும், அவரது பிராட்டியாரையும் செப்புத் திருமேனியாகச் செய்வித்து இறையிலியாக நிலங்களும் அளித்திருக்கிறான். ஈசானதேவி என்ற பெண் தனது மகளைச் சாத்தி திருவிளக்கு ஒன்றும் தானமாக அளித்திருக்கிறான். வீரபாண்டியன் காலத்தில் இரண்டு தேவராயரும், ஒரு நட்டுவானும் இக்கோயிலில் பணிபுரிய அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

விஜயநகர வேந்தரான அச்சுததேவராயர் காலத்திலும் நாகமநாயக்கன் காலத்திலும் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இங்கு உள்ளன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் மூத்த

பிள்ளையாரின் (விநாயகர்) திருவுருவம் இக்கோயிலில் செய்து வைக்கப்பட்டுள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இங்குள்ள அம்மன் கோயில் கட்டப்பட்டுள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - இரணியூர்

கீழச்செவல்பட்டியிலிருந்து மேற்காக 3½ மைல் தொலைவிலும், திருப்புத்தூரிலிருந்து வடக்காக 7 மைல் தொலைவிலும், இளையாத்தக்குடியிலிருந்து 2½ மைல் தெற்காகவும் அமைந்துள்ளது இச்சிறிய கிராமம். இரணியூர் என்பதே இன்றைய வழக்கு பெயராக இருப்பினும் பண்டைய நாளில் இரணி, இரணியம் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளது. நரசிம்ம பெருமாள் பக்தபிரகலாதன் தந்தையான ஹிரண்யனை கொன்ற பிறகு பிரம்மஹத்தி தோஷத்தினைப் போக்குவதற்காக லிங்க பூஜை இவ்விடத்தில் செய்தமையால் இவ்வூர் இப்பெயர் பெறலாயிற்று எனக் கூறப்படுகிறது.

ஒன்பது நகரத்தார் ஆலயங்களில் இவ்வூரில் உள்ள ஆலயமும் ஒன்றாகும். இறைவன் ஆட்கொண்டநாதர் என தமிழிலும், நரசிம்மேஸ்வரர் என சமஸ்கிருதத்திலும் இறைவி சிவபுர அம்மாள் என்றும் அழைக்கப்படுகிறார். இவ்வாலயம் இரண்டு பிரகாரத்துடன் மதிற்சுவர் கொண்டு உள்ளது. இறைவிக்கு எதிர்புறமுள்ள தூணில் ஒன்பது துர்க்கைகளின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இறைவனுக்கு முன்பாக வீரபத்திரர், மார்க்கண்டேசுவரர் ருத்ரமூர்த்தி போன்ற 12 சிலைகள் உள்ளன. இவைகள் அனைத்தும் சிமெண்டினால் வார்ப்பு செய்யப்பட்டதைப் போன்று நேர்த்தியாகச் செய்விக்கப்பட்டுள்ளது.

இரணியூர் 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த ஊராகும். கி.பி. 12,13-ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்களான சுந்தரபாண்டியன், குலசேகர பாண்டியன், வீரபாண்டியன் ஆகியோரது வரலாற்று தொடர்பினைப் பெற்று விளங்கிய இவ்வூரில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆட்சி செய்த மன்னர் மரபினரது கல்வெட்டுகளும் இவ்வூரில் உள்ளன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இரணியூர் பகுதி நாயக்கர் மன்னர்களது ஆட்சியிலும், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சிவகங்கை மன்னரது ஆளுகையிலும் இருந்து வந்துள்ளது.

இவ்வூரில் உள்ள கி.பி.16-ஆம் 19-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த கல்வெட்டுகளில் இரணியூர் ஆட்கொண்ட ஈசுவரமுடையார் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலக்கொடையைப் பற்றியும், இறைவனுக்கு அளித்த நிவந்தங்கள் பற்றியும், பத்திரகாளியம்மன், அஸ்திரத் தேவர் ஆகிய தெய்வ சிலைகளை கோயிலுக்கு செய்தளித்தமை பற்றியும் விரிவாக குறிக்கிறது. மேலும் இக்கல்வெட்டுகளில் பல்வேறு அரசியல் அதிகாரிகள் பெண்களும், அவர்களது பணிகளும் விரிவாக குறிப்பிட்டுள்ளது.

மேலும் இவ்வூரில் உள்ள அம்மன் சேங்கை என்று அழைக்கப்படும் திருவேட்பூருடையார் ஊருணி கி.பி. 1501-இல் கல்வாசல் நாட்டைச் சார்ந்த இளையாத்தங்குடியான குலசேகரபுரத்து திருவேட்பூருடையான் என்னும் நகரப் பிரிவினர் உருவாக்கியதாக இரணியூர் சாசனம் குறிக்கிறது. இதேபோல் பெருமாள் கோயில் ஊருணி முழுவதும் செம்பராங்கல்லைக் கொண்டு கட்டப்பட்டு நகரத்தார் காலத்திய கட்டடக்கலைக்குச் சான்றாக விளங்குகிறது. சிவன் கோயில் ஊருணி, "கல்லூரணி" என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வூரணி கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் இரணியூர் நகரத்தாரால் விரிவுப்படுத்தப் பட்டுள்ளது.

## திருப்புத்தூர் வட்டம் - பிள்ளையார்பட்டி

காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர் செல்லும் வழியில் 18-ஆவது கிலோமீட்டரில் குன்றக்குடிக்கு அடுத்து உள்ளது. இங்குள்ள கோயில் ஒன்பது நகரக் கோயில்களுள் ஒன்று. பாண்டிய நாட்டு வரலாற்றில் மிகத் தொன்மையான குடவரைக் கோயிலாக சுமார் 1600 வருடங்களுக்கு முன்பு அமைந்ததாகும். இவ்வூருக்கு எருக்காட்டூர் அல்லது எக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, இராசநாராயனபுரம் என்று பெயர்கள் இருந்திருப்பதை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மேலும் மருதங்கள், தென்மருதூர், கணேசபுரம், கணேசமாநகரம், பிள்ளைநகர் என்று பிற்காலப் பாடல்களிலும் பல பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. எருக்காட்டூர் சங்ககாலத்திலிருந்தே நிலவி வரும் ஊர் என்பதை "எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்" என்ற சங்க புலவரின் பெயர் மூலம் தெரிந்து கொள்ளலாம்.


இங்குள்ள குடவரை கோயிலின் அருகாமையிலேயே பிற்காலத்தில் சிவனுக்காக எடுக்கப்பட்ட கட்டிடக் கோயில் ஒன்றும் உள்ளது. இங்குள்ள சிறிய குன்றின் வடபக்கத்திலேயே குடவரை கோயில் எடுப்பிக்கப்பட்டுள்ளது. பல்லவர் காலத்து குடவரை கோயிலிலிருந்து இதன் அமைப்பிற்கு வேறுபட்டதாக உள்ளது. கிழக்கு நோக்கிய நிலையில் கருவறையும் அதற்கு முன்பு வடக்கு நோக்கி அமைந்த சிறிய முகமண்டபத்துடன் இக்கோயில் விளங்குகின்றது. முக மண்டபத்தில் நுழைந்தவுடன் அனைவரும் காணும் வகையில் பெரிய பிள்ளையார் உருவம் அமர்ந்த நிலையில் உருவாக்கப்பட்டுள்ளது. இரண்டு கரங்களுடன் காணப்படும் இவ்வுருவம் தமிழ்நாட்டில் காணப்படும் பிள்ளையாரது உருவங்களில் பழமையானதாகும். இப்பிள்ளையார் புடைப்புச் சிற்பமாக நின்ற நிலையில் ஹரிஹரரின் உருவம் வடிக்கப் பட்டுள்ளது. இவ்வுருவத்தில் ஒருபுறம் மனித வடிவில் கருடனின் உருவமும், மற்றொரு புறம் நந்தியின் உருவமும் காணப்படுகிறது. இவ்வுருவம் சிவன், திருமால் ஆகியோர் இணைந்த ஒரே உருவமான ஹரிஹரரின் உருவம் என்பதை மேலும் உறுதிபடுத்தும் வகையில் தலையின் வலதுபுறம் சிவனுக்குரிய ஜடாமகுடமும், இடது பக்கம் திருமாலுக்குரிய கிரீட மகுடமும் காணப்படுகின்றன. கர்ப்பகிரஹத்தின் வெளிப்புறம் வடக்கு நோக்கிய நிலையில் சிவலிங்கத்திலிருந்து, அனல் பிளம்பிலிருந்து வெளிவரும் தோற்றத்தைக் காட்டும் வகையில் லிங்கோத்பவரின் உருவமும் காணப்படுகிறது. யானையின் பின்பகுதி போன்று கருவறையின் உள் அமைப்பு காணப்படுகின்றது. லிங்கோத்பவரின் அருகில் பொறிக்கப்பட்டுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டு இக்குடவரையைத் தோற்றுவித்தவரின் பெயரைக் குறிப்பிடுகின்றது. எருக்காட்டூரைச் சார்ந்த கோன்பெருந்தச்சன் என்று கல்வெட்டில் இவனது பெயர் குறிப்பிடப்படுகின்றது. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு இவ்வட்டெழுத்துக் கல்வெட்டு கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கருதி இக்குடவரை கோயிலும் கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கூறுகின்றனர்.

## கல்வெட்டு

"எருக்காட்டூருக் கோன் பெருந்தச்சன்"

குடவரைக் கோயில் அமைந்த பகுதி வீங்கைகுடி என்றும், கட்டிடக் கோயில் அமைந்த சிவன் கோயில் பகுதி மருதங்குடி என்றும் அழைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இங்குள்ள விநாயகர் தேசீவிநாயகப் பிள்ளையார், கற்பகப் பிள்ளையார், கற்பகமூர்த்தி, கற்பக விநாயகர் வரத கணபதி. கற்பகக்களிறு கணேசபுரேசன் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

திருவீங்கைக்குடி மகாதேவர் கருவறைத் திருவாயிலுக்கு இடது பக்கச் சுவரில் உள்ள கி.பி. 1220-ஐச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று சுந்தரபாண்டியன் அமைச்சர்களில் ஒருவரானவரும் குன்றக்குடி அருகில் உள்ள நேமத்தினைச் சேர்ந்தவருமான காங்கேயன் கற்பக விநாயகருக்கு நித்தியபடி காலம் ஏற்படுத்தி தன் பெயர் விளங்க "காங்கேயன் சந்தி" என்று சந்தி ஒன்றை ஏற்படுத்தியுள்ளான். உய்யவந்தான் ஆண்டாள் என்பவள் இக்கோயிலில் சிவராத்திரி அன்று சிறப்பு வழிபாடு நடத்துவதற்காக நிலங்களை அளித்துள்ளாள். விக்கிரமபாண்டியன் காலத்தில் இங்குள்ள இறைவனுக்காக பள்ளியறை நாச்சியார் செப்புத் திருமேனிகள் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. குலசேகரப் பாண்டியன் காலத்தில் குடவரைக் கோயிலில் உள்ள பிள்ளையாருக்கு பிட்டும், பணியாரமும் திருவமுதாக வைத்துப் படைக்க வரிநீக்கம் செய்யப்பட்ட நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பிற்காலப் பாண்டியர் காலத்தில் மிகுந்த சிறப்பு இக்குடவரைப் பிள்ளையாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.


காரைக்குடி வட்டம்
வருவாய் கிராமங்கள்
NOT TO SCALE

## காரைக்குடி வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள்

1. ஆத்தங்குடி
2. நெற்புகப்பட்டி
3. அரண்மனைப்பட்டி
4. ஒய்யக்கொண்டான் சிறுவயல்
5. திருவேலங்குடி
6. கோத்தாரி
7. கானாடுகாத்தான்
8. கோத்தமங்கலம்
9. பள்ளத்தூர்
10. கோட்டையூர்
11. வேலங்குடி
12. செக்கால கோட்டை
13. கழனிவாசல்
14. கோவிலூர்
15. காரைக்குடி
16. மானகிரி சுக்கனேந்தல்
17. கீரனிபட்டி
18. கூத்தனூர்
19. வைரவயல்
20. செஞ்சை
21. அமராவதி
22. சேதுரகுநாதபட்டம்
23. பிளார்
24. தேவபட்டு
25. கல்லல்
26. செம்பனூர்
27. இனத்துரும்பு
28. இலந்தமங்கலம்
29. மும்முடிசம்பட்டி
30. பனங்குடி
31. திருதிப்பட்டி
32. அரண்மனை சிறுவயல்
33. மேலகண்டான்
34. வெட்டியூர்
35. கீழ்பூங்குடி
36. குருந்தம்பட்டு
37. ஆலம்பட்டி
38. விழவாடியேந்தல்
39. வேப்பங்குளம்
40. சன்னவனம்
41. கல்லுப்பட்டி
42. புதூர்
43. அரியக்குடி
44. இலுப்பக்குடி
45. மாத்தூர்
46. கண்டனூர்
47. கல்லங்குடி
48. பாலையூர்
49. மேலமணக்குடி
50. குலப்பாடி
51. சாக்கோட்டை
52. பனவயல்
53. வெள்ளிப்பட்டி
54. பெரியகோட்டை
55. கோலத்தூர்
56. நாட்டுசேரி
57. ஜெயன்கொண்டான்
58. செங்காத்தான்குடி
59. பூக்குடி
60. அம்பலக்குடி
61. சிறுகவயல்
62. பிரம்புவயல்
63. மிதிரவயல்
64. பெரியகோட்டைக்குடி

## காரைக்குடி வட்டம் - கானாடுகாத்தான்

காரைக்குடிக்கு வடக்கே 10 மைல் தொலைவில், திருப்புத்தூருக்கு 15 மைல் வடகிழக்காகவும் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரின் கண்மாயின் கீழ்க்கரை அருகில் இயற்கையான சூழலில் அமைந்துள்ள கோயில் பெரிய கோயில் என ஊர் மக்களால் அழைக்கப்படுகிறது. இக்கோயில் உள்ள இடத்தில் கி.பி. 1000-இல் சிவலோகநாதர் என்னும் பெயரில் புகழ்பெற்ற கோயில் ஒன்று இருந்தது. இக்கோயில் இறைவன் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் சிவலோகநாதர், சிவலோக நாயனார், பெருமாள் சிவலோகமுடையான் என்ற பெயர்களில் சிறப்புடன் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இதனை இக்கோயில் கோபுரவாயில் முன் தாழ்வாரத்தில் பதிக்கப்பட்டுள்ள பிற்கால பாண்டியர்களின் கல்வெட்டுகள் துணைக் கொண்டு அறியப் பட்டுள்ளது. இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலக்கொடையையும், அந்நிலத்திற்கு உரிய நான்கு எல்லைகளையும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. சாசனங்களில் கையொப்பமிட்டவர்களையும் சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. விஜயநகர மன்னர் காலத்து கல்வெட்டு ஒன்றும் இக்கோயிலில் உள்ளது. எனவே இக்கோயில் கி.பி. 1000 முதல் கி.பி. 1500 வரை சீரிய முறையில் இருந்துவந்ததை கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பழைய கோயிலின் கட்டிடங்கள் நாளடைவில் சிதைவுற்றன. பின்னர் சிவகங்கை அரசர்களின் நிர்வாக ஆணையில் இருந்து வந்த கோயிலை கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நகரத்தார்கள் எடுத்து பழைய கோயில் கட்டுமானங்களைப் பத்திரமாக அகற்றி முற்றிலும் புதியதாகக் கோயிலைத் திருப்பணி செய்துள்ளனர். கோயில் தோற்றம் பாண்டியர் காலத்தது. திருப்பணி நாட்டுக் கோட்டை நகரத்தார் காலத்தது ஆகும்.

சிவன் கோயில், கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், திருச்சுற்று, கோபுரம் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இறைவன் அருள்மிகு சிவலோகநாதர், இறைவி சௌந்திரநாயகி, கருவறை புறச்சுவரில் தேவகோட்ட மாடங்களில் ஆலின் கீழ் அமர்ந்த அண்ணல், நான்முகன் ஆகிய உருவங்களும்,

(அர்த்தமண்டப கோட்டத்தில் பிள்ளையார் துர்க்கை ஆகிய உருவங்களும்) உள்ளன. (அர்த்தமண்டபத்தின் தென்மேற்கு மூலையில் சுமார் கி.பி. 900-இல் செய்தளிக்கப்பட்ட வலம்புரி விநாயகர் உருவம் உள்ளது). அர்த்தமண்டபம், மகாமண்டபம் தரையிலும், சுவரிலும், இத்தாலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கருப்பு வெள்ளை சலவைக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. முகமண்டபத்தின் நடுவே நந்தியும், உலோகத் தகட்டால் வேயப்பட்ட கொடிமரமும் உள்ளது. இவைகள் தவிர கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சார்ந்த உருக்கால்கள் ஆங்காங்கு உள்ளது.

இதுவே இக்கோயில் கலைச்செல்வங்களில் தொன்மையும் புகழும் மிக்கது. இவ்விநாயகர் சிற்பத்திற்கு சில தனிச் சிறப்புகள் உண்டு. இவ்வுருவம் மற்ற சிற்பங்களுக்கு மாறாக இடது காலைத் தாமரை பீடத்தில் நன்றாக மடித்து வைத்து வலது காலை பீடத்தின் கீழ்த் தொங்கவிட்டுள்ளது. விநாயகர் நான்கு கைகளில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் மாறியுள்ளன. 72 செ.மீ. உயரமும் 52 செ.மீ. அகலமும் உடையது இச்சிற்பம்.

இக்கோயிலில் குருக்கள். சுயம்பாகம், அத்தியானம், சூத்திரஜபம், ஓதுவார். காவல் (8 கரை) ஜாடுமாரி, வைராவி, மாலைகட்டி ஆகியோர் உள்ளனர். தற்போது காவலர் நால்வர் மட்டும் உள்ளனர். குருக்கள் மானியம், வைராவி மானியம், காவல் மானியம், சின்ன மேளா, பெரிய மேளா மானியம், தேவரடியாள் மானியம் ஆகிய கோயில் பணியாளர்கள் மானியங்கள் இன்றும் உள்ளது.

இக்கோயில் தவிர அழகு நாச்சியம்மன் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில், அய்யனார் கோயில், பிள்ளையார் கோயில், முனீஸ்வரன் கோயில், கண்மாய் கருப்பு ஆகிய கோயில்களும் உள்ளன. அய்யனார் கோயில் கரைமேல் அழகர் என்ற பெயரில் விளங்குகிறது.

இவ்வூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் முக்கிய மையமாகும். இங்கு கட்டப்பட்டுள்ள வீடுகள் பெரும்பாலானவை சிறிய அரண்மனையைப் போன்று காட்சியளிக்கும் வகையில் உள்ளது.

## காரைக்குடி வட்டம் - பள்ளத்தூர்

திருப்புத்தூருக்கு 21 மைல் வடக்காகவும், காரைக்குடிக்கு 7 மைல் வடக்காகவும் உள்ள இவ்வூருக்கு மேற்காக 2 மைல் தொலைவில் உள்ள செட்டி நாட்டில் புகைவண்டி நிலையம் உள்ளது.

இவ்வூர் பள்ளத்திலும் இதனைச் சுற்றியுள்ள பகுதிகள் மேடாகவும் உள்ளதால் இவ்வூர் பள்ளத்தூர் என பெயர் பெறலாயிற்று. சோலையாண்டவர் அய்யனார் கோயில், சிவன் கோயில், விஷ்ணு கோயில், மசூதி ஆகியவை உள்ளது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு மிக முக்கிய ஊராகும். இங்கு நகரத்தார் சத்திரம் ஒன்றும் உள்ளது.

## காரைக்குடி வட்டம் - கோட்டையூர்

திருப்புத்தூரிலிருந்து 17 மைல் கிழக்காகவும், காரைக்குடியிலிருந்து வடக்காக 4 மைல் தொலைவிலும் அமைந்துள்ள இவ்வூரில் புகைவண்டி நிலையமும் உள்ளது.

கோட்டை ஒன்று இருந்தமையால் இவ்வூர் இப்பெயர் பெறலாயிற்று. கி.பி.1920-இல் தொடங்கப்பட்டு கி.பி.1940-இல் முடிக்கப்பட்ட நகரத்தார் சிவாலயம் ஒன்று சொக்கநாதரை இறைவனாகவும், மீனாட்சியை இறைவியாகவும் கொண்டு உள்ளது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் முக்கிய இடங்களில் இதுவும் ஒன்றாகும்.

புகழ்பெற்ற டாக்டர் அழகப்பா செட்டியார் இவ்வூரைச் சார்ந்தவர் ஆவர்.

## காரைக்குடி வட்டம் - கோவிலூர்

காரைக்குடிக்கு மேற்கே 1 மைல் தொலைவிலும், திருப்புத்தூருக்குக் கிழக்கே 11 மைல் தொலைவிலும் இவ்வூர் உள்ளது. அழகான கோயில் இவ்வூரில் உள்ளதால் கோவிலூர் என பெயர் பெறலாயிற்று. இக்காலத்தில் கோவிலூர் என வழங்கப்படும் இக்கிராமம் பழங்காலத்தில் கழனிவாசல், ஸ்ரீவல்லபுரம் என்றும் வழங்கப்பட்டது. இங்கு உறையும் இறைவனுக்கு கொற்றவாளீஸ்வரர் எனப் பெயர் வழங்கப்படுகிறது.

கி.பி. 1382-ஆம் ஆண்டு ஆட்சி செய்த விஜயநகர அரசரான சமணர் என்பவர் காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்த பிராமணர்களின் சமுதாய நடைமுறை வாழ்க்கையினை ஒழுங்குபடுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக நடைபெற்ற கூட்டத்தில் மணமகன் மணமகளுக்கு எட்டு கழஞ்சு பொன் அல்லது அதற்கு சமமான வெள்ளிக் காசுகள் மட்டும் வரதட்சணை வழங்கவேண்டுமென்றும், இதை மீறுபவர்கள் ஜாதிவிலக்குச் செய்யப்படுவார்கள் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சில மணமகன் வீட்டார் நல்ல பெண் கிடைக்கவேண்டுமென்பதற்காக பணம் நிறைய செலவழித்தால் சமுதாயத்தில் ஏற்பட்ட சீர்கேட்டினை சரிசெய்யும் பொருட்டு மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் சூரைக்குடி பெட்டப்ப விஜயாலய தேவன் என்பவன் இக்கோயிலுக்கு மானியமும் மடப்பள்ளி இறையிலியும் வழங்கினான். மீண்டும் கி.பி.1550-இல் இக்கோயிலுக்கு தங்கத்திலான சுப்பிரமணியர் விக்கிரகம் ஒன்றும் வழங்கியதுடன், கார்த்திகை மாதத்தில் இக்கோயிலில் சிறப்பான விழா ஒன்று நடத்துவதற்கு மானியங்கள் அளித்துள்ளான்.

## காரைக்குடி வட்டம் - காரைக்குடி

திருப்புத்தூருக்கு 13 மைல் கிழக்காக அமைந்துள்ளது. காரிக்குடி என தமிழ் இலக்கியங்களில் அழைக்கப்பட்ட இவ்வூர் நாளடைவில் காரைக்குடி என பெயர் பெறலாயிற்று. காரைச்செடி என்னும் ஒருவகை முட்செடிகள் இவ்வூரில் அதிகமாக இருந்ததால், காரைச்செடி மருவி காரைக்குடி ஆயிற்று என்பர். இங்குள்ள கொப்புடையம்மன் ஆலயம் மிக முக்கியம் வாய்ந்ததாகும். இவை தவிர நகரத்தார் சிவன் கோயில், பெருமாள் கோயில், கிருஷ்ணன் கோயில், கழனிவாசல் பெருமாள் கோயில், கொப்புடை அம்மன், முத்தாலம்மன் கோயில் போன்ற ஏராளமான கோயில்கள் உள்ளன. இரண்டு கிறித்துவாலயமும், ஒரு மசூதியும் உள்ளது. இவ்வூரில் உள்ள கழனிவாசல் பகுதியிலிருந்து ஏழகப்படை ஒன்று பாண்டிய அரசருக்கும், சோழ அரசருக்கும் நடைபெற்ற யுத்தத்தில் உட்படுத்தப்பட்டது என பண்டைய தமிழ் இலக்கியங்களிலிருந்து

அறியப்படுகிறது. ஒவ்வொரு பங்குனி திங்களிலும் கம்பர் விழா மூன்று நாட்கள் விமரிசையாக இவ்வூரில் கொண்டாடப்படுகிறது.

சிறிய நகரமாக விளங்கிய இவ்வூர் 1885-ல் ஊராட்சி ஒன்றியமாகவும், 1928 செப்டம்பரில் நகராட்சியாகவும் மாற்றப்பட்டது. லிக்னைட் இவ்வூரினைச் சுற்றி கிடைக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

இன்றும் காரைக்குடியில் மிக்க மனத்துயரத்துடன் அனுஷ்டிக்க வேண்டிய நினைவு நாளை கொண்டாடுவதற்கு "மகர் நோன்பு (முகர்ரம் நோன்பு) பொட்டல்" இருந்து வருவது இந்த விழாவிற்கு ஒதுக்கிடமாக அமைந்து இருந்ததை நினைவூட்டுகிறது.

இவ்வூரின் கல்லுக்கட்டி வடக்குத் தெருவில் இரண்டு சத்திரங்கள் உள்ளது. 1. கீழைச் சத்திரம் 2. மேலைச் சத்திரம் கீழைச் சத்திரம் மெய்யப்பச் செட்டியார் பொறுப்பில் உள்ளது. மேலைச் சத்திரம் மேனா மேனர் மேலைச் சத்திரம் என அழைக்கப்படுகிறது.

இவ்வூரின் வடகிழக்கில் உள்ள செக்காலை 50 வருடங்களுக்கு முன்பாக "ஜெயின் குண்டபுரம்" என அழைக்கப்பட்டது. வடமேற்கில் உள்ள முத்துபட்டிணம் என்ற பகுதியில் முத்துமாரியம்மன் கோயிலும், மத்திய பகுதியில் உள்ள கல்லுக்கட்டியில் கொப்புடையம்மன் கோயிலும் அமைந்துள்ளது. காரைக்குடியில் தமிழ்தாய் கோயில், கம்பன் மணிமண்டபம், வள்ளல் அழகப்பர் செட்டியார் சிலை (ம) கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம் ஆகியவை அமையப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். கம்பன் விழா ஆண்டுதோறும் இவ்வூரில் கொண்டாடப்பட்டு வருகிறது.

## காரைக்குடி வட்டம் - அரண்மனை சிறுவயல்

இவ்வூர் காரைக்குடியிலிருந்து தென்மேற்காக 12 கல்தொலைவிலும் 16 மைல் தென்கிழக்காகத் திருப்புத்தூரிலிருந்து காளையார் கோயிலில் இருந்து 8 கல் தொலையிலும் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் மும்முடி சோழீஸ்வரம் என்று பெயர் பெற்று விளங்கியிருக்கிறது. இக்கோயில் முதலாம் இராஜராஜன் பெயரில் ஏற்படுத்தியிருக்க வேண்டும். மாறவர்ம சுந்தரபாண்டியன்,

வீரபாண்டியன் மற்றும் மதுரை நாயக்க மன்னர் காலங்களில் இக்கோயிலுக்கு நிலங்களும் வேறு கொடைகளும் வழங்கப்பட்டன. இவ்வாலயத்திற்கு இருந்த மும்முடி சோழீஸ்வரம் உடையார் என்ற பெயர் மருவி மும்முடி நாகேஸ்வர ஆலயம் எனவும், மும்முடி நாதசுவாமி ஆலயம் எனவும் தற்போது வழங்கப்படுகிறது. கி.பி. 1275-ஆம் ஆண்டில் வீரபாண்டியர் காலத்தில் ஒரு பெண் ஆவுடைய நாயனாரையும், அவரது தேவியரையும் இக்கோயிலில் எழுந்தருள செய்துள்ளார். இதற்காக சிவனீந்த காளான் மாளவ சக்ரவர்த்தி தானமாக நிலங்களை அளித்திருக்கின்றார். கி.பி. 1265-இல் இவர் இக்கோயிலில் இருந்த திருக்கோட்டமுடைய நாச்சியாருக்கும் ஸ்கந்த தேவருக்கும் வழிபாடு செய்வதற்காகத் தானங்கள் அளித்துள்ளார். இதே காலத்தில் இக்கோயிலில் உமாசகீத மூர்த்திக்கும், அஸ்தர தேவருக்கும், விநாயகருக்கும் செப்புத்திருமேனிகள் செய்து வைக்கப்பட்டுள்ளன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் அருவியூரைச் சேர்ந்த இருவர் இக்கோயில் திருச்சுற்றில் சுப்பிரமணியர் சிற்றாலயத்தை எடுப்பித்துக் கோயிலில் அதனுள்ள இளைய நாயனாரையும் எழுந்தருளச் செய்துள்ளனர். இவ்விளைய பிள்ளையாருக்குப் பிற்காலத்தில் தொடர்ந்து அவரது தேவியரான தெய்வயானை, வள்ளி ஆகியோரது உருவங்களும் செய்து வைக்கப்பட்டுள்ளன. இதனை வள்ளி நாச்சியார் என்ற பெண் குலசேகர பாண்டியன் காலத்தில் செய்திருக்கிறாள். அடைக்கலம் காத்தான் என்பவன் தேவாரம் பாடுவதற்காக இக்கோயிலுக்குத் தானம் அளித்துள்ளான். மதுரை நாயக்கரான வீரப்ப நாயக்கன் காலத்திலும் பல நிவந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன. சேர சோழ பாண்டிய மன்னர்கள் இவ்வூர் மும்முடி நாதர் மற்றும் கருணா கடாட்சி ஆலயத்திற்குத் தரிசிக்க வருகையில் இவ்வூரில் ஊரணிகள் வெட்டியதாக கூறப்படுகிறது. பாண்டிய மன்னன் வெட்டிய மான் கொண்டான் என்ற ஊரணி இன்றும் இவ்வூரின் உபயோகத்தில் உள்ளது.

காளையார் கோயிலில் உள்ள கி.பி.14-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் எல்லை சொல்லும் போது "சிறு வயலுக்குப் போகிறவழி" என்று குறிப்பிடப்படுகிறது. இங்கு அரண்மனை கட்டிய

பின்பே இவ்வூருக்கு அரண்மனை சிறுவயல் எனப் பெயர் ஏற்பட்டது. ஆங்கிலேயர் இதனை ‘‘ஷெரவெளி’’ என்று குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வூரின் வடகோடியில் ஏழரை ஏக்கர் நிலத்தில் மருது பாண்டியர் கோட்டை அமைந்திருந்தது. கிழக்குப் பகுதியில் ஊருக்கு வெளியே வெளியேறும்படி சுரங்கம் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த அரண்மனை கிழக்கு நோக்கிய முகப்புடன் கோண வாசலாக வெளியே இருந்து பார்த்தால் தெரியாதபடி யுத்த காலத்திற்கு ஏற்ற முறையில் கல்லல்-காளையார் கோயில் சாலையில் அமைந்திருந்தது. இங்கு மருதரசருக்கும், சின்ன மருதுவின் மூத்த மகன் சிவத்ததம்பிக்கும் அரண்மனைகள் இருந்துள்ளன.

இச்சிறுவயலினைப் பற்றி ஆங்கிலேயர் தளபதி ‘வெல்ஷ்’ குறிப்பிடுகையில் அரண்மனை தோற்றத்தில் சிறியதாயினும் தூய்மையானதாகவும், உறுதியானதாகவும், நல்ல கட்டுமானத்துடன் விளங்கியதாகவும் தெரிவித்துள்ளார். தெரு இருமருங்கும் நிழல் தரும் தருக்கள் அமைந்த சாலையாக விளங்கியது. இந்நகர் இந்தியாவில் நான் கண்ட எந்த நகரத்திலும் உயர்வாகவே மதிப்பிடப்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வூரில் சிறிய மசூதி ஒன்றும் உள்ளது. இவ்வூரில் இருந்த சத்திரத்தில் தற்போது ஆரம்பப் பள்ளி நடைபெற்று வருகிறது.

## காரைக்குடி வட்டம் - அரியக்குடி

இவ்வூர் காரைக்குடியிலிருந்து கிழக்காக மூன்று மைல் தொலைவிலும், திருப்புத்தூரிலிருந்து 15 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. தேவகோட்டை ரஸ்தா இரயில்வே நிலையத்திலிருந்தும், காரைக்குடி சந்திப்பிலிருந்தும் இரண்டு மைல் தூரத்தில் உள்ளதாக அமைந்துள்ளது.

இங்குள்ள புகழ்பெற்ற பெருமாள் கோயில் தென்திருப்பதி என்றும் இங்குள்ள இறைவன் பெயரால் அழைக்கப்பட்ட இவ்வூர் நாளடைவில் அரியக்குடி என அழைக்கப்பெறலாயிற்று. (Hence the name Harikudy meaning village of the Lord which in course of time became Ariyakudi)

இங்குள்ள இறைவன் திருவேங்கடமுடையான், இறைவி அலமேலுமங்கை ஆகும். இவ்வாலயத்தில் கர்ப்பகிரஹமும், அர்த்தமண்டபமும் சுமார் 168 வருடங்களுக்கு முன்பாக AL. K.M.R. சேவுகன் செட்டியார் அவர்களால் கட்டுவிக்கப்பட்டது. பிற்காலத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் 50 அடி உயரமும் ராயகோபுரமும் ஆலயத்தின் மற்ற பகுதிகளும் 1916-ஆம் வருடம் 5½ இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட்டது.

மேலும் இவ்வூரில் நகரத்தார் சிவன் கோயில் செல்லியம்மன் கோயில் மற்றும் ஒரு கிறித்துவ ஆலயமும் உள்ளது. சங்கீத கலாநிதியாக விளங்கிய ஸ்ரீராமானுஜ அய்யங்கார் அவர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து மறைந்த ஊராகும். "அரியக்குடி நகர் அத்தனை பேர் அத்தனையும் வரிசைக்குடியாக வாழ்க" என ஆசு. கவி. முத்தப்பா செட்டியாரால் வாழ்த்தப்பெற்ற ஊராகும்.

இங்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தபால் தந்தி அலுவலகம், மருத்துவமனை மற்றும் உயர்நிலைப் பள்ளி இவ்வூரில் உள்ளது.

இவ்வூர் அரியக்குடி விலக்கில் உள்ள பலகைக் கல்வெட்டு நகரத்தாரின் சாலைப் பணியைக் குறிக்கிறது.

## காரைக்குடி வட்டம் - இலுப்பக்குடி

காரைக்குடியிலிருந்து 3 மைல் கிழக்காகவும், திருப்புத்தூரிலிருந்து 17 மைல் கிழக்காகவும் அமைந்துள்ள இவ்வூருக்கு காரைக்குடியில் உள்ள புகைவண்டி நிலையம் அருகாமையில் உள்ளதாகும்.

இவ்வூரில் ஏராளமான இலுப்பை மரங்கள் இருந்தமையால் இப்பெயர் பெறலாயிற்று. நாட்டுக்கோட்டை செட்டியார்களின் ஒன்பது ஆலயங்களில் ஒன்றான சிவன் கோயில் இவ்வூரில் உள்ளது. இவ்வாலயம் 150 வருடங்களுக்கு முற்பட்டதாகும். இறைவன் பெயர் சுயம்பிரகாசர். கொங்கண சித்தர் இவ்வாலயத்தில் சித்தி அடைந்ததாகவும் அங்கு ஒரு லிங்கம் உள்ளதாகவும் கூறப்படுகிறது. இவ்வாலயத்தின் அர்த்தமண்டபத்தில் உள்ள தூணில் பொறிக்கப்பட்ட 1.2" நீளமும் அகலமும் உடைய சிறிய

விநாயகர் சிற்பம் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வூரில் ஒரு கிறித்துவாலயமும் உள்ளது.

## காரைக்குடி வட்டம் - கல்லங்குடி

பாண்டிய மன்னன் குலசேகரன் காலத்தில் இக்கிராமம் அதளையூர் நாட்டு திருச்சிற்றம்பல நல்லூர் என அழைக்கப்பட்டு வந்தது. இக்கிராமம் கி.பி.13-ஆம் நூற்றாண்டிலிருந்து கல்லங்கடி என்ற பெயரில் வழங்கி வருகிறது. இங்கு உறையும் இறைவனது பெயர் திருப்பட்டீஸ்வரம் உடையார் என்பதாகும். கங்கராயன் என்ற தளபதி கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பாண்டியர் காலத்தில் இப்பகுதியை ஆண்டு வந்தான். குலசேகரபாண்டியன் காலத்தில் இக்கோயிலில் மண்டபம் ஒன்று கட்டப்பட்டது. இம்மண்டபத்திற்கு குன்றத்தூர் உடையான் நாயன் என்பவன் கல் தூண்களை அளித்திருக்கிறான். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இப்பாளையூர் நாடு தஞ்சாவூர் நாயக்கர்களுடைய ஆளுகைக்குட்பட்டது. நாயக்கர் தளபதியான அச்சுதப்ப விஜயாலய தேவன் என்கிற சேவப்பன் இக்கோயிலுக்கு நிலங்களை மானியமாக அளித்துள்ளான்.

## காரைக்குடி வட்டம் - சாக்கோட்டை

காரைக்குடியிலிருந்து 8 மைல் வடகிழக்காக அமைந்துள்ளது. சோழநாட்டின் இப்பகுதி சக்கை நாடு என அழைக்கப்பட்டு வந்தது. கந்தன் என்ற சோழ அரசன் இங்கு ஆலயத்தினையும், கோட்டையையும் கட்டினான். எனவே சக்கை கோட்டை என அழைக்கப்பட்டு வந்த இவ்வூர் நாளடைவில் சாக்கோட்டை என அழைக்கப்பெறலாயிற்று.


இக்கிராமத்தின் பழைய பெயர் பொம்பூர சாய்கழூர் என்பதாகும். இங்கு பாண்டிய குலசேகரன் காலத்தினைச் சார்ந்த கி.பி.13-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகள் நிறைய உள்ளன. இவ்வூரில் உள்ள இறைவனுக்கு வீரசேகர ஈஸ்வரமுடையார் என்று பெயர். இக்கோயில் குலசேகர பாண்டியனின் தளபதியான வீரசேகரன் பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்வூரில் உள்ள மற்ற இரு கோயில்களான கலவையால் நாயனார், வலை தேசநாயக பிள்ளையார் ஆகிய கோயில்களும் குலசேகர

பாண்டியனின் தளபதிகள் பெயரால் வழங்கப்பட்டுள்ளன. இம்மூன்று கோயில்களும் ஒரே வளாகத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இடைப்பபகுதியில் தண்மராயன் என்பவன் இக்கோயிலின் சிறப்பு வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளான். அலங்காரப்பட்டி என்பவர் விக்கிரம விநாயகப் பிள்ளையார் கோயிலை நிறுவினார்.

நாட்டுக்கோட்டை நகரத்தாரைச் சேர்ந்த ஒய்யவந்த அம்மன் கோயில் நகர கைலாச விநாயகர் கோயில் ஆகியவையும், இரண்டு வைஷ்ணவ கோயில்களும், இரண்டு கிறித்துவாலயமும் உள்ளது.

இவ்வூர் கோயில் கட்டட வல்லுநர்களான ஸ்தபதிகளுக்கு பெயர் பெற்றதாகும். நாட்டுக்கோட்டை நகரத்தாருக்கு சொந்தமான சத்திரம் ஒன்று இவ்வூரில் உள்ளது. தமிழ் வித்துவான்களுக்கும், புலவருக்கும் பெயர் பெற்றது. இவ்வூர் 125 முன்னதாக பிறந்த திருக்காலர் ஆண்டார் என்ற வீரப்பசாமி இவ்வூரில் வேதாந்த மடத்தையும் நிறுவியுள்ளார்.

○●○


மானாமதுரை வட்டம்
வருவாய் கிராமங்கள்
NOT TO SCALE

## மானாமதுரை வட்டத்தினைச் சேர்ந்த கிராமங்கள்

1. கழுவான்குளம்
2. கரிசல்குளம்
3. பொட்டபாளையம்
4. கொந்தகை
5. சோயனாபுரம்
6. சோட்டாதட்டி
7. கீழடி
8. மணலூர்
9. அதிகாரை
10. கழுகர்கடை
11. நெல்முடிகரை
12. காளியாந்தூர்
13. வெள்ளூர்
14. கஞ்சிராங்குளம்
15. எருக்காளவெள்ளூர்
16. முக்குடி
17. செங்குளம்
18. அம்பாலதடி
19. மாங்குடி
20. மேலராங்கியம்
21. அல்லிநகரம்
22. பனையனேந்தல்
23. வலையனேந்தல்
24. திருப்பூவணம்
25. தளி
26. மடப்புரம்
27. பூவந்தி
28. ஏனாதி
29. செம்பூர்
30. பாப்பாகுடி
31. கானூர்
32. திருப்பாச்சேத்தி(வ)
33. தூதை
34. லாடனேந்தல்
35. கொத்தங்குளம்
36. மேலச்சேரிக்குளம்
37. பிரமனூர்
38. வல்லரேந்தல்
39. S.வாகைக்குளம்
40. வீரனேந்தல்
41. பழையனூர்
42. மாரநாடு
43. சலுப்பனோடை
44. திருப்பாச்சேத்தி(தெ)
45. மழவராயனேந்தல்
46. வெள்ளிக்குறிச்சி
47. வாகுடி
48. சுள்ளாங்குடி
49. குவளவெளி
50. வெள்ளத்தூர்
51. தாமரைக்குடி
52. செந்தட்டியேந்தல்
53. புதுக்குளம்
54. மிளகனூர்
55. கட்டிக்குளம்
56. பிரம்புசேரி
57. இருங்காகோட்டை
58. சிறுகுடி
59. மானம்பாக்கி
60. காட்டூரணி
61. சூரக்குளம்
62. மேலப்பிடாவூர்
63. K.K.பள்ளம்
64. செங்காளத்தூர்
65. கால்பிரவு
66. இராஜகம்பீரம்
67. தீதான்பேட்டை
68. கிழங்காத்தூர்
69. அன்னவாசல்
70. சின்னகண்ணனூர்
71. M.கரிசல்குளம்
72. அரிமண்டபம்
73. கீழபாகலை
74. அரசனேந்தல்
75. மானாமதுரை
76. மாங்குளம்
77. வடக்குசந்தனூர்
78. S.காரைக்குடி
79. எழுனுதிமங்கலம்
80. மேலநெட்டூர்
81. P.ஆலங்குளம்
82. தெற்குசந்தனூர்
83. வெடியரேந்தல்
84. T.புதுக்கோட்டை

## மானாமதுரை வட்டம் - கொந்தகை

இவ்வூர் திருப்பூவணத்திலிருந்து மதுரை செல்லும் வழியில் சிலைமானுக்கு அருகில் அமைந்துள்ளது. இவ்வூரின் பழம்பெயர் குந்திதேவிச் சதுர்வேதிமங்கலம் ஆகும். இதுவே தற்போது கொந்தகை என வழங்கப்பட்டு வருகிறது. இவ்வூரைப் பற்றிய செய்திகளைக் கொந்தகைக்கு அருகில் அமைந்த கீழடி சிவன் கோயிலில் உள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. இவ்வூரில் பிற்கால பாண்டியர் காலத்தினைச் சார்ந்த பெருமாள் கோயில் ஒன்றும், சிவன் கோயில் ஒன்றும் உள்ளன. வைணவ ஆச்சார்யர்களில் ஒருவரான மணவாள மாமுனிகள் பிறந்த ஊர் இதுவாக கருதுகின்றனர். இவ்வூரில் சதாசிவராயர் காலத்தில் (கி.பி. 1545) இரண்டு குழுவினர்களுக் கிடையே தகராறு ஒன்று நடைபெற்று அது அரசு அதிகாரிகளால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதைக் கொந்தகை கல்வெட்டு ஒன்று தெரிவிக்கிறது.

இவ்வூரிலிருந்து கீழடிப் பகுதிக்குச் செல்லும் வழியில் பள்ளிச் சந்நிதி திடல் என்று ஒரு மண்மேடு உள்ளது. இப்பகுதியில் பழமையான ஊர் ஒன்று இருந்து அழிந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இம்மேட்டுப் பகுதியில் நாயக்க காலத்திற்கு முந்தைய அழகிய சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன. அய்யனார், யானை, பெண், ஆண் போன்ற பல உருவங்கள் இவற்றில் உள்ளன.

## மானாமதுரை வட்டம் - திருப்பூவணம்

மதுரையின் கிழக்கே வைகையாற்றின் கரையில் அமைந்துள்ள இப்பழம்பதி மதுரையிலிருந்து 24 கி.மீ. தொலைவில் மதுரைக்கு தென்கிழக்காகவும், சிவகங்கைக்கு மேற்காக 16 கல் தொலைவிலும் அமைந்துள்ளது. இங்குள்ள பூவண்ணநாத சுவாமி கோயில் பாடல் பெற்ற தலமாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், கருவூர்த்தேவர், சுந்தரர் ஆகியவர்கள் இத்தலத்தைப் பாடியுள்ளனர். இத்தலத்தினை மாணிக்கவாசகரும், திருவாசகத்தில் குறித்துள்ளார். கி.பி. 1543-இல் கந்தசாமிப் புலவரால் "திருப்பூவணப் புராணம்" என்ற தல புராணம் எழுதப்பட்டுள்ளது. பழம்பதிகளுள் ஒன்றான திருப்பூவணத்தை

முடியுடைய தமிழ் வேந்தர் மூவராலும் வணங்கப் பெற்றதென்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

"ஆரா அன்பில் தென்னர் சேரர்
சோழர்கள் போற்றி சைப்பத்
தேரார் வீதி மாடம் நீடும்
தென் திருப்பூவணமே" என்பது அவர் தேவாரம்

வைகையாற்றின் மருங்கே வளமார்ந்த சோலை சூழ்ந்த திருப்பூவணக் கோயிலில் எழுந்தருளியுள்ள ஈசனைப் "பொழில் திகழும் பூவணத் தெம் புனிதன்" என்று திருநாவுக்கரசர் போற்றியுள்ளார்.

இவ்வூரில் மருது சகோதரர்களால் நிறுவப்பட்ட சத்திரத்தில் தற்போது ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நடந்து வருகிறது.

இவ்வாலயம் கிழக்கு மேற்காக 400 அடி நீளமும், தென்வடவாக 327 அடி அகலமும் உள்ளது. ஆலய நுழைவாயிலில் திருமலை நாயக்கர், திருமலை நாயக்கர் பிரதானி ஜெயா தீட்Xிதர் சொக்கப்ப நாயக்கர், நடனமாடும் மாது ஆகியோரின் சிலைகள் காணப்படுகின்றன. கோயிலின் முகப்பில் திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட ராஜகோபுரம் முற்றுப்பெறாத நிலையில் விடப்பட்டுள்ளது. இதேபோன்று கட்டத் தீர்மானிக்கப்பட்ட 64 மண்டபங்களில் பெரும்பாலானவை முற்றுப்பெறாமல் முடிக்கப் பட்டுள்ளன. இந்த கோபுரத்தினை ஒட்டி பொன்னையாள் மண்டபமும், அதனையடுத்து தங்குவதற்கு ஏற்ப மண்டபம் திருமலை நாயக்கர் மஹாலையொத்து மாடம் போன்று கூரை அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபங்களுக்கு முன்பாக மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்குப் பின்புற திருச்சுற்று சுவரில் பிற்காலப் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுகள் உள்ளன. இவை இக்கோயிலுக்கு அளித்த தானங்கள் பற்றித் தெரிவிக்கின்றன. இக்கோயிலுக்கு என்று பிற்கால பாண்டியர் காலத்தில் அளிக்கப்பட்ட இரண்டு செப்பேடுகள் திருப்பூவண சுவாமி கோயிலில் உள்ளன. இவை திருப்பூவணம் புஷ்பவனேஸ்வரர் கோயில் செப்பேடுகள் என அழைக்கப்படுகின்றன.

அவற்றில் ஒன்று முதல் ஜடாவர்ம குலசேகரப் பாண்டியன் அளித்ததாகும் (கி.பி. 1190-1218). மற்றொரு செப்பேடு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அளிக்கப்பட்டதாகும். ஜடாவர்மன் குலசேகரப் பாண்டியன் காலத்தில் அளிக்கப்பட்ட செப்பேடு பல ஏடுகளைக் கொண்ட மிகப்பெரிய செப்பேடாகும். திருப்பூவணத்திலும், திருப்பூவணத்தைச் சுற்றியிருந்த பகுதிகளிலும் வேதம் ஓதியும், கோயில் பூசை செய்தும் வாழ்ந்துவந்த அந்தணர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டோர்க்குத் தானம் அளித்ததைப் பற்றி இந்த செப்பேடு தெரிவிக்கிறது. திருப்பூவணத்திலிருந்து மானாமதுரை செல்லும் வழியில் உள்ள ராஜகம்பீரம் என்ற பெயருடன் இன்று விளங்கும் ஊரைச் சுற்றியிருந்த ஊர்கள் பல ராஜகம்பீர சதுர்வேதிமங்கலம் என்ற பெயரால் இவ்வந்தணர் களுக்குத் தானமாக அளிக்கப்பட்டுள்ளது. (இதன் எல்லைகள் யானைமீது ஏறி வலம் வந்து குறிக்கப்பட்டு, அதிகாரிகளால் அரசனின் ஆணையாக எழுதப்பட்டு, செப்பேடாக வெளியிடப் பட்டுள்ளது. இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இவ்வூர்களோடு மேலும் சில ஊர்கள் தானமாக அளிக்கப்பட்டு மற்றொரு திருப்பூவணச் செப்பேடு அளிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலில் பிற்காலத்தில் திருப்பணி செய்யப் பெற்றமையால் முற்காலப் பாண்டியர் காலத்திலிருந்த கோயிலின் வடிவம் சிதைந்துவிட்டது. அவற்றிலிருந்த பகுதிகள் இக்கோயிலைச் சுற்றி சிதைந்து கிடக்கின்றன. தற்போதுள்ள இக்கோயிலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனியும் கி.பி. 9,10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த துர்க்கை, சப்தமாதர்கள் சிலைகளும் காணப்படுகின்றன.

இச்சிறப்புக்களைப் பெற்ற இவ்வூர் புட்பவனேசுவரர் கோயில் பகுதியில், வட்டெழுத்தில் அமைந்த முற்கால பாண்டிய மன்னர்கள் கல்வெட்டுகள் இரண்டு அண்மையில் கண்டறியப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் ஒன்று கோயிலின் திருச்சுற்றிலும் மற்றொன்று கோயிலின் வெளிப்புறத்திலும் காணப்படுகின்றது. இக்கல்வெட்டுகள் இவ்வூரிலிருந்து சிதைந்துபோன முற்காலப் பாண்டியர் கால சிவன் கோயிலைச் சார்ந்தவையாகும். ஒன்று அக்கோயிலில் இருந்த தூணிலும் மற்றொன்று கருவறைத் திருநிலை வாயிலில் இருந்த

கல்லிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் பாண்டியர் கலை வரலாற்றினையும், அரசியல் வரலாற்றினையும், சேரமன்னர் வரலாற்றினையும், பாண்டியர் சேரர் உறவினையும் அறிய உறுதுணைபுரிகின்றன.

கோயிலின் வடமேற்கு மூலை திருச்சுற்று நடைபாதையில் பதிக்கப்பட்டிருக்கும் இக்கல்வெட்டில் சடையன் மாறனின் (இராசசிம்மனின்) இரண்டாவது ஆட்சியாண்டில் குணவூர் அய்யன் மணக்காடு உடையான் என்பவனின் அக்கனும் (அக்காள்) வீரபாண்டிய வீணைமாராயன் ஆயின அரையன் வீரநாராயணன் என்பவனின் மணவாட்டியுமான கொம்மணசாமி என்பவர் சிறி கோயில் எடுத்து பிரதிட்டை செய்து அக்கோயிலில் ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்காக எழுபத்தைந்து ஆடுகள் திருப்புவனத்துத் தேவர் வெட்டிக்குடி (இடைக்குடி) பூவணவன் அரையன் என்பவனுக்கு அளித்ததைத் தெரிவிக்கிறது. இவற்றைப் பெற்றுக்கொண்ட பூவணவன் அரையன் நிசதம் திருப்புவணத்துத் தேவர்க்கு நாட்தோறும் உழக்கு நெய்க்குக் குறையாமல் அளிக்கவேண்டுமென்றும் இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டில் இரண்டு பாண்டிய அதிகாரிகள் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. இக்கல்வெட்டில் இவ்வூர் குளம் இராசசிங்க குளம் என்று இராசசிம்மனின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கின்றது. திருப்புவனத்தில் உறைகின்ற சிவனுக்கு கற்றளி எடுத்தது ஒரு பெண் என்பதை இக்கல்வெட்டு செய்தி உணர்த்துகின்றது. இவ்வூரில் மருது சகோதரர்களால் நிறுவப்பட்ட சத்திரத்தில் தற்போது ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நடந்துவருகிறது.

புட்பவனேசுவரர் கோயில் கிழக்குப்புற சுவரின் வெளிப்புறத்தில் சாலையில் கிடக்கும் உடைந்த தூணில் உள்ள கல்வெட்டில் சடையன்மாறனின் (இராசசிம்மன்) நான்காம் ஆட்சியாண்டில் திருப்புவனத்துப் படாரர்க்கு ஒரு நந்தாவிளக்கு எரிப்பதற்காகச் சேர மன்னனான சேரமாநார் இராசாதித்தவர்மரான கோக்கோனதவர்மர் நூறு ஆடுகள் அளித்ததைத் தெரிவிக்கின்றது. இவ்வாடுகளை இவ்வூர்ப் (இடைக்குடி) படைத்தலைவன் விடையாபதி காத்து மேய்த்துத் திருப்புவனத்துப் படாரர்க்கு நாட்தோறும் உரி நெய் அளிக்கவேண்டும். இவனுக்குப் புணையாக

யார் விளங்கியது என்பதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. பாண்டியர்க்கும் சேரர்க்கும் உள்ள தொடர்பைத் தெரிவிக்கும் வகையில் முற்காலப் பாண்டியன் கல்வெட்டு ஒன்றில் சேர மன்னன் ஒருவன் குறிப்பிடப்படுவது சிறப்பான செய்தியாகும்.

திருப்பூவணம் புட்பவனேசுவரர் கோயில் திருச்சுற்று நடைபாதையில் வடமேற்கு மூலையில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் இரண்டு கற்களில் உள்ள கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. ச்சடையமர்
3. ற்க்கு யாண்டு 2
4. இவ்வாண்டு
5. ராசசிங்க
6. ளக்கீழ் குண
7. வூர் அய்யன்
8. மணக்காடு
9. டையானுக்கு வீ
10. ரபாண்டிய வீ
11. ணை மாராயன்
12. ஆயின அரை
13. யன் வீரநாரா
14. யணன் மணவாட்
15. டி கொம்மன
16. சாமி அக்க
17. ன் சிரி கோயி
18. ல் எடுத்து பி
19. ரதிட்டை செ
20. ய்து ஒரு திரு
21. நொந்தா விள
22. க்கு வச்சு
23. இதனுக்கு
24. குடுத்த சாவா மூவாபே
25. (ரா)டு 75 எ(ழு)பத்தஞ்
26. சும் காத்து வச்சு நி
27. சதம் நாராய உழக்கா
28. ல் உழக்கு நெய் மு
29. ட்டாமல் சுட்டுவா
30. ன் திருப்புவணத்து
31. தேவர் வெட்டிக்குடி
32. பூவணன் அரைய
33. ன் இவனுக்கு
34. தேவன் அ
35. . . . . . .

கிழக்குப்புற சுவரின் வெளிப்புறத்தில் சாலையில் கிடக்கும் உடைந்த தூணின் கல்வெட்டு:-

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ
2. ச்சடையமாறக்க
3. யாண்டு 2 இதனெதி
4. ர் 2 இவ்வாண்டு
5. திருப்பூவணத்து
6. ப்படாரர்க்கு
7. நார் இராசாதித்
8. தவர்ம் மராஇனகோ
9. க்கோதைவர்ம்மர் வை
10. த்த திருநொந்தா வி
11. ளக்கு ஒன்றினு
12. க்கு பகலும் இரவு
13. முட்டாமல் எரிவதா
14. க வைச்ச சூடு நூறு

15. இவை சாவா மூவாப்
16. (பேராடா)கப் பகலும்
17. காத்து மே(ச்சு)
18. நாராய உழ
19. க்கால் நி
20. யதி உரி
21. ய் நெய் மு
22. ட்டாமல்
23. சுட்டுவா
24. ன் இவ்வூ
25. ர் படைத்த
26. ல்வன் (வி)
27. டையாபதி
28. இவனுக்
29. குப் புணை
30. இவ்வூர்
31. படைத்தலை
32. வன் நி . . .
33. வன் வி
34. ந்தன் இ
35. . . . . .
36. . . . . .

## மானாமதுரை வட்டம் - மாரநாடு

திருப்பாச்சேத்திக்கு கிழக்கே ஒரு கல் தொலைவில் அமைந்துள்ள இவ்வூர் மாறை நாடு என அழைக்கப்பட்ட நிலையில் பிற்காலத்தில் மாரநாடு என வழக்கில் மாறியுள்ளது.

## மானாமதுரை வட்டம் - மடப்புரம்

மதுரையிலிருந்து 30 கி.மீ. தொலைவில் திருப்பூவணத்தை யடுத்து 3-ஆவது கி.மீ. தொலைவில் உள்ளது. வைகையாற்றின் குறுக்காகவும் இவ்வூரை சென்று அடையலாம்.

அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் கோயிலும் காளியம்மன் கோயிலும் ஒரே சுற்றடைப்பில் இவ்வூரில் காணப்படுகின்றன. காளியம்மன் வழிபாடு இங்குள்ள மக்களாலும், சுற்றுப்புற மக்களாலும் அண்மை காலங்களில் புகழ்பெற்று வரத் தொடங்கியுள்ளது. இக்கோயிலில் நவகண்டம் கொடுத்ததற்கான வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இரண்டு உள்ளன. அய்யனார் கோயிலில், கன்னிமார் எழுவரில், வராகி தவிர பிற சிற்பங்கள் உள்ளது. சிவன் உமையோடு காணப்படுகிறார். கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

அய்யனார் கோயில் கருவறைக்குள் நுழையும் நுழைவாயில் இருபுறமும் வாயிற்காவலர்கள் போன்று இரண்டு சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் கல்வெட்டு காணப்படுகிறது. வலதுபுறம் உள்ள சிற்பத்தின் தலைக்கு மேல்

கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு எழுத்தமைதியோடு காணப்படுகிறது.

வீரன் ஒருவன் இடது காலை மண்டியிட்டு வலது முழங்காலை தரையில் வைத்து இடக்கையால் தம் குடுமியைப் பிடித்து, வலது கையில் பிடித்துள்ள கத்தியில் தம் தலையை அறுக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளான். குடுமி பிடித்த கையின் முன் வளைப்பகுதி சிறிது உடைந்துள்ளது.

இடதுபுறம் வைக்கப்பட்டிருக்கும் சிற்பத்தில் காட்டப் பட்டிருக்கும் வீரன் வலது காலை மண்டியிட்டு இடது முழங்காலைத் தரையில் வைத்து இடது கையில் தமது குடுமியைப் பிடித்து வலது கையில் பிடித்துள்ள கத்தியால் தம் தலையை அறுக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளான். இடைக்கச்சு காணப்படுகிறது. தலையின் மேல் பகுதி சிதைந்துள்ளது. இங்கு கி.பி 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக்கள் இரு வரிகள் காணப்படுகிறது.

## மானாமதுரை வட்டம் - திருப்பாச்சேத்தி

இவ்வூர் மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் வழியில் இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் வைகையாற்றின் தென்கரைப் பகுதியில் அமைந்துள்ளது. இதன் பழைய பெயர் திருப்பாச்சேத்தி ஆகும். இவ்வூரில் பல கோயில்கள் இருந்திருப்பதை இங்குள்ள பிற்கால பாண்டியரது கல்வெட்டுகள் தெரிவிக்கின்றது. திருப்பாச்சோற்றி உடைய நாயனார், திருவேங்கட விண்ணக ஆழ்வார், அய்யனார் குளிர்காவுடையார், தந்தீஸ்வரமுடையார், பிடாரியார் என்று இக்கோயில் தெய்வங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. சுந்தரபாண்டியன் காலத்தில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களுக்கான வரிகள் விலக்கு செய்யப்பட்டுள்ளது. தற்போது இவ்வூரில் உள்ள பெருமாள் கோயில் மலை மண்டல விண்ணகர ஆழ்வார் என்று பெயர் பெற்று விளங்கியுள்ளது. விக்கிரம பாண்டியன் காலத்தில் இதற்கு கன்னட பிராமணர் ஒருவர் வழிபாடு நடத்துவதற்காக நிலங்கள் அளித்துள்ளார். கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் குலசேகரன் காலத்தில் நாற்பது அந்தணர் குடும்பங்களின் குடியிருப்பு இவ்வூரில்

ஏற்படுத்தப்பட்டுள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலேயே இவ்வூரில் சதுர்வேதிகளுக்கு நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டுள்ளன.

கி.பி. 1550-இல் திருப்பாச்சோற்றி என்ற இவ்வூரின் பெயர் சதாசிவ தேவராயபுரம் என்று விஜயநகர மன்னரின் பெயரில் மாற்றப்பட்டிருக்கின்றது. இராமராஜவிட்டல தேவ மகாராஜா சர்வேஸ்வர குருக்கள் என்ற சைவ சமய குரவருக்கு இவ்வூரைத் தானமாக அளித்துள்ளார். ஆனால் இவ்வழியில் இராமேஸ்வரம் செல்லும் பயணிகளிடமிருந்து வரி வசூலிக்கக் கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

திருப்பாச்சேத்தியின் வடக்கே கானூருக்குச் செல்லும் வழியில் உள்ள கண்மாயின் கரைப்பகுதியில் அய்யனார் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக்கோயிலின் மேற்கே கண்மாய் கரைப்பகுதியில் முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சார்ந்த திருமாலின் சிற்பத் தொகுதி ஒன்றுள்ளது. இதனையும் சேர்த்து மூன்று திருமால் சிற்பத் தொகுதிகள் இவ்வூரில் கிடைத்துள்ளன. இத்திருமாலின் சிற்பத் தொகுதிகளில் மிகப்பழமையானது கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும். தற்போது இது திருப்பாச்சேத்தி சிவன் கோயிலின் உள்ளே பின்புற மதில் சுவரின் அருகே எடுத்து வைக்கப்பட்டுள்ளது. நான்கு கரங்களுடன் கம்பீரமான தோற்றத்துடன் கனத்துத் தொங்கும் அடைக் கட்டுகளுடன் நின்ற நிலையில் இத்திருமாலின் தோற்றம் விளங்குகிறது. இத்திருமாலின் இருபுறமும் தனித்த நிலையில் அவரது தேவியரான ஸ்ரீதேவியும், பூதேவியுடன் நிற்கின்றனர். இக்கோயிலில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் பாண்டியர் ஆட்சி மறையும் காலத்திலும், சோழர் ஆட்சி செல்வாக்குப் பெறத் தொடங்கும் காலத்திலும் மிகச்சிறந்த கலைமரபு கொண்ட அமர்ந்த நிலையிலுள்ள மற்றொரு திருமாலின் உருவம் அவரது தேவியரது உருவங்களோடு செய்விக்கப் பட்டிருக்கின்றன. இவற்றில் திருமாலின் உருவம் மட்டும் தற்போது அக்கோயில் இருந்த பகுதியிலேயே அய்யனார் கோயிலுக்கு அருகே வயல் நடுவே உள்ளது. இத்திருமாலின் சிற்பத்தினைச் சார்ந்த தேவியரது உருவங்கள் இரண்டு, இத்திருமாலின் சிற்பம் காணப்படும் இடத்திற்கு அருகில் அமைந்த அய்யனார் கோயில்

பகுதியில் உள்ளன. அழிந்துபட்ட இப்பெருமாள் கோயிலில் இருந்த மற்றொரு திருமாலின் சிற்பம் ஒன்று திருப்பாச்சேத்தி தெப்பக்குளத்தின் பகுதியில் எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இடுப்பிற்கு மேற்புறம் மட்டும் உள்ள இச்சிற்பம் கரங்கள் இழந்த நிலையில் காட்சியளிக்கின்றது. இச்சிற்பம் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த பிற்காலப் பாண்டியர் சிற்பமாகும். அழிந்துவிட்ட இக்கோயிலுக்குரிய வட்டெழுத்துக் கல்வெட்டு பொறித்த துண்டு கல் ஒன்று அய்யனார் கோயிலில் வைத்துக் கட்டப்பெற்றுள்ளது. திருப்பாச்சேத்தி சிவன் கோயிலில் காணப்படும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள் மூலம் இவ்வூரில் திருவேங்கடநாத விண்ணகர், மலை மண்டல விண்ணகர் என்று இரு பெருமாள் கோயில்கள் இருந்தது பற்றி அறியமுடிகிறது. இங்குள்ள பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளும், மலைமண்டல விண்ணகராழ்வார் கோயில் இருந்ததை உறுதிப்படுத்துகிறது.

7.6.1801-இல் மருது ஆட்சியின்போது கிழக்கிந்திய கம்பெனி, படைகள் திருப்பாச்சேத்தி வழியாகப் படையெடுத்து வந்தபொழுது கடுமையான யுத்தம் மருது படையினருக்கும் கும்பினியருக்கும் இங்கு நடைபெற்றது. இந்த யுத்தத்தில் பெரும்பாலான கும்பினியர்கள் கொல்லப்பட்டனர். இங்கு ஒரு வைஷ்ணவ ஆலயமும், ஒரு மசூதியும் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் நளச்சக்ரவர்த்தியால் கட்டுவிக்கப்பட்டது. இறைவன் திருநோக்கிய அழகியசாமி, இறைவி திருநோக்கிய ஆசைநாயகி அம்மன் ஆகும். மருது சகோதரர்களால் இரு லிங்கமும், மரகதமும் அளிக்கப்பட்டு அம்மன் சந்நிதி கட்டுவிக்கப்பட்டது. கல்வெட்டுகள் இங்கு உள்ளது.

இவ்வூர் அரிவாளுக்குப் பெயர் பெற்ற ஊராகும்.

## மானாமதுரை வட்டம் - மானாமதுரை

மதுரைக்குக் கிழக்கே 28 மைல் தொலைவிலும் சிவகங்கையிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும் வைகை நதியின் மேற்குக் கரையில் உள்ளது. "கடலினுக்கு ஓர் குணபாலா ஆன இரண்டாம் யோசனை எல்லை" என்று புராணம் கூறுகிறது. வடமொழிப் புராணம் மானாமதுரை, மதுரையிலிருந்து மூன்று

யோசனை தூரத்தில் உள்ளதாகக் கூறுகின்றது. மாவலி வாணாதிராயன் என்பவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சிற்றரசர்களாக வாழ்ந்தார்கள். ஜடாவர்ம பாண்டியன் காலத்தில் மாவலி வாணாதிராயன் மானாமதுரையைக் கைப்பற்றினான் என்று வரலாறு கூறுகின்றது.

நாயக்கப் பேரரசின் முதல் மன்னனான விஸ்வநாத நாயக்கர் எழுபத்திரண்டு பாளையங்களை உள்ளடக்கியிருந்த தென்னாட்டினைப் பாளையப்பட்டு என்றும், அதை நிர்வகித்து வந்தவர்களைப் பாளையக்காரர் எனவும் அழைத்தார். அவர்களுள் இவ்வாணாதிராயர்கள் சிலரும் இருந்தனர். அதில் மானாமதுரை பாளையக்காரரும் ஒருவர் ஆவார். வாணாதிராயர்களின் ஆட்சியில் இருந்தமையால் வாணாதிராய மதுரை எனப் பெயர் பெற்றிருந்தது. அதுவே வாணராய மதுரை என்று ஆகிப் பின்னர் மானாமதுரை என்று மருவி வழங்கப்படுகிறது. கந்தாசாகிபின் மதுரை படையெடுப்பின் போது, மீனாட்சி அம்மன் கோயில் சிலைகள் இங்கு கொண்டுவரப்பட்டு இரண்டு ஆண்டுகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததால் "சின்ன மதுரை" என்ற பெயரும் உண்டு.

இத்தலத்தில் உள்ள இலிங்கமூர்த்தி சோமேச லிங்கத்திற்குப் பண்டைய நாளில் திரிபாகநாதர் என்றும், திரிபதேசுவரர் என்றும் பெயர்கள் இருந்தன. வில்வமரக்காடுகள் அடர்ந்து இருந்தமையால் மானாமதுரை வில்வவனம் என்றும் கூவிளவனம் என்றும் அழைக்கப்பட்டது. இந்த வில்வவனத்தளம் சதுர்யுகங்களுக்கு முன்பே தோன்றியதாக வரலாறு கூறுகிறது.


நீர்த்தலமுடைய ஐயனார் கோயில் ஒன்று மானாமதுரை சந்திப்பிலிருந்து 1 பர்லாங் தூரத்தில் 0.15 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பூசாரிப் பரம்பரையாக வரும் வேளாளர் ஆவார்கள். இதேபோன்று மானாமதுரை சந்திப்பிலிருந்து 1.5 கல் தொலைவில் ஸ்ரீசங்கு விநாயகர் கோயில் 1.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதன் பூசாரி பரம்பரை பிள்ளை ஆவார். ஸ்ரீதியாக வினோதப் பெருமாள் ஆலயம் சந்திப்பிலிருந்து ½ கல் தொலைவில் 0.3 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் பூசாரி பரம்பரை பட்டர் ஆவார்.

இவ்வூரில் உள்ள கல்கோட்டைமேடு எனப்படும் மேட்டுப் பகுதியில் இராமநாதபுரம் சேதுபதியால் கட்டப்பட்ட முக்கிய கோட்டை ஒன்று இருந்தது. தற்போது இருந்த சுவடே இல்லாமல் அழிந்துவிட்டது.

வைகையாற்றின் கீழ்க்கரையில் வீரஅழகர் கோயில் ஒன்றும் அமைந்துள்ளது. மூலவர் சுந்தரராஜப் பெருமாள் 6'0" உயரமும் இறைவி உபயநாச்சியார் சுந்தரவல்லி 4½' உயரமும் உடையதாகவும் உள்ளது. கோயிலின் வாயிற்பகுதியில் 8'0" உயரமுள்ள ஹனுமார் ஒன்றும் உள்ளது.

இரண்டு கிறித்துவாலயமும் ஒரு மசூதியும் இவ்வூரில் உள்ளது. வைகையாற்றின் கீழ்க்கரையில் அப்பன் பெருமாள் கோயில் ஒன்றும் உள்ளது.

92



# கல்வெட்டில் உள்ள ஊர் பெயர் மாறிய விதம்

| தற்போதைய ஊர் பெயர் | கல்வெட்டில் உள்ள ஊர் பெயர் |
|---|---|
| **சிவகங்கை வட்டம்** | |
| 1. சிவகங்கை | ஹுசைன் நகர் |
| 2. இடைக்காட்டூர் | அழகிய பாண்டிய நல்லூர், இடையர் காட்டு ஊர், மத்யராமேஷ்வரம் |
| 3. காளையார் கோயில் | கானப்பேர் |
| 4. நாட்டரசன்கோட்டை | நாட்டரசன்கோட்டை |
| **காரைக்குடி வட்டம்** | |
| 1. கோவிலூர் | கழனிவாசல், சிவாலபுரம், ஏழகப்பெருந்தெரு |
| 2. காரைக்குடி | காரிக்குடி |
| 3. சாக்கோட்டை | சாய்களூர் |
| 4. அரியக்குடி | ஹரிக்குடி |
| **தேவக்கோட்டை வட்டம்** | |
| 1. தேவக்கோட்டை | தேவக்கோட்டை |
| 2. கல்லங்குடி | திருச்சிற்றம்பலநல்லூர் |
| 3. உஞ்ஞனை | உஞ்சேனைமாகாளம் |
| 4. சிறுவெற்றி | சிறுபுத்தூரான வீரபத்திர நல்லூர் |
| **இளையாங்குடி வட்டம்** | |
| 1. இளையாங்குடி | இளான்குடி, இளையாத்தாங்குடி |
| 2. சாலைக்கிராமம் | குலோத்துங்க சோழநல்லூர்சாலை கிராமம் |
| | கூற்றம் மயிமாகர வளநாடு |

## திருப்பத்தூர் வட்டம்

| | |
|---|---|
| 1. திருப்பத்தூர் | திருப்பத்தூர், வால்மீகிபுரம், எறும்புக்குன்று நகர் |
| 2. திருக்கோஷ்டியூர் | திருக்கோட்டியூர் |
| 3. அரண்மனை சிறுவயல் | சிறுவயல் |
| 4. திருக்காலக்குடி | திருக்கோலக்குடி |
| 5. பிரான்மலை | பறம்புமலை, திருக்கொடுங்குன்றம் |
| 6. மகிபாலன்பட்டி | பூங்குன்றம் |
| 7. பிள்ளையார்பட்டி | எருக்காட்டூர், எக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைகுடி, இராசநாராயணபுரம் |
| 8. சதுர்வேதிமங்கலம் | மட்டியூர், நிரூப சேகர சதுர்வேதிமங்கலம் |
| 9. நேமம் | நியமம் |
| 10. குன்னக்குடி | திருக்குன்றக்குடி |
| 11. சீவல்பட்டி | ஸ்ரீ வல்லவபுரம் |
| 12. வடவன்பட்டி | மலைராயன்குடி, கடம்பன்குடி |
| 13. இரணியூர் | இரணி, இரணியம் |
| 14. சிவபுரி | சோழமார்த்தாண்டச் சதுர்வேதி மங்கலம், நிருபசேகரச் சதுர்வேதி மங்கலம் |
| 15. பெருச்சி கோயில் | ஜெயங்கொண்ட சோழநல்லூர், மருதூர் |

### மானாமதுரை வட்டம்

| | |
|---|---|
| 1. மானாமதுரை | வானரமதுரை, சின்ன மதுரை, வானரவீரமதுரை |
| 2. திருப்பாச்சேத்தி | திருப்பாற்சோற்றி |
| 3. திருப்புவனம் | திருப்பூவணம் |
| 4. ராஜக்கம்பீரம் | ராஜக்கம்பீரச்சதுர்வேதிமங்கலம் |
| 5. மாறைநாடு | மாரநாடு |

# சிவகங்கை மாவட்ட வரலாற்று நிகழ்வுகள்

கி.பி. 1120 - திருப்புத்தூர் வட்டம், திருக்கோஷ்டியூர் ஆலயத்தில் கீழத்திருநிலை எனப்படும் பகுதியில் உள்ள பள்ளியறை பெருமான் முன் தூங்கா விளக்கு எரிக்க ஒரு பெண் பொருள் தானம் செய்தார்.

கி.பி. 1220 - சுந்தரபாண்டியன் அமைச்சர்களில் ஒருவரானவரும், குன்றக்குடி அருகில் உள்ள நேமத்தைச் சேர்ந்தவருமான காங்கேயன் கற்பக விநாயகருக்கு நித்தியபடி காலம் ஏற்படுத்தி தன் பெயர் விளங்க "காங்கேயன் சந்தி" என்று சந்தி ஒன்று ஏற்படுத்தி உள்ளான்.

கி.பி. 1233 - சிவகங்கை வட்டம், திருமலையில் உள்ள ஆலயத்தில் "ஐநூற்றுவர் திருக்காவனம்" என்ற அரங்கு பொதுமக்கள் உபயோகத்திற்கு அமைக்கப்பட்டது.

கி.பி. 1245 - திருப்புத்தூர் வட்டம், பெருச்சிக்கோயில் பகுதியில், சோழர்களின் ஆட்சியில் ஏற்பட்ட வரிப்பளுவை பாண்டியரது அரசியல் தலைவரான காங்கேயன் நிலங்களை சரியாக அளந்து மகசூலுக்கு தக்க வரிவிதிப்பு ஏற்படுத்தினான்.

கி.பி. 1265 - அரண்மனை சிறுவயல், மும்முடி சோழீஸ்வர முடையார் கோயிலில் இருந்த திருகோட்டமுடைய நாச்சியாருக்கும், ஸ்கந்த தேவருக்கும் வழிபாடு செய்வதற்காக ஒரு பெண் தானங்கள் அளித்துள்ளார்.

கி.பி. 1275 - வீரபாண்டியன் காலத்தில் அரன்மனை சிறுவயல், மும்முடி சோழீஸ்வரமுடையார் கோயிலில் ஒரு பெண்; ஆவுடைய நாயனாரையும், அவரது தேவியரையும் எழுந்தருளச் செய்துள்ளார்.

கி.பி. 1325 - சிரியா நாட்டு ஆசிரியரான திமிஸ்கி என்பவர், காளையார்கோயில் வந்து சென்ற போது "மாபார்" நகரத்தினைப்போல, காளையார் கோயில் பிரதான நகரமாக உள்ளதை அவர் விட்டுச் சென்ற குறிப்புகள் கூறுகிறது.

கி.பி. 1328 - தில்லியிலிருந்து வந்த இஸ்லாமிய படைகளுக்கு பயந்து, ஸ்ரீரங்கத்துப் பிள்ளை லோகாத்கார்யாவின் தலைமையில் வந்த குழு ஒன்று, ஸ்ரீரங்கநாதரது பொன் திருமேனியையும் விலையுயர்ந்த பொருட் களையும் எடுத்துக்கொண்டு; திருக்கோஷ்டியூர், காளையார் கோயில் ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்தனர்

கி.பி. 1359 - மதுரை சுல்தான்கள் வன்னியன் சூரைக்குடி அரையர்களை அழித்து மாத்தூர், விரையார்சிலை, திருக்கோஷ்டியூர் பகுதி மக்களுக்கு காவல் உரிமை வழங்கியது.

கி.பி. 1369 - அறந்தாங்கியர்கள் பயத்தை நீக்கிய மதுரை சுல்தான்களது ஆட்சிக்கு, தேவகோட்டை பகுதி மக்கள் இணக்கம் அளித்து, கல்லில் பிரமாணம் செய்து கொடுத்தது.

கி.பி. 1382 - விஜயநகர அரசரான சயனர் என்பவர் காலத்தில், நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்த பிராமணர்களின் சமுதாய நடைமுறை வாழ்க்கையினை ஒழுங்குபடுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கி.பி. 1468 - குருகுலத்தரையன் என்பவன் திருப்புத்தூர் வட்டம், பெருச்சிக்கோயில் இறைவனுக்கும், இறைவிக்கும் செப்புத் திருமேனிகளைச் செய்தளித்து, அவற்றிற்கு பூஜைகளும், திருவிழாக்களும் நடைபெற ஏற்பாடு செய்தான்.

கி.பி. 1484 - சொக்கநாராயண விஜயாலத்தேவன் என்பவன் ஆனைமங்கலம் என்ற ஊரில் நிலங்கள்

சிலவற்றைத் தன் குருவாக விளங்கிய திருப்புனவாசல் முதலியாருக்குத் தானமாக அளித்துள்ளான்.

கி.பி. 1504 - விஜயநகரப் பேரரசுக்குக் கட்டுப்பட்டு பரமக்குடி பாளையத்தின் கர்த்தா தும்பிச்சி நாயக்கர், காளையன் நாட்டு வெள்ளைப்பள்ளம் என்ற ஊரை திருப்புத்தூர் கோயிலுக்கு தானமாக வழங்கினார்.

கி.பி. 1511 - சிவகங்கை வட்டம் காளையார் கோயில் மடப்பள்ளியைத் தனபாலன் என்பவர் எடுத்துக் கட்டியதை இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது.

கி.பி. 1550 - சூரைக்குடி பெட்டப்ப விஜயாலாய தேவன் என்பவன், காரைக்குடி வட்டம், கோவிலூர் எடுத்துக் கட்டியதை இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. கோயிலுக்கு தங்கத்திலான சுப்பிரமணியர் விக்கிரகம் ஒன்று வழங்கியதுடன், கார்த்திகை மாதத்தில் இக்கோயிலில் சிறப்பான விழா நடத்துவதற்கு மானியங்கள் அளித்துள்ளான்.

கி.பி. 1550 - மானாமதுரை வட்டம், திருப்பாச்சோற்றி என்ற இவ்வூரின் பெயர், சதாசிவ தேவராயபுரம் என்று விஜயநகர மன்னரின் பெயரில் மாற்றப் பட்டிருக்கிறது.

கி.பி. 1560 - திருப்புத்தூர் வட்டம் குன்றக்குடி கோயிலின் முன்பிருந்த மண்டபம் இளையாங்குடி நகரத்தாரால் புதுப்பிக்கப்பட்டது.

கி.பி. 1686 - மறவர் சீமைக்குள் புகுந்த ஜான். டி. பிரிட்டோ வெள்ளான் குளம், பனங்குடி, பாகனேரி ஊர்களில் சமயப் பிரசாரத்தைத் தொடங்கினார்.

கி.பி. 1710 - இராமநாதபுரத்தின் 8-ஆவது அரசராக கிழவன் சேதுபதிக்குப்பின் விஜய ரெகுநாத சேதுபதி முடிசூட்டிக் கொண்டார்.

கி.பி. 1714 - திருப்புத்தூர் வட்டம் நேமம் கிராமத்தில் உள்ள ஆலயம் சௌந்திரபாண்டியன் அரசரால்

நாட்டுக்கோட்டைச் செட்டியாருக்கு இனாமாக அளிக்கப்பட்டது.

கி.பி. 1723 - திருப்புத்தூர் வட்டம், பிரான்மலை கோயிலில் அரிசி, பருப்பு முதலியவைகளை அளப்பதற்கு "திருநாவுக்கரசு நாழி" என்ற பெரும்படி பயன்படுத்தப்பட்டதாக கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கி.பி. 1730 - நாலுக்கோட்டை பாளையத்தைச் சேர்ந்த பெரிய சசிவர்ணத்தேவர், இராமநாதபுரம் பவானி சங்கர சேதுபதியை வென்று, 22.01.1730-இல் சிவகங்கை நகரை உருவாக்கினார்.

கி.பி. 1732 - இராமநாதபுரம் சீமையின் வட பகுதியை ஆக்கிரமித்த தஞ்சை மராட்டியரை, இராமநாதபுரம், சிவகங்கை சீமைகளின் இணைப்பு படைகள் துரத்தியடித்தது.

கி.பி. 1733 - இளையாங்குடியில் உள்ள திரு. ராஜாபட்டர் என்பவரிடம் உள்ள விஜயரகுநாத பெரிய உடையார் தேவர் என்பவர், திருக்கை நாட்டு இந்திரா அவதார நல்லூரான இளையாங்குடியில் உள்ள இராஜேந்திர சோழீஸ்வர கோயிலிலும், மனம் மகிழ்ந்தீஸ்வரர் கோயிலிலும் பூஜை, நைவேத்யம் முதலியன செய்வதற்காக கைலாச நம்பியார் என்பவருக்குத் திருவுடையாபுரம் என்னும் கிராமத்தை சர்வமானியமாக எழுதிக் கொடுத்ததைத் தெரிவிக்கிறது.

கி.பி. 1772 - ஆற்காட்டு நவாப்பின் படை சிவகங்கை கோட்டையைப் பிடித்தது. சிவகங்கை மன்னர் முத்துவடுகத்தேவர், காளையார் கோயிலில் 25.6.1772-இல் நடைபெற்ற போரில் வீரமரணம் அடைந்தார்.

கி.பி. 1780 - மருது சகோதரர்களால் மைசூர் மன்னர் ஹைதர் அலி உதவி பெற்று, ஆற்காடு நவாப்பிடமிருந்து சிவகங்கை கோட்டையை மீட்டு, ராணி வேலு நாச்சியாரை அரசியாக அறிவிக்கப்பட்டது.

கி.பி. 1780 - இராணி வேலு நாச்சியார் மருது சகோதரர்கள் வசம் நிர்வாகத்திற்கான அதிகாரத்தினை அளித்தார்.

கி.பி. 1784 - முத்து வடுகநாத தேவரால் இஸ்லாமிய பள்ளிகளுக்கும், தர்ஹாக்களுக்கும் பல நிலக் கொடைகள் வழங்கப்பட்டது.

கி.பி. 1789 - சிவகங்கை வட்டம் கொல்லங்குடியில்; சிவகங்கை அரசருக்கும், கிழக்கிந்திய கம்பெனியாருக்கும் மே திங்களில் யுத்தம் நடைபெற்றது.

கி.பி. 1789 - சிவகங்கையின் மூன்றாவது அரசி இராணி வேலுநாச்சியார் 25.12.1789-இல் திருப்புத்தூரில் ஆற்காடு நவாப்பால் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

கி.பி. 1801 - மே 28-ஆம் நாள்; பாஞ்சாலங்குறிச்சியில் தோல்வியுற்ற ஊமைத்துரை, சிவகங்கை வந்து சேர்ந்தார்.

கி.பி. 1801 - மானாமதுரை வட்டம், திருப்பாச்சேத்தி வழியாக கிழக்கிந்திய கம்பெனி படையெடுத்து வந்தபோது கும்பினியருக்கும், மருது படையினருக்கும் 07.06.1801-இல் கடுமையான யுத்தம் நடைபெற்றது.

கி.பி. 1801 - சிவகங்கை அரசருக்கும் கிழக்கிந்திய கம்பெனியருக்கும் சிவகங்கை வட்டம் ஒக்கூரில் நடைபெற்ற போரில் இவ்வூர் முழுமையாக 28.07.1801 அன்று நெருப்பால் அழிவுற்றது.

கி.பி. 1801 - சிவகங்கை வட்டம், சோழபுரத்தில் சிவகங்கை அரசரான படமாத்தூர் கௌரி வல்லவ பெரிய உடைய தேவருக்கு 03.09.1801-இல் கர்னல் அக்னியூ மற்றும் கர்னல் இன்ஸ் ஆகியோரால் முடிசூட்டப்பட்டது.

கி.பி. 1801 - ஆங்கிலத் தளபதி அக்னியூ படைகளால் காளையார் கோயிலைத் தாக்கும் வகையில், சிவகங்கை வட்டம், முத்தூர் கிராமம்; செப்டம்பர் திங்கள் 30-ஆம் நாள் முற்றுகை இடப்பட்டது.

கி.பி. 1801 - அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் பகல் 11.00 மணிக்கு, கும்பினியர்களின் படைகள் மூன்று புறங்களிலிருந்து தாக்கியபடி, காளையார் கோயிலுக்குள் புகுந்தது.

கி.பி. 1801 - அக்டோபர் 24-இல் மறவர்சீமை முழுவதும் மருது சகோதரர்கள் தலைமையில், கம்பெனியாருக்கும் மே திங்களில் யுத்தம் நடைபெற்றது. ஆற்காடு நவாப்புக்கு எதிரான புரட்சி தீவிரமாக பரவியும் தோல்வியுற்றதால், அனைவரும் தூக்குமேடை ஏற்றப்பட்டனர்.

கி.பி. 1801 - கர்நாடக நவாப்புகளுக்கும், கம்பெனியார்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், லஸ்ஸிங்டன் வெள்ளையன்; திருநெல்வேலிக்கும், மறவர்களுக்கும் ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்கையில், சிவகங்கை பாளையத்தின் நிர்வாகத்தையும் தன்வசம் வைத்துக்கொண்டான்.

கி.பி. 1812 - சிவகங்கை அரசரது சிப்பந்திகள் போர்வாள் அணிந்து கொள்ள கும்பினியர்கள் அனுமதித்தது.

கி.பி. 1852 - சிவகங்கை வட்டம், இடைக்காட்டூரில் செயின்ட் ஜேம்ஸ் என்ற கிறித்துவாலயம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஆர். பி. பெர்னாண்டஸ் செலி எஸ்.ஐ என்பவரால், மரியா அன்னா என்ற ஆங்கிலேய மாதுவின் நிதி உதவிகொண்டு, ஜோதி வடிவில் 150 அடி நீளமும், 100 அடி அகலமும், 90 அடி உயரமும் உடைய கோபுரத்துடன் கட்டப்பட்டது.

கி.பி. 1864 - இடைக்காட்டூரில் உள்ள புனிதத் திருஇதய தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு 15.8.1864-இல் "புனித அபிஷேக ஆராதனை" விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கி.பி. 1882 - சிவகங்கை அரசின் கடைசி அரசர் முத்து வடுகநாதத் தேவர் வெள்ளையர்களின் தளபதி

ஜோசப் ஸ்மித்துடன் போராடி காளையார் கோயிலில் வீரமரணம் அடைந்தார்.

கி.பி. 1883 - லட்சுமி அம்மாள் என்ற பெண்மணி, சிவகங்கையில் உள்ள சுப்பிரமணியர் கோயிலை முறைப்படி 26.02.1883-இல் பதிவு செய்து, பத்திரம் மூலமாக மன்னரிடம் பராமரிப்பிற்காக ஒப்படைத்தார்.

கி.பி. 1885 - சிறிய நகரமாக விளங்கிய காரைக்குடி, ஊராட்சி ஒன்றியமாக மாற்றப்பட்டது.

கி.பி. 1890 - 65-ஆவது காமகோடி பீட ஸ்ரீமகாதேவேந்திர சரஸ்வதி சுவாமிகள், மார்ச் மாதத்தில் இராமேஸ்வரத்திலிருந்து திரும்புகையில் இளையாத்தங்குடி வருகை புரிந்தார்.

கி.பி. 1893 - சிவகங்கையில், சிவகங்கை மன்னரால் உயர்நிலைப் பள்ளி துவங்கப்பட்டது.

கி.பி. 1895 - இராமநாதபுரம் மாவட்டத்தின் வழக்கறிஞர்கள் சங்கம் சிவகங்கையில் ஏற்படுத்தப்பட்டது.

கி.பி. 1897 - சிகாகோவில் அனைத்துலக மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய சுவாமி விவேகானந்தருக்கு மானாமதுரையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கி.பி. 1897 - 11.05.1897-இல் கவியோகி மகரிஷி என அழைக்கப்படும் சுதானந்த பாரதி சிவகங்கையில் பிறந்தார்.

கி.பி. 1902 - மதுரையிலிருந்து மானாமதுரை வழியாக இரயில் பாதை பாம்பன் வரை நீட்டப்பட்டது.

கி.பி. 1909 - திருப்புத்தூரில் சிவகங்கை மன்னர் நன்கொடையாக வழங்கிய இடத்தில் ஸ்வீடிஷ் மிஷன் கண் மருத்துவமனை துவங்கப்பட்டது.

கி.பி. 1910 - இம்மாவட்டம் சீரமைக்கப்பட்டு, பழைய மதுரையையும், திருநெல்வேலி மாவட்டத்தையும் இணைத்து, ஒன்பது வட்டங்களைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டது.

கி.பி. 1916 - காரைக்குடி வட்டம், அரியக்குடியில் உள்ள பெருமாள் கோயில் நாட்டு கோட்டைச் செட்டியார்களால், ரூ. 5.50 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட்டது.

கி.பி. 1917 - இந்துமத அபிமான சங்கம் காரைக்குடியில் தோன்றியது.

கி.பி. 1921 - காந்தியடிகள் முதல் முறையாக செட்டிநாடு வந்தபோது, காரைக்குடியில்-இந்துமத அபிமான சங்கத்தினரால் நல்ல தமிழில் வரவேற்பு இதழ் ஒன்று அளித்து வரவேற்கப்பட்டது.

கி.பி. 1928 - ஊராட்சி ஒன்றியமாக விளங்கிய காரைக்குடி, செப்டம்பர் திங்களில் நகராட்சியாக மாற்றப்பட்டது.

கி.பி. 1930 - மானாமதுரை-திருச்சி இரயில் பாதை ஏற்பட்டது.

கி.பி. 1930 - இளையாங்குடி மதாறு புலவரால் தமிழில் "காட்டு பாவா காரணிகம்" இயற்றப்பட்டது.

கி.பி. 1937 - திருப்பத்தூர் வட்டம், வேலங்குடி கோயிலில் 18.06.1937-இல் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

கி.பி. 1943 - தேவகோட்டை இரயில் நிலையத்தருகில், காரைக்குடி மெய்யப்பச் செட்டியாரால் திரைப்படம் தயாரிப்பு நிலையம் தொடங்கப்பட்டது.

கி.பி. 1947 - காரைக்குடியில் அழகப்பா கல்லூரியும்; சிவகங்கையில் மன்னர் துரைசிங்கம் கல்லூரியும் துவங்கப் பட்டது.

கி.பி. 1948 - ஜூலை 25-இல் ஜவஹர்லால் நேருவால், காரைக்குடியில் மத்திய மின் இரசாயன ஆராய்ச்சி மையக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

கி.பி. 1949 - சிவகங்கை சமஸ்தான நிலப்பகுதிகளில் ஜமீன் ஒழிப்புச் சட்டம் வரப்பெற்றது.

கி.பி. 1951 - காரைக்குடியில் ரோட்டரி கிளப் 13.09.1951-இல் ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி. 1952 - சட்டமன்ற, நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் திருப்பத்தூர் இராஜா. சர். முத்தையா செட்டியார் போட்டியிட்டார்.

கி.பி. 1957 - நவம்பர் 16-இல் இராமநாதபுரம் வருவாய் மாவட்டம்; இராமநாதபுரம் கிழக்கு, மேற்கு என பிரிக்கப்பட்டு; சிவகங்கை கிழக்கு மாவட்டத்தின் தலைநகரமாக அறிவிக்கப்பட்டது.

கி.பி. 1958 - காரைக்குடி இந்து மத அபிமான சங்கம் திரு. ராய சொக்கனுக்கு தமிழ் கடல் என்ற பட்டத்தை அளித்தது.

கி.பி. 1958 - நவம்பர் 16-இல் பெண்களுக்கான இந்திரா காந்தி தொழில் பயிற்சி மையம் தேவகோட்டையில் தொடங்கப்பட்டது.

கி.பி. 1959 - ஏப்ரல் 1-இல் முதன்முதலாக மாநில விதைப் பண்ணை, தேவகோட்டை உடையாச்சியில் ஆரம்பிக்கப்பட்டது.

கி.பி. 1962 - பிப்ரவரி 12-இல் மாநில விதைப் பண்ணை காரைக்குடியில் தொடங்கப்பட்டது.

கி.பி. 1968 - இந்திய அரசின் மின்னியல் வேதியல் ஆராய்ச்சி மையம்; இந்திய பிரதமர் அவர்களால் காரைக்குடியில் தொடங்கப்பட்டது.

கி.பி. 1970 - இளையான்குடி கலைக் கல்லூரியில், சீறாப்புராண விழா நடைபெற்றது.

கி.பி. 1984 - இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து ஒரு பகுதி பிரிக்கப்பட்டு, சிவகங்கை மாவட்டம் என தனிப்பெருமை பெற்றது.

கி.பி. 1985 - சிவகங்கை மாவட்டம் தனி மாவட்டமாக 15.3.85 முதல் செயல்படத் தொடங்கியது.

## துணைநின்ற நூல்கள்


1. Hindu Paper, dated 15.7.1984
2. Thiru N.S. Ramasamy and Dr. R. Nagasamy - Ramanathapuram (An Archaeological Guide)
3. Thiru V. Rangacharyar M.A.L.T. - "Inscription of the Madras Presidency"
4. Henry Davison Lore - "Vestiges of Old Madras - Vol. III"
5. SHEREWELE James Welgh - "Military Reminicences Vol. I"
6. Dr. R. Ramasamy - "Ramanathapuram District Gazetteer"
7. Dr. R. Rajayyan - "Rise and fall of Poligars of Tamilnadu"
8. Thiru. K. Seshadri M.A.M.Litt. "The Sethu Paintings of Ramnad"
9. Dr. S. Kathirvel - "A History of Madras" - P. 35
10. Thiru T. Rajaram - "Ramnad Manual" - P. 224
11. Prof. K. Rajayyan - "History of Madurai"
12. Thiru K. Annasamy Iyer - "The Sivaganga Zamindary"
13. Gazetteer of India - Ramanathapuram District
14. Cald Well - History of Tinnevelly
15. October 20, 1802 Military Despatches to England - Vol. 33, P. 668
16. Thiru Natana. Kasinathan, M.A., "Pulankurichi Inscription - a relook"
17. Kalayar Koil Inscription A.R.E. 575 to 587 of 1902
18. Sanskrit and Tamil Inscription No. 21, P. 108, 109
19. Tiruppuvanam Copper Plates Indian Antiquary - Vol. 20 P. 288 and Epigraphia Indica - Vol. VI, P. 301
20. Kunakudi Inscription A.R.E. 24 to 44 of 1909
21. Piranmalai Inscription A.R.E. 138 to 154 of 1903
22. Tirupputtur Inscription A.R.E. 140 of 1908
23. S. Kannan, "Ancient Rock Paintings at Thirumalai"
24. தஞ்சை என்.எஸ். தாத்தாச்சாரியார் - "திருப்புல்லாணித் தல வரலாறு"
25. திரு. வெ. வேதாசலம் - "பாண்டிய நாட்டில் சமண இருக்கைகள் அமைவிடமும் வளர்ச்சியும்"
26. டாக்டர் மா. இராசமாணிக்கனார் - "வையை"
27. டாக்டர் இரா. நாகசாமி, திரு. நடன. காசிநாதன், திரு. கு. தாமோதரன், ச. ஹரிஹரன் - "கல்வெட்டியல்"
28. திரு. ஸ்ரீ. அரங்கசீனிவாசன் - "வானர வீர மதுரை புராணம்"

29. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை - "ஊரும் பேரும்"
30. திரு. வே. இராமநாதன் செட்டியார் - "திருக்கானப்பேர் தல வரலாறு"
31. திரு. ரா. பி. சேதுபிள்ளை, பி.ஏ.பி.எல்., "தமிழர் வீரம்"
32. சேது சமஸ்தானம் திரு. இரா. இராகவையங்கார் - "வஞ்சி மாநகர்"
33. வித்துவான் எஸ். கேசவராமசாமி - "மானமே பெரிதே"
34. திரு. எஸ். எம். கமால், திரு. நா. முகம்மது ஷெரீபு - "இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுக் குறிப்புகள்"
35. திரு. சா. கணேசன் - "பிள்ளையார்பட்டி தல வரலாறு"
36. திரு. பி. கே. நம்பியார், திரு. கே. சி. நாராயணகுரூப் - "சென்னை அரசின் மதுரை இராமநாதபுர மாவட்ட கோயில்கள்" - ஆங்கில நூல்
37. டாக்டர் இரா. நாகசாமி - ஓவியப் பாவை"
38. திருமதி. வள்ளி சொக்கலிங்கம் - "திருப்புத்தூர்"
39. திரு. வெ. வேதாசலம் - "ஊராய்வு" காலாண்டு கல்வெட்டு இதழ்-22 1989 மே திங்கள் - பக்கம் 47,48 - தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
40. திரு. வெ. வேதாசலம் - "திருப்பாச்சேத்தியில் திருமாலின் சிற்பங்கள்" நுண்கலை மலர் - 7, இதழ் - 2, 1988-89 பக்கம் - 14
41. திரு. செ. போசு - "தூங்கு தலைக்கல்" காலாண்டு கல்வெட்டு இதழ்-21, தொல்பொருள் ஆய்வுத்துறை
42. திரு. மா. சந்திரமூர்த்தி - "கானாடுகாத்தான் பெரிய கோயில்" காலாண்டு கல்வெட்டு இதழ் - 20, தொல்பொருள் ஆய்வத்துறை வெளியீடு
43. திரு. வெ. வேதாசலம் - "முற்காலப் பாண்டியர் சேரர் வரலாற்றில் புதிய ஒளி" கல்வெட்டு காலாண்டு இதழ் - 20 தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு
44. தினமலர் நாளிதழ் மதுரை பதிப்பு நாள் 21.3.1990 பக்கம் - 2
45. திரு. வே. வேதாசலம் - "களவழி நாடு"
46. திரு. மா. சந்திரமூர்த்தி - "பெருச்சி கோயில்"
47. இரா. ப. கருணானந்தன் - "இறையரின் குடிச் செப்பேடு"
48. திரு. சு. இராசகோபால் - "முகறிள்"
49. திரு. மா. சந்திரமூர்த்தி - பாண்டிநாட்டுக் குடவரைக் கோயில் - சிற்ப வடிவங்களில் முருகன்
50. திரு. மா. சந்திரமூர்த்தி - சுத்தமல்லி சமண சிற்பம், கல்வெட்டு இதழ்
51. திரு. வெ. வேதாசலம் - "குளக்கீழ்"
52. திரு. சொ. சாந்தலிங்கம், "சாலைக்கிராமத்தில் புதிய கல்வெட்டுகள்" கல்வெட்டு காலாண்டு இதழ் - 48
53. திரு. மீ. மனோகரன், மருது பாண்டியரின் புதிய செப்பேடு
54. தொல்லியல் செய்தி மடல், அக்டோபர் 1996

55. மீ. மனோகரன், சிவகங்கை - "மருது பாண்டியரின் மக்கள் நலப்பணிகள்"
56. K. Seshadri - "Sethupathies of Ramnad"
57. கட்டபொம்மு கதை - கும்மி பாடல்கள் - ஓலைச்சுவடியில் அச்சிடப் பட்டவை - ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.
58. ந. இராசையா - "விடுதலைப்போரில் தாழ்த்தப்பட்டோரின் பங்கு"
59. டாக்டர் S.M. கமால் - "முஸ்லீம்களும் தமிழகமும்"
60. ஜே. எம். சாலி - "இஸ்லாமியத் தமிழ்ச் சிறுக முன்னோடிகள்"
61. கேப்டன் என். ஏ. அமீர் அலி - "இளையான்குடி தமிழ் முஸ்லீம்களின் தனி வழக்கு"
62. மா. சந்திரமூர்த்தி, "இரணியூர்க் கோயில்"
63. கல்வெட்டு இதழ் - 24 - தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை காலாண்டு இதழ்
64. ஆ. பத்மாவதி, டாக்டர் இரா. நாகசாமி, - தொல்லியல் கருத்தரங்கு
65. கு. தாமோதரன், - "தமிழ்நாட்டுச் சத்திரங்கள்"
66. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று மையம் - வரலாற்று இதழ்
67. மா. சந்திரமூர்த்தி, - நேமம் சேவகப் பொருமாள் ஐயனார் - கல்வெட்டு காலாண்டு இதழ் - 29
68. வெ. வேதாசலம், - "பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள்"
69. தொல்லியல் செய்தி மடல் - 4, - தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை ஏப்ரல் 96 வெளியீடு
70. வெ. வேதாசலம், செ. போசு, - "கரிகால சோழீசுவரர் கோயில் கல்வெட்டுகள்"
71. ஆன்மிக பூமி - தினபூமி இணைப்பு நாள் 3.11.95
72. கல்வெட்டு இதழ் - 45, - தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை காலாண்டு இதழ், ஜனவரி 96 வெளியீடு
73. தொல்லியல் செய்தி மடல் - 10, அக்டோபர் 96 வெளியீடு
74. மு. பாலகிருஷ்ணன் (தலைமை ஆசிரியர் ஓய்வு) - "சிவகங்கை மாவட்டம் தொகுப்பு"
75. கு. தாமோதரன், "தொல்லியல் நோக்கில் தமிழகம்"
76. மு. நடனன், மு. பாலகிருஷ்ணன் - "நவகிரகங்களின் சுழற்சியை மாற்றியமைத்த சித்தர் வாழ்ந்த இடைக்காட்டூர்"



நரசிம்மன், சௌமிய நாராயண பெருமாள் கோயில்,
திருக்கோட்டியூர்